ISSN-0971-8362

# திட்டம்

ஏப்ரல் – 2023 வளர்ச்சிக்கான மாத இதழ்

## இந்தியாவில் தொடக்கத் தொழில்கள்




**இளைஞர்களுக்கான புத்தொழில் வாய்ப்புகள்**
அனுராக்சிங் தாக்கூர்

**தொடக்கத்தொழில் சூழலுக்கான அடித்தளம்**
அனுராக் ஜெயின்

**புத்தொழில் சூழலுக்குப் புதிய விடியல்**
சிந்தன் வைஷ்ணவ்

**சுதந்திரப் போராளி காகாஜி இராமசாமி**
ஜெ.சுமதி

# வலைதளம்சார் அரசுப் பொதுச்சந்தை

Government e-Marketplace (GeM) எனப்படும் அரசின் வலைதளம்சார் பொதுச்சந்தை ஒன்றை பொது கொள்முதலுக்காக இந்திய அரசின் வணிகம் மற்றும் தொழில் அமைச்சகம் 2016ஆம் ஆண்டு அறிவித்துள்ளது. வாங்குபவர்களும் விற்பவர்களும் தங்களுடைய கொள்முதல் நடவடிக்கைகளை சரியாகவும் போட்டிமிக்க வகையிலும் மேற்கொள்ள எல்லோரையும் உள்ளடக்கிய திறமையான வெளிப்படைத் தன்மை கொண்ட பொதுத்தளத்தை அமைப்பது அதன் நோக்கமாகும். தொழில்நுட்ப எண்மச் செயல்முறைகள் எல்லா பங்குதாரர்களையும் எண்மம் மூலம் ஒருங்கிணைத்தல் மற்றும் கூராய்வு ஆகியவற்றைப் பயன்படுத்தி பொதுக் கொள்முதல் சுற்றுசூழலில், அரசு வலைதளம்சார் பொதுச் சந்தை ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. வணிகச் செயல்பாடுகளில் தெளிவாகவும் தீவிரமாகவும் சிந்தித்து எண்ம தளங்களை அமைப்பதன் மூலம் பொதுவாக நாட்டிற்கும் இதுவரை சரியாக சேவை கிடைக்காத மக்களுக்கும் நிலைத்த மாற்றத்தைக் கொண்டு வந்திருப்பதற்கு, வலைதளம்சார் அரசுப் பொதுச் சந்தை ஒரு நல்ல உதாரணமாகும்.

வலைதளம் சார் அரசுப் பொதுச் சந்தையில் நேரடியாக வாங்குவது, முதற்கட்ட கொள்முதல், விலை பேசுவது, எதிர்மறை ஏலம், எதிர்மறை ஏலத்திற்கு பிறகு விலை பேசுவது ஆகிய பலவகையான கொள்முதல் வழிகளை உள்ளடக்கியுள்ளது. வலைதளம்சார் அரசுப் பொதுச்சந்தை நம்பிக்கை அடிப்படையில் செயல்படுகிறது. வாங்குவோர் விற்போர் நேரடித் தொடர்பு இல்லாமலும், காகிதப் பயன்பாடு மற்றும் பணப் புழக்கம் இல்லாமலும் செயல்படுகிறது. வாங்குவோர் விற்போர் மற்றும் பிற பங்குதாரர்களின் அடையாள உறுதி அந்தந்தப் பங்குதாரர்களின் தகவல் தொகுப்பிலிருந்து மின்மயமாக உறுதி செய்யப்படுகிறது. இந்தப் பொதுச்சந்தையில் வியாபாரம் சார்ந்த அனைத்துச் செயல்பாடுகளும் உடனுக்குடன் தானியக்கத்தில் பதிவு செய்யப்படுவதுடன், அனைத்து நிகழ்வுகளும் மின்மயமாக்கப்பட்டு, வாங்குவோருக்கும் விற்போருக்குமான சிறந்த சுற்றுச்சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

வலைதளம்சார் அரசுப் பொதுச் சந்தையின் அணுகுமுறை வெளிப்படைத்தன்மை, திறமையான செயல்பாடு மற்றும் எல்லோரையும் உள்ளடக்கிய சேவைகள் என்பதை அடிப்படை கொள்கையாகக் கொண்டதாகும்.

.. தொடர்ச்சி 55ஆம் பக்கம்

// திட்டம்

மாத இதழ்

மலர் 54

இதழ் 04

ஏப்ரல் 2023

சைத்ர – வைசாக 1945

ஸ்ரீ சுபகிருது – சோபகிருது வருடம் பங்குனி – சித்திரை

முதன்மை ஆசிரியர்

**மனோக்யா**

முதுநிலை ஆசிரியர்

**சஞ்சய் கோஷ்**

கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**

**ஆசிரியர்** (Editor)

**திட்டம்**

**வெளியீட்டுப்பிரிவு**

A Wing இராஜாஜி பவன்

பெசன்ட் நகர், சென்னை –600 090

தொலைபேசி : 044 24465382, 044 24917673.

மின்னஞ்சல்: editorthittam@gmail.com

bmsechennai@gmail.com

வலைதளம்சார் அரசுப் பொதுச்சந்தை 02 & 55

தலையங்கம் 04

இளைஞர்களுக்கான புத்தொழில் வாய்ப்புகள் – அனுராக்சிங் தாக்கூர் 05

புத்தொழில் நிறுவனங்கள் அடிப்படைத் தகவல்கள் 12

இந்தியத் தொழில்களுக்கு அமிர்த காலத்தில் வாய்ப்புகள் – ஃபைஸ் அஸ்கரி 14

கடைகோடி இடத்தையும் சென்றடைதல் – ரெபண்ட் ஜுயால் 23

சுதந்திர போராளி காகாஜி இராமசாமி – ஜெ.சுமதி 27

இந்தியாவின் வளர்ச்சிக் கதையைப் புரட்சிகரமானதாக்குதல் 32

தொழில்காப்பகங்கள் வளர்ச்சியை சாத்தியமாக்குபவை 35

தொடக்கத்தொழில் சுழல்சார் அமைப்பிற்கான அடித்தளம் – அனுராக் ஜெயின் 40

உலகப் புத்தொழில் சுழல் அமைப்புக்குப் புதிய விடியல் – சிந்தன் வைஷ்ணவ், சுமையா யூசுப் 44

புத்தாக்கல் தொழில்முனைவுகள் சவால்களும் வாய்ப்புகளும் – ஜக்தீப் சக்சேனா 49

Log on to **http://publicationsdivision.nic.in/**
in collaboration with **bharatkosh.gov.in**

# புதிய இந்தியாவிற்கான தொடக்கநிலைத் தொழில்கள்

நமது கனவுகளின் ஏதோ ஒரு இடத்தில் இருந்துதான் வாழ்க்கை, தொழில்களுக்கான பயணங்களை நாம் தொடங்குகிறோம். தீவிர உணர்ச்சியைப் பின்தொடர்தல், தனிவிதமான ஒன்றைக் கருத்துருவாக்கம் செய்தல், அதற்கு வடிவம் கொடுத்தல், அனைத்து சவால்களையும் எதிர்கொள்ளுதல், நாம் உண்மையாக நம்புகின்ற ஒன்றை நிஜமாக்குதல் என்பவை இந்த முயற்சியாகும். நம்மைச் சுற்றி ஆக்கப்பூர்வமான மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய வகையில் தற்போது நடைமுறையில் உள்ள வழிகள் மற்றும் வழிமுறைகளில் தலைகீழ் மாற்றத்தை உருவாக்கக் கூடிய ஆற்றல் கொண்ட தீர்வுகள், பொருள்கள் அல்லது சேவைகள் என பிரத்யேகமான ஒன்றை உருவாக்குவதாக இது உள்ளது.

இந்திய அரசின் ஸ்டார்ட்அப் இந்தியா என்ற முன்னெடுப்பு நடவடிக்கைக்குப் பின்னுள்ள சிந்தனைக் கீற்று இதுவே ஆகும். ஸ்டார்ட்அப் கலாச்சாரத்தை ஊக்குவித்தல், இந்தியாவில் புத்தாக்கத்திற்கும் தொழில்முனைதலுக்குமாக அனைவரையும் உள்ளடக்கிய வலுவான சூழல்சார் அமைப்பைக் கட்டமைத்தல் ஆகியன இதன் நோக்கம் ஆகும். இதுவே நீடித்த, நிலையான பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக உள்ள சக்தியுமாகும். மிகப்பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய ஆற்றல் கொண்டதாகவும் இது உள்ளது. புத்தாக்கக் கண்டுபிடிப்புகள், வடிவமைப்புகள் மூலமாக வளர்ச்சி பெறுவதற்கான அதிகாரத்தை ஸ்டார்ட்அப்புகள் பெறுவதற்கு உதவ வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்த முன்னெடுப்பு நடவடிக்கையை அரசு தொடங்கியுள்ளது. வேலை தேடுபவர்களுக்குப் பதிலாக வேலை வழங்குபவர்கள் நிறைந்த ஒரு நாடாக இந்தியாவை உருமாற்றுதல், ஸ்டார்ட் அப்புக்கான சூழல்சார் அமைப்பை விரிவான முறையில் கட்டமைத்தல், தொழில்முனைவோர்களுக்கு ஆதரவாகச் செயல்படுதல் ஆகிய குறிக்கோள்களுடன் பல்வேறு உள்திட்டங்களைக் கொண்டதாக இந்த ஸ்டார்ட்அப் இந்தியா முன்னெடுப்பு நடவடிக்கை 2016ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த முன்னெடுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலும் ஸ்டார்ட்அப் சூழல்சார் அமைப்பின் அனைத்து அம்சங்களையும் எதிர்கொள்ளும் விதமாகவும் இந்திய அரசானது ஒரு செயலாக்கத் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த செயலாக்கத் திட்டத்துடன் ஸ்டார்ட்அப் இயக்கத்தை நாட்டில் விரைவுபடுத்த முடியும் என்று அரசு நம்புகிறது. தொழில்நுட்பப் பிரிவில் இருந்து வேளாண்மை, உற்பத்தி, சமூகப் பிரிவு, சுகாதாரப் பராமரிப்பு, கல்வி முதலானவை உள்ளிட்ட பலதரப்பட்ட பிரிவுகளில் ஸ்டார்ட் அப்புகளைத் தொடங்க முடியும். மேலும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் முதலாம் அடுக்கு நகரங்களில் இருந்து, புறநகர்களையும் ஊரகப் பகுதிகளையும் உள்ளடக்கிய இரண்டாம் அடுக்கு மூன்றாம் அடுக்கு நகரங்களுக்கும் ஸ்டார்ட்அப் விரிவுபடுத்தப்படும். ஸ்டார்ட்அப் முன்னெடுப்பு நடவடிக்கையின் கீழ் ஸ்டார்ட் அப்புகளுக்கு உதவக்கூடிய மூன்று தூண்களாவன:

1. எளிமைப்படுத்துதல், சொத்து: ஒழுங்குமுறை விதிகளை எளிதாக ஏற்று நடத்தல், வெற்றிபெறாத ஸ்டார்ட் அப்புகள் எளிதாக வெளியேறுவதற்கான வழிமுறைகள், சட்ட ஆதரவு, காப்புரிமை விண்ணப்பங்களை விரைவாகத் தடம் அறிதல், தகவல் சீரின்மையைக் குறைப்பதற்காக ஒரு வலைத்தளம்

2. நிதி ஆதரவு, ஊக்கத்தொகைகள், வருமானவரி, மூலதன இலாப வரி ஆகியவற்றில் தகுதி வாய்ந்த ஸ்டார்ட் அப்புகளுக்கு விலக்கு அளித்தல், ஸ்டார்ட்அப் சூழல்சார் அமைப்பிற்கு மேலும் மேலும் மூலதனத்தைச் சேர்ப்பதற்கான நிதியங்களின் நிதியம் மற்றும் கடன் உத்திரவாதத் திட்டம்

3. தொழிற்சாலை கல்விப்புலம் இணைந்து பங்கேற்றல், இன்குபேஷன், எண்ணற்ற இன்குபேட்டர்கள் மற்றும் புத்தாக்க ஆய்வகங்களை உருவாக்குதல், நிகழ்ச்சிகள், போட்டிகள், மானியங்கள்

இந்த மாதத்தின் திட்டம் இதழானது நம்மைச் சுற்றியுள்ள வாழ்வில் ஸ்டார்ட்அப் சூழல்சார் அமைப்பு ஏற்படுத்துகின்ற சக்தி, தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. ஸ்டார்ட்அப்புகளுக்கான பல்வேறு தொழில்பிரிவுகள், தொழிற்களங்களில் உள்ள வாய்ப்புகள் குறித்தும் இந்த இதழ் விவாதிக்கிறது. ஸ்டார்ட் அப்புகளை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகள், திட்டங்கள் குறித்தும், சொந்தமாக ஒரு தொழிலைத் தொடங்க இளைஞர்களை ஊக்குவித்தல் ஆகியன குறித்தும் இந்த இதழ் பேசுகின்றது.

இத்தகைய ஸ்டார்ட்அப்புகள் பொது உலகின் பிரச்சினைகளுக்குத் தொழில்நுட்ப அடிப்படையிலான புத்தாக்கமான தீர்வுகளையும் தருகின்றது. வழக்கமான முறையில் இருந்து மாறுபட்டு சிந்திக்கவும், நடைமுறையில் உள்ள அமைப்புகளையும், வழிமுறைகளையும் கேள்விக்குள்ளாக்கவுமான ஆற்றல் இளைஞர்களுக்கு உள்ளது. ஸ்டார்ட் அப்புகள் கற்பனைக்கு சிறகுகளைத் தருகின்றன. நமது இளைஞர்களுக்கு ஆற்றலைத் தருகின்றன. அதனால், புதிய இந்தியாவின் வளர்ச்சிக் கதையில் அவர்களின் பங்கேற்பை உறுதி செய்வதற்கான உந்துதலைத் தருகின்றன.

– ஆசிரியர்

# புத்தொழில் சூழல் அமைப்பில் இளைஞர்களுக்கான வாய்ப்புகள்

– அனுராக்சிங் தாக்கூர்

"நமது புத்தொழில் நிறுவனங்கள் விதிகளை மாற்றியமைத்து வருகின்றன. புத்தொழில் நிறுவனங்கள் தான் புதிய இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழப்போகின்றன என்று நான் உறுதியாக நம்புகிறேன்"

திரு.நரேந்திர மோடி, இந்தியப் பிரதமர்



இந்தியாவில் புத்தொழில் நிறுவனங்களின் கதை என்பது அவற்றின் எண்ணிக்கையைப் பற்றியது மட்டும் அல்ல. புதிய இந்தியாவில் புதிய வாய்ப்புகளை அணுகுவதற்கான திறனை புத்தொழில் நிறுவனங்கள் எவ்வாறு வழங்குகின்றன என்பது தான் புத்தொழில் நிறுவனங்கள் பற்றிய கதை ஆகும். புதிய இந்தியாவில் சிறப்பான பொருளாதாரம் தான் அரசியலின் மையமாகத் திகழும். அதுதான் நமக்கு அதிகம் தேவைப்படும் மாற்றங்களை ஏற்படுத்தும். மனித நாகரிகத்தின் மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான திறன், அறிவு, வலிமை ஆகியவை இந்திய இளைஞர்களுக்கு உண்டு என்பதை ஒட்டுமொத்த உலகமும் இன்று அங்கீகரித்திருக்கிறது. உலகின் எந்தப் பகுதியில் இருந்தும் மூலதனத்திற்கான முதலீட்டையும் மிகச் சிறந்த புத்தாக்க நடைமுறைகளையும் இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்கு இந்திய அரசால் முடியும்.

உலகின் இளமையான, அதே நேரத்தில் மிகப் பெரிய ஜனநாயக நாடாகப் போற்றப்படும் சுதந்திர இந்தியாவுக்கு இப்போது 75 வயது ஆகிறது. இந்தியா அதன் 100ஆவது விடுதலை நாளை 2047ஆம் ஆண்டில் கொண்டாடும். இன்றிலிருந்து இந்திய விடுதலையின் 100வது ஆண்டு வரையிலான காலத்தை அமிர்த காலம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். 2047ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவுற்குத் தொடங்கவுள்ள பொற்காலத்திற்கு இந்த அமிர்த காலம் தான் நுழைவு வாயிலாக இருக்கும். அதற்கு முன்பாகவே இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு இந்தியப் பிரதமர் உறுதி பூண்டிருக்கிறார். இன்றைய இளைஞர்கள், இந்தியாவை அமிர்தப் பயணத்திற்கு அழைத்துச் செல்லும் தேரை ஓட்டும் அர்ஜுனர்கள் ஆவர். அந்தப் பயணம் இந்தியாவை உலகத்தின் தலைவராக்கும் என்பது உறுதி. அந்தப் பயணம் தான், 21ஆம் நூற்றாண்டை இந்தியாவின் நூற்றாண்டாக மாற்றும் பயணமாகும்.

இன்றைய சூழலில் உலக நாடுகள் வயதானவர்களைக் கொண்ட நாடாக மிக வேகமாக மாறி வருகின்றன. ஆனால், இந்தியாவோ இன்னும் இளைஞர்களைக் கொண்ட நாடாகவே திகழ்கிறது. 2070ஆம் ஆண்டு வரை இதே நிலையே நீடிக்கும். இந்தியாவில் உள்ள 140 கோடி மனித வளங்களில் சுமார் 100 கோடி மனித வளங்கள் 35 வயதுக்கும் குறைவானவர்கள் ஆவர். சராசரி இந்தியனின் வயது இன்றைய நிலையில் 29ஆக உள்ளது. 2047ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் பணிபுரியும் நிலையில் இருப்பவர்களில், 21 விழுக்காட்டினர் இந்தியர்களாக இருப்பார்கள். இந்தியா விடுதலை அடைந்த நாளில் இருந்து

PM GatiShakti

இந்தியாவின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருப்பது இந்திய மனித வளம் தான் என்று தவறாக நம்பப்பட்டு வந்தது. ஆனால், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட உறுதியான அதிக கவனம் செலுத்தக்கூடிய விரிவான நடவடிக்கைகளின் காரணமாக, அந்தப் பார்வை கடந்த 90 மாதங்களாக மாற்றப்பட்டு இருக்கிறது. அதன் பயனாக, இன்றைய நிலையில், மனித நாகரிகத்தின் மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான திறன், அறிவு, வலிமை ஆகியவை இந்திய இளைஞர்களுக்கு உண்டு என்பதை ஒட்டுமொத்த உலகமும் இன்று அங்கீகரித்திருக்கிறது.

அதிக எண்ணிக்கையிலான இளைஞர்கள் என்ற மக்கள் தொகையியலின் இலாபப் பங்கை முழுமையாக அறுவடை செய்வதை உறுதி செய்யும் நோக்குடன், இந்தியா அதற்கான கொள்கையைச் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது. இந்திய இளைஞர்களை உலகின் மிகச் சிறந்த இளைஞர்களாக மாற்றுவதற்காக இந்திய அரசு மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளில் புத்தொழில் இந்தியா (ஸ்டார்ட்அப் இந்தியா) திட்டம் தான் உறுதியான, தனித்துவமான நடவடிக்கையாகும். இன்றைய இந்திய இளைஞர்களிடம் புத்தொழில் நிறுவனம், தொழில் முனைவு போன்ற சொற்கள் மிகவும் பிரபலமாகத் திகழ்கின்றன என்றால், அதற்கான பெருமை புத்தொழில் இந்தியா திட்டத்தையே சாரும். இந்தியாவின் நீடித்தப் பொருளாதார வளர்ச்சி மிக அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய இலக்குகளை அடைய முன்வரிசையில் நின்று நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று புத்தாக்கம் செய்வோர், தொழில்முனைவோர், சிந்தனையாளர்கள் ஆகியோருக்கு விடுக்கப்பட்ட அறைகூவலாக 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் நாள் தொடங்கப்பட்ட புத்தொழில் இந்தியா திட்டம் இன்று, இந்தியாவின் விரைவான, எப்போதும் புத்தாக்கங்களை நிகழ்த்தக்கூடிய, வலிமையான தொழில்முனைவுச் சூழல் அமைப்புக் கொண்ட இந்தியாவின் பயணமாக உலகம் முழுவதும் அறியப்படுகிறது.

இந்தியாவில் புத்தொழில் நிறுவனங்களின் கதை என்பது அவற்றின் எண்ணிக்கையை மட்டும் பற்றியது அல்ல. புதிய இந்தியாவில் புதிய வாய்ப்புகளை அணுகுவதற்கான திறனை புத்தொழில் நிறுவனங்கள் எவ்வாறு வழங்குகின்றன என்பது தான் புத்தொழில் நிறுவனங்கள் பற்றிய கதை ஆகும். புதிய இந்தியாவில் சிறப்பான பொருளாதாரம் தான் அரசியலின் மையமாகத் திகழும். நமக்கு அதிகம் தேவைப்படும் மாற்றத்தையும் அதுதான் ஏற்படுத்தும்.

**இந்தியாவில் புத்தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துதல்**

இந்தியாவில் புத்தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வகையான கொள்கை சார்ந்த, அமைப்பு சார்ந்த, ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பு சார்ந்த ஆதரவுகளையும் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான இந்திய அரசு வழங்கி வருகிறது.

**புதிய இந்தியா: இளைஞர்களுக்கான வாய்ப்புகள்**

இந்தியா இன்று இளைஞர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளின் விரிவு என்பது அளவின் அடிப்படையில் பார்த்தாலும், உயரத்தின் அடிப்படையில் பார்த்தாலும் வரலாறு காணாத ஒன்றாகும். உலகின் எந்தப் பகுதியில் இருந்தும் மூலதனத்திற்கான முதலீட்டையும் மிகச் சிறந்த புத்தாக்க நடைமுறைகளையும் இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கு இந்திய அரசால் முடியும். அவற்றை இந்தியாவுக்குக் கொண்டு வந்த பிறகு அர்ப்பணிக்கப்பட்டக் கொள்கை நடவடிக்கையின் வாயிலாக, அவற்றை மிக வேகமாக வணிகமயமாக்குவதற்கு மத்திய அரசு உதவுகிறது. இந்திய இளம் தொழில் முனைவோருக்கு, உலகின் மிகச்சிறந்த அனைத்து அம்சங்களையும் வழங்குவதற்கு நாங்கள் உறுதி பூண்டிருக்கிறோம்.

இந்தியா விடுதலை அடைந்த பிறகு பெறப்பட்ட 95 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் அளவுக்கான நேரடி அந்நிய முதலீட்டில் 53,200 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கான நேரடி முதலீடு கடந்த எட்டு ஆண்டுகளில் பெறப்பட்டவையாகும். இந்தியாவின் 31 மாநிலங்கள்

மற்றும் யூனியன் பிரதேசங்களில் 61 துறைகளில் இந்த முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதும், இம்முதலீடு 161 நாடுகளிலிருந்து பெறப்பட்டிருக்கிறது என்பதும், அதன் சிறப்புகளில் குறிப்பிடத்தக்கவையாகும். டிஜிட்டல் இந்தியா, அனைத்துக் கிராமங்களுக்கும் அகண்ட அலைவரிசை இணைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலமாக நாடு முழுவதும், குறிப்பாக இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளிலும் புத்தொழில் சூழல் அமைப்பின் வளர்ச்சிக்கு வழிகோலப்பட்டிருக்கிறது. புதிய இந்தியாவின் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு இதுதான் சான்று என்பது மட்டுமின்றி, இந்திய வளர்ச்சியின் புதிய விசைப் பொறி ஊரக இந்தியாவையும் ஓரளவு நகர்ப்புறமான பகுதிகளையும் சார்ந்திருக்கிறது என்பதையும் இது எதிரொலிக்கிறது.

சந்தைத் தேவைகளைப் புத்தொழில் நிறுவனங்கள் நிறைவேற்றுகின்றன

போஸ்டன் கன்சல்டிங் குரூப் என்ற நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் 2000ஆவது ஆண்டுக்குப் பிறகு பிறந்த ஒவ்வொரு இந்தியனும் அவர்களின் வாழ்நாளில் 2,40,000 அமெரிக்க டாலரை செலவழிப்பதாகத் தெரியவந்துள்ளது. இதை 160 கோடியால் பெருக்கினால் அதன் மதிப்பு 384 இலட்சம் கோடி அமெரிக்க டாலராக இருக்கும். 2047ஆம் ஆண்டில் இந்தியச் சந்தை மதிப்பின் அளவும், தேவைகளும் இந்த அளவுக்குப் பெரியதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிலையில், உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 11 விழுக்காட்டினர் இந்திய கிராமங்களில் வாழ்கின்றனர். ஒவ்வொரு நிமிடமும் இந்திய கிராமங்களில் இருந்து சுமார் 30 பேர் நகர்ப்புறங்களை நோக்கி இடம் பெயர்கின்றனர். 2047ஆம் ஆண்டிற்குள் உலகின் நடுத்தர மக்களில் 20 விழுக்காட்டினர் இந்தியாவில் இருப்பார்கள். அதாவது, அடுத்த 25 ஆண்டுகளில் வீட்டுவசதி, உள்கட்டமைப்பு, உணவு, கல்வி, குடிநீர், சுகாதாரம், தொழில்முனைவு, சமூகப்பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் புதிதாக செய்துதர வேண்டிய சூழலில் முற்றிலும் புதிய நகர்ப்புற மக்கள் தொகை உருவாகும். இவ்வளவு அதிகத் தேவைகள் உள்ள சூழலில் அதற்கான சந்தையை தங்களுக்கு சாதகமாக மாற்றிக்கொள்ளவும், அதற்கான புத்தாக்கங்களைப் படைக்கவும் இளம் தொழில்முனைவோருக்கு எண்ணற்ற துறைகள் உருவாகும். இந்தியாவில் அதிகரித்து வரும் சந்தைத் தேவைகளை நிரப்புவதற்கான வாய்ப்புகள் புத்தொழில் நிறுவனங்களுக்குக் கிடைக்கும்.

**அறிவு சார்ந்த டிஜிட்டல் பொருளாதாரத்தின் வாய்ப்புகள்**

இந்திய நாடாளுமன்றத்தில் 2023–24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள், இந்தியாவை அறிவு சார்ந்த டிஜிட்டல் பொருளாதாரமாக மாற்றுவது குறித்துக் குறிப்பிட்டிருந்தார். அதன் பொருள், ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் அறிவியல் பூர்வமான டிஜிட்டல் மயமாக்குவதாகும். அரசின் நடைமுறைகள் அனைத்தையும் குடிமக்கள் சார்ந்ததாக மாற்றும் நோக்குடன், அவற்றை முழுமையாக டிஜிட்டல்மயமாக்கும் நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன்படி, இந்திய உறவுகளுக்காக டிஜிட்டல் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட உள்ளது. மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஆய்வகங்களை தனியார் மருத்துவக் கல்லூரிகளும், தனியார் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களும்



BHARATMALA
ROAD TO PROSPERITY

பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மருந்து உற்பத்தித்துறையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்காக சிறப்புத் தகுதி மையம் (centre of excellence) மூலம் புதிய திட்டம் தொடங்கப்படும். மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில் புரட்சிகரமான மாற்றங்கள் செய்யப்படும். தேசிய டிஜிட்டல் நூலகம் ஒன்றும் உருவாக்கப்படும்.

பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயற்கை நுண்ணறிவுத் திறன் குறியீடுகளை எழுதுதல், முப்பரிமாண அச்சுமுறை, இணையதள அம்சங்கள் ஆகியவற்றில் திறன் மற்றும் பயிற்சிகள் அளிக்கப்படும். 30 சர்வதேசத் திறன் இந்தியா மையங்கள், மூன்று செயற்கை நுண்ணறிவுத் திறன் சிறப்புத் தகுதி மையங்கள், ஐந்தாம் தலைமுறை இணையச் சேவை பயன்பாடுகளை மேம்படுத்துவதற்கான 100 மையங்கள் ஆகியவை இந்தியாவில் தொடங்கப்படும். ஒவ்வொருவருக்கும் சமவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் 47 இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சிக் கால ஊக்கத்தொகை வழங்கவும் இந்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

இந்திய டிஜிட்டல் மயமாக்கத்தின் மூலம் கிடைக்கும் தகவல்கள் மற்றவர்களால் எளிதாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் தேசியத் தரவு நிர்வாகக் கொள்கையை மத்திய அரசு விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது. இதன் மூலம், நாட்டின் அனைத்துத் தகவல்களும் இந்திய இளைஞர்களுக்குக் கிடைக்கும். அவற்றைக் கொண்டு, புதிய தொழில்நுட்பங்களையும், புத்தாக்கங்களையும் அவர்கள் படைக்கமுடியும். கடந்த ஆண்டு உலக அளவில் மேற்கொள்ளப்பட்ட டிஜிட்டல் பணப் பரிமாற்றங்களில் 41 விழுக்காடு பரிமாற்றங்கள் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. உலக வரலாற்றின் முதன் முறையாக டிஜிட்டல்மயமாக்கம் இவ்வளவு வேகமாகவும், அதிகமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருவதால், சுதந்திர உலக வரலாற்றில் இந்தியா வரலாறு காணாத வகையிலான மாற்றங்களைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது.

தொழில்நுட்பத்துறையில் இந்தியா ஏற்கனவே பல சாதனைகளைப் படைத்திருக்கிறது. நாஸ்காம் அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி, 2022ஆம் ஆண்டின் இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துறை 15.5 விழுக்காடு ஆண்டு வளர்ச்சியை அடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, தொழில்நுட்பத்துறையின் ஆண்டு வருமானம் 20 ஆயிரம் கோடி அமெரிக்க டாலரைத் தாண்டி விட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவுத் திறன், பிளாக் செயின் (Block chain), எக்ஸாஸ் (XaaS), பிளாட்பார்மைசேஷன் (Plat-formisation), மேகக்கணினி, சைபர் செக்யூரிட்டி, ஹைப்பர் ஸ்கேல், கம்ப்யூட்டிங், இன்டர்நெட் ஆப் திங்ஸ், இயந்திர வழிக் கற்றல் போன்ற தகவல் தொழில்நுட்பத்தின் துணைத் துறைகளில் தேவைகளும் புதிய மென்பொருள்களை உருவாக்கவும், இதுவரை இல்லாத வளர்ச்சியை அடைந்து வரும் நிலையில், அதற்கான விநியோகச் சங்கிலியை புத்தொழில் நிறுவனங்களால் பயன்படுத்திக்கொள்ள முடியும். தற்சார்பு இந்தியா என்ற தத்துவத்தின் உதவியுடன் இந்தியாவில் உருவாக்கப்பட்ட வணிகர்கள், உலகின் பெரிய நிறுவனங்களாக உருவெடுப்பதற்கும், எதிர்காலத் தொழில்நுட்பங்களை இந்தியப் புத்தாக்க வல்லுநர்களை வழிநடத்திச் செல்பவர்களாக மாற்றுவதற்கும் தேவையான உதவிகளைச் செய்வதற்கு இந்திய அரசு தயாராக உள்ளது.

புத்தொழில் இந்தியா திட்டத்தின் கீழ் கிடைக்கும் பயன்கள் குறித்த விரிவான தகவல்களைப் பெறவதற்கும், அவற்றை எவ்வாறு பெறுவது? என்பதை அறிந்து கொள்வதற்காகவும் வாசகர்கள் புத்தொழில் இந்தியா திட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.startupindia.gov.in-ல் உள்ள ஸ்டார்ட்அப் இந்தியா கிட்டை பார்க்கவும்.

அதில் சந்தையை அணுகுவதற்கான ஆதரவு, ஒழுங்குமுறை ஆதரவு, பொது கொள்முதல் ஆதரவு, நிதி ஆதரவு, வரிப் பயன்கள், காப்புரிமை ஆதரவு போன்ற ஊக்குவிப்புகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் இடம்பெற்றுள்ளன. 'ஸ்டார்ட்அப் இந்தியா' ஆன்லைன் தளம் குறித்த தகவல்களும் அதில் இடம்பெற்றுள்ளன. இந்தத் தளத்தில் அறிவுசார் தொகுதிகள், அரசுத் திட்டம் குறித்த விவரங்கள், யோசனை வங்கி, வழிகாட்டுவோர், முதலீட்டாளர்கள், ஆய்வு மையம், விரைவுபடுத்துவோர், பெருவணிக நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், முன்னேறத் துடிக்கும் தொழில்முனைவோர் ஆகியோரின் விவரங்கள் அடங்கிய தொகுப்பு மட்டுமின்றி, புத்தொழில் நிறுவனங்கள் தொடர்பாக நடைமுறையில் உள்ள திட்டங்கள் குறித்த விவரங்களும் இடம்பெற்றுள்ளன.


**தேசியத் தளவாடக் கொள்கை:** புத்தொழில் நிறுவனங்களுக்கான வரமாகும். எளிதாக வணிகம் செய்யும் சூழலை ஊக்குவிக்கவும், வசதியாக வாழ்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கவும் வசதியாக தேசியத் தளவாடக் கொள்கை கடந்த 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது. தளவாடச் செலவுகளை தற்போதுள்ள 13 14 விழுக்காடு என்ற அளவில் இருந்து உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ள அளவுக்குக் குறைக்க வேண்டும் என்பதுதான் இந்தக் கொள்கையின் நோக்கமாகும். இதன் மூலம், உள்நாட்டுச் சந்தையிலும், பன்னாட்டுச் சந்தையிலும் இந்தியப் பொருள்களின் போட்டித்தன்மை அதிகரிக்கும். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியும். அதுமட்டுமின்றி, உற்பத்திச் செலவு குறையும் பட்சத்தில், அது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் செயல் திறனை அதிகரிக்கச் செய்யும். அது மதிப்புக் கூட்டுதலை அதிகரிக்கச் செய்யும்.


இந்திய அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட கதி சக்தி, சாகர் மாலா, பாரத் மாலா போன்ற போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்களுடன் தேசியத் தளவாடக் கொள்கையின் அம்சங்களும் இணையும் போது, புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான தேசியத் தளவாடக் கொள்கையின் திறன் மேலும் அதிகரிக்கும்.

வீட்டுவசதி, உள்கட்டமைப்பு, பொழுதுபோக்கு, உணவு, கல்வி, மருத்துவம், சமூகப் பாதுகாப்பு ஆகிய துறைகளுக்கான வாய்ப்புகள் மட்டுமின்றி, எரிசக்தி, விண்வெளி ஆராய்ச்சி மற்றும் அறிவியல், மென்சக்தி, சுற்றுலா, வேளாண்மை, பாதுகாப்பு போன்ற துறைகளுக்கான வாய்ப்புகளும் இதனால் அதிகரிக்கும். இதன் மூலம், இந்தியப் புத்தொழில் நிறுவனங்களை உலகின் மிகச் சிறந்த நிறுவனங்களாக மாற்ற இயலும்.

### எரிசக்தித் துறையில் வாய்ப்புகள்

இன்றைய சூழலில், இந்தியாவின் செலவுகளில் பெரும்பகுதி அதன் எரிசக்தித் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தான் செலவிடப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு எரிசக்தித் துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. நீடித்த வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்களை 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த மத்திய அரசு, எரிசக்தி மாற்றத்திற்காக மட்டும் 35 ஆயிரம் கோடி






ரூபாயை ஒதுக்கியுள்ளது. பசுமை ஹைட்ரஜன் இயக்கத்திற்காக மட்டும் 20 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சூரிய ஒளி மின்சாரத்தை உற்பத்தி செய்வதில், உலக அளவில் இந்தியா நான்காவது இடம் வகிக்கிறது. அண்மையில் ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதியில் மிகப்பெரிய அளவில் லித்தியம் வேதிப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது புதிய வாய்ப்புகளை உருவாக்கக் கூடும். உறுதி செய்யப்பட்ட வெற்றிக்கு இந்தியாவின் எரிசக்தித்துறை உத்தரவாதம் வழங்குகிறது. 2047ஆம் ஆண்டிற்குள் எரிசக்தித் துறையில் இந்தியா தன்னிறைவு பெறுவதற்கும், நிகர ஏற்றுமதி நாடாக மாறுவதற்கும் இத்துறையை இளைஞர்களும் புத்தொழில் நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### இந்தியா - உலகின் அறிவுசார் மற்றும் உள்ளடக்க மையம்

விளையாட்டுடன் இணைந்து நமது யோகா தெய்வீகம், இசை திரைப்படம், தத்துவயியல் இலக்கியம் ஆகியவையும் ஒட்டுமொத்த உலகில் இந்தியாவின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவதற்கான திறன் கொண்டவை ஆகும். இன்றைய நிலையில், ஐக்கிய நாடுகள் அமைப்பால் கொண்டாடப்படும் நிகழ்வுகளில் யோகா நாளும், சர்வதேச சிறுதானிய நாளும் புகழ்பெற்றவையாக மாறியுள்ளன. இந்த இரண்டும் இந்தியாவால் முன்வைக்கப்பட்டவையாகுகும். இதே போல் மற்ற விசயங்களிலும் இந்தியாவால் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதால் தான், புத்தொழில் நிறுவனங்களின் வழியாக இந்தியாவின் மென் சக்தியின் திறனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.

### பாதுகாப்பு மற்றும் விண்வெளி ஆராய்ச்சித் துறை

பல பத்தாண்டுகளாக பாதுகாப்புத் தளவாடங்களை இறக்குமதி செய்யும் நாடாக விளங்கிய இந்தியா, இப்போது உலகின் 75 நாடுகளுக்குப் பாதுகாப்புக் கருவிகளை ஏற்றுமதி செய்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது. இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதியின் மதிப்பு இன்றைய நிலையில், 150 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவில் உள்ளது. 2024–25ஆம் ஆண்டிற்குள் இதை 500 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், தனிநபர் புத்தாக்கப் படைப்பாளர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள், கல்வியாளர்கள் போன்றவர்களை உள்ளடக்கி, பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறையில் புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன், பாதுகாப்புத்துறை சிறப்புத் திறனுக்கான புத்தாக்கச் செயல்திட்டத்தை மத்திய அரசு அண்மையில் அறிமுகம் செய்திருக்கிறது. பாதுகாப்பு மற்றும் விண்வெளி ஆராய்ச்சித் துறையின் தற்சார்பு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும். பாதுகாப்புத்துறை சிறப்புத் திறனுக்கான புத்தாக்கச் செயல்திட்டத்தின்படி, இதுவரை இந்தியப் பாதுகாப்பு புத்தொழில் நிறுவனச் சவால் ஏழு முறைகள் நடத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறை சிறப்புத் திறனுக்கான புத்தாக்கச் செயல்திட்டத்தின் வழியாக, புதிய கருவிகளை வெற்றிகரமாக உருவாக்குவதற்காக புத்தொழில் நிறுவனங்களுக்கும் தனியார் புத்தாக்கம் செய்வோருக்கும் மத்திய அரசு உதவி செய்வதுடன், புத்தாக்கம், வடிவமைப்பு, மேம்பாடு ஆகியவற்றிலும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இதுவரை நடத்தப்பட்ட ஏழு சுற்று இந்தியப் பாதுகாப்பு புத்தொழில் நிறுவனச் சவால் போட்டிகளில் ஏராளமான புத்தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டிருக்கின்றன. இதவரை 136 புத்தொழில் நிறுவனங்கள் இதற்கான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. புதிய கருவிகளின் புரோட்டோ டைம் மேம்பாட்டிற்காக 132 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.




இந்தியப் பாதுகாப்புப் புத்தொழில் நிறுவனச் சவால் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பொருள்கள் தயாரிப்புக்கான ஒப்பந்தம் வழங்குவதற்கு வசதியாக, அவசியம் தேவைப்படும் பொருள்கள் என்ற தகுதியை 14 வகையான பொருள்களுக்கு மத்திய அரசு வழங்கி இருக்கிறது.

பாதுகாப்புத்துறை சிறப்புத் திறனுக்கான புத்தாக்கச் செயல்திட்டத்திற்கு உதவுவதற்காக புதிய திட்டம் ஒன்றிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அத்திட்டத்திற்கு 2021-22 முதல் 2025-26ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.498.78 கோடி நிதி மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புத்துறை சிறப்புத் திறனுக்கான புத்தாக்கச் செயல்திட்டத்தின்படி, பாதுகாப்புப்படைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த அறிக்கைகள் பெறப்பட்டு, அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான தொழில்நுட்ப மற்றும் புரோட்டோ டைப் கருவிகள் உருவாக்கப்படுகின்றன. இதன் மூலம் பாதுகாப்புப் படைகளின் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன.

## வேளாண்மைப் புத்தொழில் நிறுவனங்கள்

வேளாண்துறைக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 2014ஆம் ஆண்டில் ரூ.25 ஆயிரம் கோடிக்கும் குறைவாகவே இருந்தது. ஆனால் இப்போது ரூ.1.25 இலட்சம் கோடிக்கும் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு வேளாண்மை சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள் ஒன்று கூட இந்தியாவில் இல்லை என்று கூறலாம். ஆனால் இப்போது, 3 ஆயிரத்திற்கும் கூடுதலான வேளாண்மைப் புத்தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் செயல்பட்டு வருகின்றன. வேளாண் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்களுக்கு விரைவாக நிதி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதன் மூலம், டிஜிட்டல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதோடு மட்டுமின்றி, நிதி பெறுவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்திக் கொண்டு இளைஞர்களுடன் இளம் தொழில்முனைவோரும் தங்களின் இலக்குகளை நோக்கி முன்னேற வேண்டும். வேளாண்துறைப் புத்தொழில் நிறுவனங்களுக்கான வளர்ச்சி வாய்ப்புகளை அதிகரிப்பதற்காகவும், சிறு உழவர்களின் நலனுக்காகவும் ஸ்ரீஅனீஷ் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

## நிறைவுரை

இந்தியக் கொடியை உயர்த்திப் பிடிப்பதற்காக புத்தாக்கம் செய்யும் இளைஞர்கள் பாராட்டப்பட வேண்டும். அவர்களால் தான் இந்தியாவின் புத்தொழில் சூழல் அமைப்பு உலக அளவில் ஆக்கப்பூர்வ அதிர்வுகளை ஏற்படுத்தி வருகிறது. நமது மாண்புமிகு பிரதமர், "இந்தியப் புத்தொழில் சூழல் அமைப்பின் மிகப்பெரிய வலிமை என்பது அது முழுக்க முழுக்க உணர்வுகள், உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை ஆகியவற்றால் ஆனது என்பதுதான். இந்தியப் புத்தொழில் சூழல் அமைப்பின் வலிமை என்பதே, அது தொடர்ச்சியாக அதை அடையாளம் கண்டுகொள்கிறது, தானே மேம்படுத்திக் கொள்கிறது, தானே வளர்ச்சியடைகிறது என்பது தான். இந்தியப் புத்தொழில் சூழல் அமைப்பு எப்போதும் புதிய விசயங்களை கற்றுக்கொள்ளும் நிலையிலும், தேவைக்கு ஏற்ப மாறிக்கொள்ளும் நிலையிலும், புதிய சூழல்களுக்கு ஏற்ற வகையில் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் நிலையிலும் இருப்பதுதான் அதன் வலிமை" என்று புத்தொழில் சூழல் அமைப்பு குறித்து மிகச் சரியாக குறிப்பிட்டார். இந்திய இளம்தொழில் முனைவோர், அவர்களின் எதிர்காலத்தில் சாதனைகளைப் படைக்க வாழ்த்துகிறேன். இந்த உலகம் என்பது உங்களின் புத்தொழில் நிறுவனங்களுக்கான விளையாட்டுத் திடல் ஆகும். எனவே, உலகம் ஒரு குடும்பம் என்ற உணர்வுடன் அந்த விளையாட்டுத் திடலில் நீங்கள் விளையாடுங்கள்.

ஜெய்ஹிந்த், ஜெய் பாரத், ஜெய் விஞ்ஞான்!

**- அனுராக்சிங் தாக்கூர்**
தகவல் ஒலிபரப்பு, இளைஞர் நலம், விளையாட்டுத்துறை அமைச்சர், மத்திய அரசு.

# புத்தொழில் நிறுவனங்கள் அடிப்படைத் தகவல்கள்

புத்தொழில் நிறுவனங்கள் எனப்படுபவை புதிதாக உருவாக்கப்பட்ட தத்துவமாகும். அவை நாம் வாழும் காலத்தில் உருவாக்கப்பட்டவை. நம் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் புத்தொழில் நிறுவனங்கள் தொடர்பான சில முக்கிய அம்சங்களை நீங்கள் விரைவாக படித்து அறிந்துகொள்வதற்காக எளிமைப்படுத்தி இங்கு வழங்குகிறோம்.

**புத்தொழில் நிறுவனங்கள் என்றால் என்ன?**

புத்தொழில் நிறுவனம் எனப்படுவது, வளர்ச்சி நடைமுறையில் உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்ட தொடக்கநிலைத் தொழில் நிறுவனமாகும். பல தொழில் நிறுவனங்கள் சமுதாயம் சார்ந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கான தீர்வுகளை வழங்குவதாலும், அவை மிகப்பெரிய வளர்ச்சியடைய வாய்ப்பு இருப்பதாலும், அவற்றில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களும் நிதி வழங்குவோரும் பெருமளவில் முன்வருகின்றனர்.

**புத்தொழில் இந்தியத் திட்டம் என்றால் என்ன?**

புத்தொழில் இந்தியத் திட்டம் என்பது இந்திய அரசின் முதன்மை அடையாளத் திட்டங்களில் ஒன்றாகும். புத்தொழில் நிறுவனக் கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தவும், இந்தியாவில் புத்தாக்கம், மற்றும் தொழில் முனைவுக்கான வலிமையான மற்றும் உள்ளடக்கிய சூழல் அமைப்பை ஏற்படுத்துவதற்காகவும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி தொடங்கப்பட்டதில் இருந்து புத்தொழில் இந்தியா திட்டம் ஏராளமான திட்டங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறது. தொழில் முனைவோருக்கு உதவி செய்தல், இந்தியாவை வேலை தேடுவோரின் நாடு என்ற நிலையில் இருந்து, வேலை வழங்குவோரின் நாடு என்ற நிலைக்கு மாற்றுதல் ஆகியவை தான் புத்தொழில் இந்தியா திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் ஆகும்.

**யுனிகார்ன்** (Unicorn) **என்றால் என்ன?**

யுனிகார்ன் என்பது 100 கோடி அமெரிக்க டாலருக்கும் அதிக மதிப்பை எட்டிய அரிதிலும் அரிதான புத்தொழில் நிறுவனங்கள் யுனிக்கார்ன் புத்தொழில் நிறுவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் 05.05.2022ஆம் தேதி நிலவரப்படி, 100 யுனிகார்ன் புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் ஒட்டுமொத்த மதிப்பு 33,270 கோடி அமெரிக்க டாலர் ஆகும். யுனிகார்ன் நிறுவனங்களின் எண்ணிக்கை அடிப்படையில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய புத்தொழில் சூழல் அமைப்பைக் கொண்டிருக்கிறது.

**விதை மூலதன நிதி** (Seed Funding) **என்றால் என்ன?**

விதை மூலதன நிதி என்பது ஒரு நிறுவனத்தை தொடங்கும் நிலையில், முதன் முதலில் அதிகாரப்பூர்வமாக வழங்கப்படும் பங்கு நிதி ஆகும். அதுதான் ஒரு வணிக அமைப்பு அல்லது தொழில் நிறுவனத்திற்குக் கிடைக்கும் அதிகாரப்பூர்வமான முதல் நிதியாகக் கருதப்படுகிறது. புத்தொழில் இந்தியா நிறுவனத்தின் சார்பில் 2021 –22ஆம் ஆண்டில் தொடங்கி, நான்கு ஆண்டுகளுக்கு விதை மூலதன நிதி வழங்கல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு அவற்றின் தொழில் கருத்துரு, முதல் கருவி (புரோட்டோ டைப்) தயாரிப்பு, உற்பத்தி சோதனைகள், சந்தை நுழைவு, தயாரிப்புகளை வணிகமயமாக்குதல் ஆகியவற்றுக்காக நிதியுதவி வழங்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும். இந்தத் திட்டம் 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தொழில் காப்பகங்கள்** (Incubator) **என்றால் என்ன?**

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் இன்குபேட்டர்கள் எனப்படும் தொழில்

காப்பகங்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் புத்தாக்கங்களுக்கும் தேவையான கட்டமைப்பு, வழிகாட்டுதல், நிதி ஆதரவு உள்ளிட்ட அனைத்து வகையான வளங்களையும் தொழில் காப்பகங்கள் தான் வழங்குகின்றன. இந்தியாவில் 400க்கும் மேற்பட்ட தொழில் காப்பகங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை தொடக்க நிலையில் உள்ளன.

**பிட்ச் (Pitch) என்றால் என்ன?**

பிட்ச் என்பது புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்ய முன்வரும் முதலீட்டாளர்களுக்கு சம்பந்தப்பட்ட புத்தொழில் நிறுவனம் குறித்து அளிக்கப்படும் சுருக்கமான விளக்கம் அல்லது அறிமுகம் ஆகும். பிட்ச் என்பதன் நோக்கம் என்னவென்றால், புத்தொழில் நிறுவனம் குறித்த அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்காமல், புத்தொழில் நிறுவனம் குறித்து மேலும் அறிந்துகொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டுவது ஆகும்.

**ஏஞ்சல் முதலீட்டாளர்கள் (Angel Investors) என்பவர்கள் யார்?**

ஏஞ்சல் முதலீட்டாளர்கள் எனப்படுபவர்கள் கீழ்க்கண்ட வரையறைகளில் ஏதேனும் ஒன்றை திருப்திபடுத்தக் கூடிய வகையில் புத்தொழில் நிறுவனம் ஒன்றுக்கு ஏஞ்சல் நிதியை வழங்க முன் வரும் தனிநபரோ, நிறுவனமோ ஆவர்.

**வரையறைகளின் விவரம்:**

முதன்மைக் குடியிருப்பு தவிர்த்து குறைந்தபட்சம் இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை வைத்துள்ள தனிநபர் முதலீட்டாளர்.

குறைந்தபட்சம் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள வணிக நிறுவனம்

விதிமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்ட மாற்று மூலதன நிதி அல்லது செபி (வென்ச்சர் மூலதன நிதி), ஒருங்குமுறைகள் 1996ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒரு வென்ச்சர் மூலதன நிதி.

**- ஆதாரம்: புத்தொழில் இந்தியா, பத்திரிகை தகவல் மையம்.**

## வேளாண் துறையில் அதிகளவிலான பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு

வேளாண் துறையில் பெண் பணியாளர்களின் பங்களிப்பு அதிக அளவில் இருப்பதாக 2021–22 வருடாந்திர தொழிலாளர் படை ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி வேளாண் துறை சார்ந்த பணிகளில் 62.9 சதவீதம் பெண்கள் பணியாற்றுகிறார்கள். இதே போல் உற்பத்தித் துறையில் பணியாற்றுபவர்களில் 11.2 சதவீதத்தினர் பெண்கள் ஆவர். வணிகம், உணவு விடுதிகளில் பணியாற்றுபவர்களில் 5.9 சதவீதம் பேர் பெண்கள். மற்ற சேவை சார்ந்த துறைகளில் 13.6 சதவீதம் பெண்கள் பணியாற்றுகிறார்கள்.

பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், தரமான வேலைவாய்ப்பை உருவாக்கவும், முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பெண்களுக்கு சமமான வேலைவாய்ப்பை வழங்குவதுடன், பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்கவும், தொழிலாளர் சட்டங்களில் பல்வேறு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பாக மகப்பேறு விடுப்பாக 12 முதல் 26 வாரங்கள் வரை வழங்கப்படுதல், 50 மற்றும் அதற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் இடத்தில், மூன்று வயதிற்குட்பட்ட அவர்களது குழந்தைகளை கட்டாயமாகப் பராமரிக்கும் வசதி, இரவுப் பணிகளில் பெண்களை போதிய பாதுகாப்பு வசதிகளுடன் ஈடுபடுத்துதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

பெண் பணியாளர்களின் பணி சார்ந்த திறமைகளை மேம்படுத்துவதற்காக மகளிர் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள், தேசிய மற்றும் மண்டல அளவிலான தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக பயிற்சிகளை மத்திய அரசு வழங்கி வருகிறது.

அரசுத் துறைகளில் பெண் பணியாளர்களின் பங்களிப்பு குறித்த 2021–22 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர தொழிலாளர் படை ஆய்வறிக்கையில், 15 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் பங்களிப்பு அதிகபட்சமாக 19. 1 சதவீதத்துடன் ஹரியானா மாநிலம் முதலிடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# இந்தியத் தொழில்களுக்கு "அமிர்த காலத்தில்" வாய்ப்புகள்

– ஃபைஸ் அஸ்கரி

இந்தியாவில் குறு, சிறு நடுத்தரத் தொழில் பிரிவானது (எம்.எஸ்.எம்.இ) நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் மிக முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது. 2023ஆம் ஆண்டையும் அதைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளையும் "அமிர்த காலம்" என்று பிரதமர் பெயரிட்டுள்ளார். இந்தக் காலகட்டத்தில் இந்திய குறு, சிறு நடுத்தரத் தொழில்களுக்குப் பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கக் கூடும். இதில் மிகப் பெரிய வாய்ப்புகளில் ஒன்றாக வர்த்தகத்தில் டிஜிட்டல் உருமாற்றம் என்பது இருக்கும். பெருந்தொற்றுப் பரவலானது டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதை விரைவுபடுத்தியுள்ளது. குறு, சிறு நடுத்தரத் தொழில் பிரிவு புதிய வாடிக்கையாளர்களையும் புதிய சந்தைகளையும் அடைவதற்காக இந்தப் போக்கை ஏற்று வலுப்படுத்தும்.



கோவிட் 19க்குப் பிறகான காலகட்டம் அல்லது அமிர்த காலமானது குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரப் புதுப்பிப்பிலும், வளர்ச்சியிலும் அரசு கவனம் செலுத்தி வருவதால் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் தங்களின் பங்கிற்கு வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் முக்கியப் பணியை ஆற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய சந்தைகளைக் கண்டறிதல், டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், சுகாதாரப் பராமரிப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற முக்கியமான பிரிவுகளுக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றின் மூலம் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவு அமிர்த காலத்தில் வலுவடையும். குறு, சிறு நடுத்தரத் தொழில்கள் தங்களது உற்பத்திப் பொருள்களையும், சேவைகளையும் ஏற்றுமதி செய்வதற்கும், டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்று நடைமுறைப்படுத்த ஊக்கம் அளிப்பதற்கும் அரசு பல்வேறு திட்டங்களைத் தொடங்கியுள்ளது. தேசிய உள்கட்டமைப்பு செயல்வழித் திட்டம் (NIP) மற்றும் சுயசார்பு பாரதத் திட்டம் போன்ற உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக்கான முன்னெடுப்பு நடவடிக்கைகளும் கூட குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு சரக்குகள் மற்றும் சேவைகளை விற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும். இது உள்கட்டமைப்பு வசதிச் செயலாக்கத் திட்டங்களுக்கும் ஆதரவாக அமையும். இதனோடு சுகாதாரப் பராமரிப்பு பிரிவு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில் ஆகியன வளர்ச்சி பெற்று வரும் முக்கியத் தொழில்துறைகளாக மாறும் என்று எதிர்பாக்கப்படுகிறது. ஆகவே குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் இந்த இரண்டு பிரிவுகளிலும் தனக்கான வாய்ப்புகளைக் கண்டறிய வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தோம் என்றால் அமிர்தகாலம்



என்பது இந்தியாவில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்பிரிவுகளுக்கு குறிப்பிடத்தக்க வாய்ப்பினை வழங்கும் என்று தெரிகிறது. அதனால் இவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான பங்கினை ஆற்றும்.

**அமிர்த காலத்தின் சாத்தியங்களும் வாய்ப்புகளும்**

வளர்ச்சியை விரைவுபடுத்துதல் மற்றும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவானது அமிர்த காலத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் அமிர்தகாலத்தில். குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு கிடைக்கக் கூடிய மிக முக்கியமான வாய்ப்புகளில் சில இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது:

1. **டிஜிட்டல் உருமாற்றம்:** தொழிற்சாலைகள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதை கோவிட் 19 பெருந்தொற்றானது விரைவுபடுத்தியுள்ளது. ஆகவே இந்தியாவில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் போட்டி நிலையைச் சமாளித்து நிலைபெற இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையில் உள்ளன. தங்களது தொழிற்சாலை இயக்கத்தை மேம்படுத்தவும் புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடையவும் புதிய சந்தைகளைக் கண்டறியவும் இந்தத் தொழில்பிரிவானது டிஜிட்டல் தொழில்நுட்பத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. **ஏற்றுமதி வாய்ப்புகள்:** குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் தங்களது உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கு உதவும் வகையில் இந்திய அரசானது ஏற்றுமதி அபிவிருத்தி மூலதனச் சரக்குகள் (Export Promotion Capital Goods - EPCG) மற்றும் இந்தியாவில் இருந்து ஏற்றுமதியை வியாபாரப்படுத்துதல் (Merchandise Exports from India Scheme - MEIS) போன்ற பல்வேறு திட்டங்களைத் தொடங்கியுள்ளது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் புதிய சந்தைகளைக் கண்டறியவும் தங்களது வருவாயை அதிகரிக்கவும் இந்தத் திட்டங்களை ஏற்று, செயல்படுத்தி வலுப்படுத்த வேண்டும்.

3. **உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு:** நாட்டில் உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டை அதிகரிப்பதற்காக இந்திய அரசானது தேசிய உள்கட்டமைப்பு வசதி செயல்வழி (National Infrastructure Pipeline NIP) மற்றும் சுயசார்பு இந்தியா திட்டம் போன்ற பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் குறு, சிறு நடுத்தரத் தொழில் பிரிவுகள் இதில் முக்கியமான பங்கினை ஆற்ற முடியும். அதாவது உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவாக இருக்க முடியும்.

4. **சுகாதாரப் பராமரிப்புப் பிரிவு:** சுகாதாரப் பராமரிப்புப் பிரிவின் முக்கியத்துவத்தை கோவிட் 19 பெருந்தொற்று எடுத்துக்காட்டியுள்ளது. சுகாதாரப் பராமரிப்புத் தொழிலுக்கு ஆதரவாக சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் இந்தியாவில் உள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் இந்த வாய்ப்பை மேலும் அதிகரிக்க முடியும். மருத்துவ உபகரணங்கள், தனிநபர் பாதுகாப்புக் கவச உடை (Personal Protective Equipment - PPE) மற்றும் சுகாதாரப் பராமரிப்புத் தொழிலுக்கான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் போன்ற அம்சங்களில் கூடுதல் வாய்ப்புகளை குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் கண்டறிய வேண்டும்.

5. **பசுமை ஆற்றல்:** புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் தொழிலுக்கு ஆதரவாக சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் இந்தப் பிரிவில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் மிக முக்கியமான பங்கினை

ஆற்ற முடியும். சூரிய எரிசக்தி, காற்றாலை மின்சாரம், ஆற்றல் சேமிப்புக்கான வழிமுறைகள் போன்ற அம்சங்களில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் கூடுதல் வாய்ப்பைக் கண்டறிய வேண்டும்.

நீடித்த நிலையான சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான தேவை அதிகரித்து வருவது என்பது மற்றொரு நிர்ப்பந்தமான வாய்ப்பாக உள்ளது. சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மீது கவனம் செலுத்துவது அதிகரித்து வரும் பின்னணியில் சூழலுக்கு உகந்த சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் விரைவாக வளர்ந்து வரும் இந்தச் சந்தையை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவின் மத்தியதர வர்க்கத்தினரின் தேவைகள் விரைவாக அதிகரித்து வருகின்றன. இதைப் பூர்த்தி செய்வதற்கு சரக்குகள் மற்றும் சேவைகளின் தேவையானது அதிகரித்து வருகின்றது. இதனால் சுகாதாரப் பராமரிப்பு, கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற பிரிவுகளில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனோடு கூடுதலாக இந்தியாவில் உற்பத்தி செய்தல் மற்றும் சுயசார்பு ஆகியவற்றிற்கு அரசு தருகின்ற முக்கியத்துவமானது குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு உற்பத்தி மற்றும் அது தொடர்பான தொழில்பிரிவுகளில் வாய்ப்புகளை வழங்குகின்றது. உள்ளூர் மூலவளம் மற்றும் உள்ளூர் உற்பத்திக்கான முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது. நீண்டநாட்களாக எதிர்பார்க்கப்படும் உந்துதலை இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் வழங்கும்.

வங்கிகள், தொழிலில் துணிகரமாக மூலதனத்தை முதலீடு செய்பவர்கள் மற்றும் அரசுத் திட்டங்கள் போன்ற பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து தொழிலுக்குத் தேவையான நிதி மற்றும் உதவியை பெறுவது அதிகரித்து வருவதன் மூலம் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் பலன் பெற முடியும். மூலதனம் மற்றும் மூலவளங்களை அணுகிப் பெறுதல் என்பது சிறப்பாக இருக்கும் நிலையில் புத்தாக்கம் மற்றும் வளர்ச்சியில் துணிகரமாக முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இது இந்தத் தொழில் பிரிவு நிறைய மக்களை சென்றடையவும், நல்விளைவுகளை ஏற்படுத்தவும் செய்யும். 2023 மற்றும் அதைத் தொடரும் காலகட்டமான அமிர்த காலகட்டமானது இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்குப் பல வாய்ப்புகளை வழங்குகின்றது. டிஜிட்டல் உருமாற்றம், நீடித்த நிலையான சரக்குகள் மற்றும் சேவைகள், மத்தியதர வர்க்கத்தினரின் தேவைகைளைப் பூர்த்தி செய்தல், இந்தியாவில் உற்பத்தி செய்தல், அதிகரித்து வரும் நிதி ஆதாரம் மற்றும் உதவிகள் உள்ளிட்ட வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன. இந்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வரும் ஆண்டுகளில் தழைத்தோங்கும்.



## இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் இந்தியப் பொருளாதாரத்தில் மிக முக்கியமான பங்கினை ஆற்றுகின்றன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், ஏற்றுமதி ஆகியவற்றில் இந்தத் தொழில் பிரிவானது முக்கியமான பங்களிப்பைச் செய்து வருகின்றது. இந்தியாவின் உற்பத்தி சார்ந்த பொருள்களில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் பங்கு 45 சதவிகிதத்திற்கும் கூடுதலானதாகவும், சுமார் 110 மில்லியன் நபர்களுக்கு வேலை வழங்குவதாகவும் உள்ளது.

இதுமட்டுமல்லாமல், ஊரகப் பகுதிகளின் மேம்பாட்டிலும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் பங்காற்றி வருகின்றனர். வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல், தொழிற்சாலைகள் நகரப் பகுதிகளிலேயே குவிவதைத் தவிர்த்து ஊரகப் பகுதிகளிலும்



தொழிற்சாலைகளைத் தொடங்குதல் ஆகியவற்றின் மூலம் ஊரகப் பகுதிகளுக்கான உதவி தொடர்கிறது. நாட்டில், அதிலும் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், வறுமை நிலையைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்தத் தொழில்பிரிவு மிக முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது.

மேலும், நாட்டில் தொழில்முனைதல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் இன்றியமையாதவையாக உள்ளன. தனிநபர்கள் தங்களது வர்த்தகத்தைத் தொடங்கி சுயசார்புள்ளவர்களாக மாறுவதற்கான வாய்ப்புகளை இந்தத் தொழில்பிரிவு வழங்குகிறது. விரைவியக்கம் மற்றும் சூழலுக்குத் தக்கவாறு ஏற்று செயல்படுதல் ஆகியவற்றின் காரணமாக மாறி வருகின்ற சந்தை இயக்கவியல் மற்றும் நுகர்வோர் தேவைகளை குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் திறம்பட எதிர்கொண்டு வருகின்றன.

குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவானது ஏற்றுமதி அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுவதோடு நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பிற்கும் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. இந்தத் தொழில்பிரிவு இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 40 சதவிகிதத்திற்கும் மேல் பங்கு வகிக்கிறது. மற்ற நாடுகளுடன் நம் நாட்டின் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதிலும் இந்தத் தொழில்பிரிவானது இன்றியமையாத பங்கினைச் செலுத்துகிறது.

பொருளாதாரத்தில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளின் முக்கியத்துவத்தை அரசு ஏற்கனவே அங்கீகரித்துள்ளதோடு இந்தத் தொழில்பிரிவின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவும் வகையில் பல்வேறு முக்கியமான முன்னெடுப்பு நடவடிக்கைகளையும் தொடங்கியுள்ளது. நிதி உதவி அளித்தல், தொழில்நுட்பத்தைப் பொறுத்து தரநிலை உயர்த்துதல், தொழில்திறன் மேம்பாடு மற்றும் சந்தைகளை அணுகுதல் போன்றவற்றிற்கான திட்டங்களை உள்ளடக்கியதாக இந்த முன்னெடுப்பு நடவடிக்கைகள் உள்ளன.

நிறைவாகக் கூறுவதென்றால், உள்நாட்டு மொத்த உற்பத்திக்குப் பங்காற்றுதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், புத்தாக்கம் ஏற்றுமதிகள் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பொருளாதாரத்திற்கு குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் இன்றியமையாத பங்கினை ஆற்றுகின்றன. இந்தத் தொழில்பிரிவின் தொடர்ச்சியான வளர்ச்சியையும், மேம்பாட்டையும் உறுதி செய்வதில் அரசின் ஆதரவு முக்கியமானதாகும்.

**இந்தத் தொழில்பிரிவிற்கான அரசின் முன்னெடுப்பு நடவடிக்கைகள்**

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கலில் இந்தத் தொழில் பிரிவிற்குரிய முக்கியத்துவத்தை அங்கீகரித்து இந்திய அரசானது நீண்டகாலமாகவே குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவின் வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது. அத்தியாவசியமான நிதி உதவி, தொழில்நுட்பத்தைப் பொறுத்து தரநிலை உயர்த்துதல், தொழில்திறன் மேம்பாடு, சந்தைகளை அணுகுதல், ஒழுங்குமுறையைக் கடைபிடிப்பதற்கான ஆதரவு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சியில் இந்திய அரசு கவனம் கொண்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கலில் இந்தத் தொழில்பிரிவு முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது.

1. **நிதி உதவிக்கான ஆதரவு:** குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி, நிதி அளிப்பிற்காக எண்ணற்றத் திட்டங்களையும், செயல் முறைகளையும் அரசு தொடங்கியுள்ளது. குறு, சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதிய அறக்கட்டளை, பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கல் திட்டம் (Prime Minister's Employment Generation. Programme - PMEGP), குறு, சிறு தொழில்களுக்கான தொகுப்பிட மேம்பாட்டுத் திட்டம் (Micro & Small Enterprises - Cluster Development Programme - MSE-CDP) உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.




2. **தொழில்நுட்பத்தைத் தரநிலை உயர்த்துதல்:** குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் தாங்கள் பயன்படுத்தி வரும் தொழில்நுட்பத்தைத் தரநிலை உயர்த்தவும் நவீன மற்றும் திறன்மிகுந்த உற்பத்தி நடைமுறைகளை ஏற்று நடைமுறைப்படுத்தவும் உதவும் வகையில் அரசு பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. அத்தகைய முன்னெடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகத்தான் தொழில்நுட்பத் தரநிலை உயர்த்தலுக்கான நிதியத் திட்டம் (Technology Upgradation Fund Scheme - TUFS) உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளின் தொழில்நுட்பத் தரநிலையை உயர்த்தவும், நவீனமயமாக்கவும் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

3. **தொழில்திறன் மேம்பாடு:** குறு, சிறு, நடுத்தரத் தொழில்பிரிவில் உள்ள தொழிலாளர்களின் தொழில்திறனை மேம்படுத்துவதற்காக அரசு பல்வேறு தொழில்திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவில் உள்ள தொழிலாளர்களின் தொழில்திறனை மேம்படுத்துவதையும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டு தேசிய தொழில்திறன் மேம்பாட்டுக் கழகம் (National Skill Development Corporation - NSDC) மற்றும் தொழில்திறன் இந்தியா இயக்கம் ஆகிய இரண்டு முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

4. **சந்தையை அணுகுதல்:** குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் சந்தைகளை அணுகுவதற்கும் தங்களது உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்தவும் அரசு பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. தேசிய சிறு தொழில்கள் கழகமானது (NSIC) சந்தைப்படுத்துதலைப் பொறுத்து குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு உதவுகிறது. குறு, சிறு தொழில்களுக்கான பொதுக் கொள்முதல் கொள்கையானது அரசுத் துறைகளில் மேற்கொள்ளப்படும் கொள்முதலில் 25 சதவிகிதம் குறு, சிறு தொழில் பிரிவிடம் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை கட்டாயமாக்கியுள்ளது. இவை இரண்டும் சந்தையை அணுகுதலுக்கான இரண்டு உதாரணத் திட்டங்கள் ஆகும்.

5. **ஒழுங்குமுறையைக் கடைபிடிப்பதற்கான ஆதரவு:** குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் ஏற்றுக் கடைப்பிடிப்பதற்கான ஒழுங்குமுறை விதிகளை எளிமைப்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான பதிவு நடைமுறையை எளிமைப்படுத்துகின்ற உத்யோக் ஆதார் பதிவு நடைமுறை என்பது இதில் ஒன்றாகும். ஒழுங்குமுறைக்கு ஏற்ப இசைந்து நடப்பது தொடர்பான புகார்களுக்குத் தீர்வு காண்பதற்காக குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒரு தீர்விடத்தை வழங்குகின்ற குறு, சிறு, நடுத்தரத் தொழில் உதவிக் கவுன்சில் தொடங்கப்பட்டிருப்பது மற்றொரு உதாரணமாகும்.

### அரசின் முன்னோடித் திட்டங்கள்

குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமாக இந்திய

அரசு பல்வேறு முன்னோடித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அவற்றில் முக்கியமான சில திட்டங்கள் இங்கே தரப்படுகின்றன.

1. **பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கல் திட்டம்** (PMEGP): இது ஒரு கடன் இணைப்பு மானியத் திட்டம் ஆகும். குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவில் ஸ்டார்ட் அப்புகள் மற்றும் புதிய தொழில்களை தொடங்குவதற்கான நிதி உதவி அளிப்பதன் மூலம் சுயவேலைவாய்ப்பையும் தொழில்முனைதலையும் மேம்படுத்துதல் என்ற குறிக்கோளுடன் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

2. **குறு மற்றும் சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதிய அறக்கட்டளை** (CGTMSE): குறிப்பிட்ட வரம்பு வரை பிணை இல்லாத கடனை வழங்குகின்ற ஒரு திட்டமாக இது செயல்படுகின்றது. மேலும் இந்தத் திட்டமானது வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்கள் கடன் வழங்குவதை ஊக்குவிக்கின்றது. இதன் மூலம் இந்தத் தொழில் பிரிவினருக்குக் கடன் கிடைப்பது எளிதாகும்.

3. **குறு, சிறு தொழில்களுக்கான தொகுப்பிட மேம்பாட்டுத் திட்டம்** (MSE-CDP): உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு, தொழில்நுட்ப தரநிலை உயர்த்துதல், சந்தைகளை அணுகுதல் ஆகியவற்றிற்கான உதவிகளை அளித்து தொகுப்பிடங்களை மேம்படுத்துவதை இந்தத் திட்டமானது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

4. **தொழில்நுட்பத் தரநிலை உயர்த்தலுக்கான நிதியத் திட்டம்** (TUFS): ஜவுளி மற்றும் சணல் தொழிலில் ஈடுபட்டுள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு தொழில்நுட்பம் சார்ந்த தரநிலை உயர்த்துதல் மற்றும் நவீனமயமாக்கலுக்கு இந்தத் திட்டம் நிதி உதவி அளிக்கின்றது.

5. **டிஜிட்டல் குறு, சிறு, நடுத்தரத் தொழில் திட்டம்:** குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்று நடைமுறைப்படுத்துவதை ஊக்குவிக்கும் திட்டமாக இது உள்ளது. டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதி, தகுதிறன் கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான உதவி இந்தத் திட்டத்தில் வழங்கப்படுகிறது.

6. **தேசிய உற்பத்திசார் போட்டித் திறன் திட்டம்** (NMCP): குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் உள்ளிட்ட உற்பத்திசார் தொழில்பிரிவின் போட்டித் திறனை அதிகரிக்க வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும். தொழில்நுட்பத் தரநிலை உயர்த்துதல், தரநிலைச் சான்றிதழ், சந்தைப்படுத்தலுக்கான உதவி மற்றும் தொழில்திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கான உதவியை இந்தத் திட்டமானது வழங்குகிறது

7. **தேசியத் தொழில்திறன் மேம்பாட்டுக் கழகம்** (NSDC): குறு, சிறு, நடுத்தரத் தொழிலாளர்கள் வேலைக்குத் தகுதி உள்ளவர்களாக இருப்பதற்கும் அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் அவர்களுக்கு தொழில்திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதை இந்தத் திட்டமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.

8. **குறு, சிறு தொழில்களுக்கான பொதுக் கொள்முதல் கொள்கை** (MSEs): இந்தக் கொள்கையானது அரசின் கொள்முதலில் குறு, சிறு, நடுத்தரத் தொழிலகங்களிடமிருந்து கொள்முதல் செய்வது 25 சதவிகிதமாக இருக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கியுள்ளது. இதன் மூலம் இந்தத் தொழில்பிரிவினர் மிகப் பெரிய சந்தையை அணுகுவதற்கும் தங்களின் போட்டித் திறனை மேம்படுத்தித் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## குறு, சிறு, நடுத்தரத் தொழில் மற்றும் பாதுகாப்புத்துறை உற்பத்தி

தங்களது வர்த்தகத்தை வளர்த்துக் கொள்ளவும் விரிவுபடுத்திக் கொள்ளவும் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு இந்தியாவின் பாதுகாப்புத்துறை உற்பத்திப் பிரிவானது குறிப்பிடத்தக்க ஒரு வாய்ப்பாக விளங்குகிறது. பாதுகாப்புத்துறையில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதிலும் அந்தத் துறையை சுயசார்புடையதாக ஆக்குவதிலும் இந்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. பாதுகாப்புத்துறை உற்பத்தியில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக அரசானது பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**பாதுகாப்புத்துறை உற்பத்தியில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு உள்ள சில வாய்ப்புகள் இங்கே தரப்படுகின்றன:**

1. **ஈடுசெய்தல் கொள்கை:** இந்தக் கொள்கையின் கீழ் இந்தியாவில் பாதுகாப்புத் துறையின் ஒப்பந்தங்களைப் பெறுகின்ற அந்நியநாட்டு நிறுவனங்கள் தங்களது ஒப்பந்த மதிப்பில் குறிப்பிட்ட சதவிகிதத் தொகையை இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தித் துறையில் முதலீடு செய்தாக வேண்டும். இது குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு அந்நிய நாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றவும், பாதுகாப்புத் துறை உற்பத்தித் தொழிலில் பங்கேற்கவும் குறிப்பிடத்தகுந்த வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது.

2. **பாதுகாப்புத்துறை கொள்முதல் நடைமுறை** (Defence Procurement Procedure - DPP): கொள்முதலில் முன்னுரிமைகள் வழங்குதல், குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருள்கள் வகைப்பாடுகளை ஒதுக்கித் தருதல், விலைப்புள்ளிகளில் பங்கேற்பதற்கான தகுதிக் காரணிகளைத் தளர்த்துதல் ஆகியவற்றின் மூலம் பாதுகாப்புத்துறை உற்பத்தியில், குறு, சிறு, நடுத்தரத் தொழில்களின் பங்கேற்பை பாதுகாப்புத்துறை கொள்முதல் நடைமுறையானது ஊக்கப்படுத்துகின்றது.

3. **பாதுகாப்பு சிறப்பு நிலைக்கான புத்தாக்கம்** (Innovations for Defence Excellence - iDEX): இந்த முன்னோட்ட நடவடிக்கையானது பாதுகாப்பு உற்பத்திப் பிரிவில் புத்தாக்கத்தையும் உள்நாட்டு தயாரிப்பையும் மேம்படுத்துகின்றது. பாதுகாப்புத் தொழில் பிரிவில் செயலாற்றுகின்ற குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கும் ஸ்டார்ட் அப்புகளுக்கும் ஆதரவு, அரவணைப்பு மற்றும் இன்குபேஷன் வசதிகளை வழங்குவதன் மூலம் இது செயல்படுத்தப்படுகின்றது.

4. **பாதுகாப்புத்துறை முதலீட்டாளர் மையம்** (Defence Investment Centres - DIC): பாதுகாப்புத் துறையின் உற்பத்திப் பிரிவில் முதலீடுகள் செய்ய விரும்புகின்ற குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு உதவுகின்ற, ஆதரவு அளிக்கின்ற வகையில் பாதுகாப்பு உற்பத்தி துறையின் கீழ் பிரத்யேக மையமாக இந்த டிஐசி விளங்குகின்றது.

5. **பாதுகாப்பு தொழில்துறைக்கான பெருவழிப் பாதைகள்** (DICs): இந்திய அரசானது நாடு முழுவதும் ஆறு மண்டலங்களைப் பாதுகாப்பு தொழில்துறைக்கான பெருவழிப் பாதைகளாக அடையாளம் கண்டுள்ளது. பாதுகாப்பு உற்பத்தித் தொழிலின் தொகுப்பிடங்களை மேம்படுத்தும் பணியை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. உள்கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்பம், சந்தை இணைப்புகளை அணுகுவதற்காக குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் இத்தகைய தொகுப்பிடங்களின் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வர்த்தகத்தை வளர்த்துக் கொள்ளவும், விரிவுபடுத்திக் கொள்ளவும் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தித் தொழில் பிரிவானது குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை வழங்குகின்றது. பாதுகாப்பு உற்பத்தித் தொழிலில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினரின் பங்கேற்பை அதிகரிப்பதற்காக இந்திய அரசானது பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. நிதி ஆதரவு, அரவணைப்பு, சந்தை இணைப்பு ஆகியவற்றுக்கான உதவிகளை இத்தகைய முன்னெடுப்பு நடவடிக்கை மூலம் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் ஈடுசெய் கொள்கையின் கீழ் அயல்நாட்டு நிறுவனங்களுடன் இவை இணைந்து பணி செய்யவும் பாதுகாப்பு உற்பத்தித் தொழிலில் பங்கேற்கவும் முடியும்.

## இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான நேரடி அந்நிய முதலீடு அனுகூலங்கள்

இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு நேரடி அந்நிய முதலீடு (Foreign Direct Investment - FDI) என்பது பல்வேறு பலன்களை அளிக்கும். அவற்றில் சில இங்கே தரப்படுகின்றன.

1. மூலதனத் தொகை கிடைத்தல்: அந்நிய முதலீட்டாளர்களிடம் இருந்து மூலதனத் தொகை கிடைப்பதற்கு நேரடி அந்நிய முதலீடு உதவும். தங்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்க திட்டங்களுக்கு நிதி ஆதாரமாக இதனைப் குறு, சிறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உள்ளூர் சந்தையில் கடன் தொகை வரம்பு குறைவாக இருத்தல், வட்டி விகிதங்கள் அதிகமாக இருத்தல் போன்ற



சவால்களைச் சமாளித்து செயல்பட இது உதவியாக அமையும்.

2. **தொழில்நுட்ப மாற்றம்:** அந்நிய நேரடி முதலீடு என்பது அயல்நாட்டு தொழில்நுட்பங்களையும், செயல்முறைகளையும் இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள உதவும். இதனால் அவர்கள் தங்களது உற்பத்திப் பொருள்களின் தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும். மேலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் மேலும் போட்டித் திறன் மிகுந்தவர்களாக மாறுவதற்கும் இது உதவும்.

3. **சந்தையை அணுகுதல்:** அந்நிய நேரடி முதலீடானது உள்நாடு மற்றும் சர்வதேச அளவில் புதிய சந்தைகளையும் வாடிக்கையாளர்களையும் இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் அணுகுவதற்கு உதவும். மேலும் இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் தங்களது வாடிக்கையாளர் அடித்தளத்தையும் வருவாயையும் அதிகரித்துக் கொள்ளவும் இது உதவியாக அமையும்.

4. **மேலாண்மை நிபுணத்துவம்:** அந்நிய நேரடி முதலீடானது அயல்நாட்டு மேலாண்மை நிபுணத்துவத்தையும் ஆகச் சிறந்த நடைமுறைகளையும் வழங்கும். இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் தங்களது இயக்குதல் செயல்பாடுகளையும் மேலாண்மை நிர்வாக நடைமுறைகளையும் அபிவிருத்தி செய்து கொள்ள இது உதவியாக இருக்கும். இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவானது மேலும் கூடுதல் திறன் கொண்டதாகவும் உற்பத்தித் திறன் கொண்டதாகவும் மாறுவதற்கு இது உதவியாக இருக்கும்.

5. **பிராண்ட் கட்டமைப்பு:** இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவானது புகழ்பெற்ற அந்நிய பிராண்டுகளுடன் ஒன்று சேர்ந்து தங்களது பிராண்ட் பிம்பத்தையும் நற்பெயரையும் கட்டமைத்துக் கொள்ள அந்நிய நேரடி முதலீடானது உதவும். உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளில் இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவானது தங்களது இருப்பையும் நம்பகத்தன்மையையும் அதிகரித்துக் கொள்ளவும் இது உதவியாக இருக்கும்.

6. **வேலைவாய்ப்பை உருவாக்கல்:** அந்நிய நேரடி முதலீடானது நேரடியாகவும், மறைமுகமாகவும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு உதவியாக இருக்கும். அதாவது இவற்றின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கச் செயல்களுக்கு ஆதரவாக இருக்கும். நாட்டின் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையை எதிர்கொண்டு சமாளிப்பதற்கும் இது உதவியாக அமையும்.

மூலதனம் கிடைத்தல், தொழில்நுட்ப மாற்றம், சந்தைகளை அணுகுதல், மேலாண்மை நிபுணத்துவம், பிராண்டைக் கட்டமைத்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பலன்களை நேரடி அந்நிய முதலீடானது இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு வழங்குகிறது. அதே சமயம், நேரடி அந்நிய முதலீடானது உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதாரத்தில் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை என்பதை உறுதி செய்யும் வகையில், ஒழுங்குமுறைக்கும்,

கண்காணிப்பிற்கும் உள்ளாக்கப்படுவது என்பது இன்றியமையாதது ஆகும்.

**மாற்று நிதி வாய்ப்புகள்**

குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் எதிர்கொள்கின்ற மிகப் பொதுவான சவால்களில் ஒன்றாக மரபார்ந்த ஆதாரங்களில் இருந்து நிதி உதவியைப் பெறுதல் என்பது இருக்கின்றது. ஆனால் இதுவே குறு, சிறு, நடுத்தரத் தொழில்பிரிவுகள் எதிர்கொள்கின்ற மிக முக்கியமான சவால்களில் ஒன்றாகவும் இருக்கின்றது. இதனைச் சமாளிப்பதற்கு இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு பல்வேறு மாற்று நிதி வாய்ப்புகளும் உள்ளன. இத்தகைய மாற்று நிதி வாய்ப்புகளுக்கு அரசு முகமைகள் முக்கியத்துவம் தருகின்றன. குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினரும் இவற்றைப் பெரிதும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். கீழ்வருபவை மாற்று நிதி வாய்ப்புகளில் உள்ளடங்கும்.

1. **வங்கி சாராத நிதி நிறுவனங்கள்** (Non Banking Financial Companies - NBFCs): இந்த வங்கி சாராத நிதி நிறுவனங்கள் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு கடன்கள், கடன் உச்சவரம்பு அதிகரிப்பு மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு விற்கும் வசதி ஆகியவற்றை வழங்குகின்றன. வங்கி சாராத நிதி நிறுவனங்கள் வங்கிகளை விட கடன் வழங்குவதற்கான காரணிகளை நெகிழ்வுத் தன்மையுடன் கொண்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் கடன்களை மிக விரைவாகவும் வழங்குகின்றன.

2. **நேருக்கு நேராக** (peer-to-peer lending - P2P) **கடன் பெறுதல்:** பி2பி கடன் வசதியானது குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்குக் கடன் பெறுவோர் நேரடியாக கடன் வழங்கும் தனிநபர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வசதியை ஒரு ஆன்லைன் வாயிலாக ஏற்படுத்தித் தருகின்றது. பி2பி கடன் வசதிகள் மரபார்ந்த கடன் பெறும் வசதிகளோடு ஒப்பிட குறைந்த வட்டி விகிதத்தில் கடனைத் தருவதோடு கடனைத் திருப்பிச் செலுத்தும் நெகிழ்ச்சியான காலவரம்பையும் வழங்குகின்றன.

3. **வியாபாரக் கடன்:** விநியோகஸ்தர்கள் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு கடன் அடிப்படையில் சரக்குகள் அல்லது சேவைகளை வழங்குகின்ற ஒரு வகையான நிதிக்கடனாக வியாபாரக் கடன் உள்ளது. பணப் புழக்கத்தை குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் சிறப்பாகக் கையாளவும் தொழில் மூலதன நிர்வாகத்தை சிறப்பாகச் செயல்படுத்தவும் இது உதவுகிறது.

4. **ஏஞ்சல் முதலீட்டாளர்களும் துணிகர மூலதனவாதிகளும்:** கம்பெனியின் பங்குகளுக்கு ஈடாக குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு ஏஞ்சல் முதலீட்டாளர்களும் துணிகர மூலதனவாதிகளும் நிதி வழங்குகின்றனர். தங்களது வர்த்தகத்தை வளர்த்துக் கொள்ளவும் விரிவுபடுத்தவும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினருக்கு செயல்உத்தி சார்ந்த ஆலோசனைகளையும் அரவணைப்பையும் இவை வழங்குகின்றன.

5. **பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்டுதல்:** இணையத்தின் வாயிலாக அதிக எண்ணிக்கையிலான தனிநபர் முதலீட்டாளர்களிடம் இருந்து குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் நிதி திரட்டுவதற்கு உதவி செய்வதாக பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்டும் அமைப்புகள் உள்ளன. விரைவாகவும் திறம்படவும் மூலனத்தை திரட்ட இவை உதவுகின்றன.

6. **அரசுத் திட்டங்கள்:** குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு வங்கிகளும் நிதிசார் நிறுவனங்களும் கடன்கள் வழங்குவதை ஊக்குவிப்பதற்காக குறு சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதி அறக்கட்டளை (Credit Guarantee Fund Trust for Micro and Small Enterprises - CGTMSE) உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இந்திய அரசு தொடங்கியுள்ளது.

7. நிறைவாக, வங்கி சாராத நிதிசார் நிறுவனங்கள், பி2பி கடன், வியாபாரக் கடன், ஏஞ்சல் முதலீட்டாளர்கள் மற்றும் துணிகர மூலதனவாதிகள், பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்டுதல் மற்றும் அரசுத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மாற்று நிதி வாய்ப்புகள் இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிகளுக்குக் கிடைக்கின்றன. நிதி கிடைப்பதற்கும், தங்களது வளர்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கு நிதி பெறவும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவினர் இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**– டாக்டர். ஃபைஸ் அஸ்கரி,**
smestreet அமைப்பின்
நிறுவனர், பொதுச்செயலாளர்

# கடைகோடி இடத்தையும் சென்றடைதல்

– ரெபண்ட் ஜுயால்

புத்தொழில் துவங்கு இந்தியா இயக்கத்தின் நோக்கம் இளைஞர்களிடையே தொழில்முனைவையும், புத்தாக்கத்தையும் ஊக்குவிப்பதாகும். இது 2016 ஜனவரியில் துவக்கப்பட்டு, புதிய தொழில்களைத் துவக்குவதற்கும் நிலைத்து நிற்கும் பொருளாதார மேம்பாட்டைப் போற்றுவதற்குமான உகந்த சூழலை உருவாக்குவதை இது இலக்காகக் கொண்டுள்ளது. இந்த முனைவு அடிப்படைச் சீர்திருத்தங்களை உருவாக்கி அவற்றை இந்திய அரசின் கொள்கைகளில் உள்ளடங்கச் செய்துள்ளது. இந்த முனைவால் இந்தியப் பொருளாதாரத்தில் மிகுந்த தாக்கம் ஏற்படுவதோடு விளிம்பு நிலை மக்களுக்கும் இது பயன்களை அளிக்கும்.

பொருளாதார வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தொழில்முனைவும் புத்தாக்கலும் இன்றியமையாதனவாகும். மற்ற பல நாடுகளைப் போலவே, தொழில் முனைவு மற்றும் புத்தாக்கத்தின் அவசியத்தை உணர்ந்து, இந்த வழியில் பல முனைவுகளை இந்தியாவும் மேற்கொண்டுள்ளது. அதில் ஒன்று தான் 2016இல் துவக்கப்பட்ட புத்தொழில் துவங்கு இந்தியா திட்டமாகும். இந்த முனைவின் நோக்கம், இந்திய இளைஞர்களிடையே தொழில்முனைவை ஊக்குவித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதாகும். நாட்டில் புத்தாக்கத் தொழில்களைத் துவக்குவதற்கு ஏதுவான சூழலை உருவாக்கி அவற்றிற்கு நிதி வசதி, வரிச்சலுகைகள் மற்றும் பல ஊக்கங்களை அளிப்பது இலக்காக உள்ளது. இந்த முனைவு, புத்தாக்கத் தொழில் துவங்குபவர்களுக்கும், புத்தாக்கல் கருவைத் தோற்றுவிப்பவர்களுக்கும், துரிதப்படுத்துபவர்களுக்கும், நிதி வழங்கு அமைப்புகளுக்கும் ஏற்ற சூழலை உருவாக்க நினைக்கிறது.



புத்தொழில் துவங்கு இந்தியா முனைவில் முக்கியமான அம்சங்கள் உள்ளன. அவை: வழிமுறைகளை எளிமையாக்குதல், செயல்படுத்த வழிநடத்தல், துவக்க நிதி ஆதரவும் சலுகைகளும், தொழில்துறை கல்வித்துறை கூட்டுமுயற்சி மற்றும் புத்தாக்கக் கருவை உருவாக்குதல் ஆகியன. எளிமைப்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல் பகுதியில் இந்தியாவில் புதிய வணிகங்கள் துவங்குவதற்கான செயல்முறைகளை எளிமைப்படுத்தி, புதிய வணிகத்தைத் துவங்குவதற்கான நேரத்தையும், செலவினங்களையும் அரசு குறைத்துள்ளது. புதிய வணிகங்களைத் துவக்குவதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும், வழிகாட்டுதல்களையும் ஒன்றிணைத்துப் புத்தாக்க வலைதளம் ஒன்றை உருவாக்கியுள்ளது. துவக்க நிதி ஆதரவு மற்றும் சலுகைகள் பகுதியில் புத்தாக்கத் தொழில் துவங்குவதற்கு ஊக்கங்களையும், வரிச்சலுகைகளையும், காப்புரிமைப் பதிவு செய்ய உதவியும், நிதி உதவியும் செய்யப்படும். தொழில்துறை கல்வித்துறை கூட்டு முயற்சி மற்றும் புத்தாக்கக் கரு உருவாக்கல் பகுதியில் நாடெங்கிலும் பல புத்தாக்கக் கரு உருவாக்குதல், துரிதப்படுத்துதல் மையங்களை அமைத்து, புத்தொழில் துவங்குபவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு வலைத்தொடர்பை உருவாக்கி நிதி உதவியும் வழங்குவதாகும்.

### இந்திய பொருளாதாரத்தின் மீதான தாக்கம்:

'புத்தாக்கத் தொழில் முனைவு இந்தியா' இயக்கத்தால் இந்தியப் பொருளாதாரத்தின் மீது மிக சிறந்த தாக்கம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், பொருளாதார மேம்பாட்டிலும். 2025ஆம் ஆண்டு வாக்கில் இந்தியப் புத்தாக்கத்

தொழில்முனைவுச் சூழலால் இந்தியாவில் 5,00,000க்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாகுமென்று, மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் தேசியக் கூட்டமைப்பு (NASSCOM), கூறுகிறது. இந்தத் தொழில்முனைவுகளுக்கு அந்நிய முதலீடுகளும் மிகுந்து வருகின்றன. இந்தியப் புத்தாக்கத் தொழில்முனைவுகள் 2014இல் 3.9 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு நிதியை ஈர்த்த நிலையில் 2019ஆம் ஆண்டு வாக்கில் அது 14.5 பில்லியன் டாலராக இருந்தது. இந்த முனைவால் இந்தியாவில் புத்தாக்கமும், தொழில்முனைவுகளும் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன. உலகப் புத்தாக்கக் குறியீட்டுத் தரவரிசையில் இந்தியாவின் இடம் 2015இல் 81ஆக இருந்தது, 2021இல் 48ஆக உயர்ந்துள்ளது. இந்த முனைவுகளால் தொழில்நுட்பம், மருத்துவ சிகிச்சை மற்றும் வேளாண் உள்ளிட்ட பல துறைகளில் புத்தாக்கத் தொழில் முனைவுகள் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன.

**சவால்களும் தடைகளும்:**

புத்தாக்கத் தொழில் துவங்கு முனைவு சிறந்த தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தாலும், சவால்களும் தடைகளும் மிகுந்துள்ளன. இந்தப் புத்தாக்கத் தொழில்முனைவுகளுக்கு குறிப்பாக ஆரம்ப கால கட்டத்தில் நிதி வசதிகளை ஏற்படுத்துவது மிகப்பெரிய சவாலாக உள்ளது. அரசு, பலவகையான நிதி வழங்கு திட்டங்களை துவக்கியிருந்தாலும் பல புத்தாக்கத் தொழில்முனைவுகளுக்கு நிதி உதவி பெறுவது சவாலாகவே உள்ளது. புத்தாக்கத் தொழில்முனைவுச் சூழலுக்குத் தேவையான திறன் பெற்ற மனிதவளமும் மற்றொரு சவாலாக அமைந்துள்ளது. திறம் பெற்ற, அனுபவம் மிகுந்த பணியாளர்களைப் பெறுவதில் பல தொழில் முனைவுகள் சிரமப்படுகின்றன. புத்தாக்கத் தொழில்முனைவு இந்தியா இயக்கம் தொழில்நுட்பம் சார்ந்த புதுத்தொழில்களைக் கருத்தில் கொண்டுள்ளதால் அதுவும் ஒரு தடையாக அமைந்துள்ளது. தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்கத் தொழில்முனைவுகள் கணிசமான அளவு நிதியையும், கவனத்தையும் பெற்றுள்ள நிலையில் மருத்துவ சிகிச்சை, வேளாண்மை மற்றும் கல்வி ஆகியத் துறைகளில் பயன்படுத்தப்படாதத் திறன்கள் இன்னும் உள்ளன.

நாட்டில் தொழில்முனைவையும், புத்தாக்கங்களையும் உருவாக்குவதில் புத்தாக்கத் தொழில்முனைவு இந்தியா இயக்கம் வெற்றி பெற்றுள்ளது. நாஸ்காம் அறிக்கையின்படி, உலகளவில் இந்தியா புத்தாக்கத் தொழில்கள் துவங்கு சூழலில் மூன்றாவது பெரிய நாடாக உள்ளது. இப்போது நாட்டில் 50,000 புத்தாக்கப் புதுமுனைவுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த முனைவுகளால் புத்தாக்கத் தொழில் துவங்கு துறையில் 4,20,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியப் புத்தாக்கத் தொழில்முனைவுகள் கணிசமான அளவில் அந்நிய முதலீட்டையும் பெற்றுள்ளன. இந்தியப் புத்தாக்கத் தொழில்முனைவுச் சூழலில் இளம் பணியாளர்கள் ஈடுபட்டிருப்பதும், தொழில்நுட்பம் மற்றும் மின்மயமாக்கல் மையமாக அவை விளங்குவதும் காணப்படுகின்றன. இந்தியாவின் மிக அதிக அளவிலான மக்கள்தொகையும், வேகமாக வளர்ந்து வரும் நடுத்தர மக்களின் தொகுப்பாலும் புத்தாக்கல் தொழில்முனைவுகளுக்குப் பெரிய சந்தை கிடைத்துள்ளது. தொழில்நுட்பங்களையும், மின்மயமாக்கலையும் பயன்படுத்துவதால் நிதிசார் தொழில்நுட்பம், வலைதளம்சார் வணிகம் மற்றும் மருத்துவ சிகிச்சை ஆகிய துறைகளில் புத்தாக்கத் தொழில்முனைவுகளுக்குப் பல வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்திய அரசின் அடல் புத்தாக்க இயக்கம் மற்றும் ஒளிர்மிகு நகரங்கள் இயக்கம் ஆகிய முனைவுகளால் புத்தாக்கத் தொழில்முனைவுகளுக்குப் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

புத்தாக்கத் தொழில்முனைவுகளுக்கு நிதி வசதி, வழிகாட்டுதல், பிற ஆதரவுச் சேவைகளை வழங்கி அவர்களுக்கு ஏதுவான சூழலை உருவாக்க புத்தாக்கத் தொழில்முனைவு இந்தியா இயக்கம் முயற்சிக்கிறது. இந்தப் புத்தாக்கத் தொழில்முனைவுகளுக்கான நிதி, அவர்களுக்கான கடன் உத்தரவாத நிதி மற்றும் அடல் புத்தாக்க இயக்கம் ஆகியவை உள்ளிட்ட பல திட்டங்கள் நிதி வழங்குகின்றன. இந்த புத்தாக்கல் புது முனைவுகளுக்கு துவக்கத்திலிருந்து சில ஆண்டுகளுக்கு வரி இல்லாமையும், சில வரி விலக்குகளும் வழங்கப்படுகின்றன.

ஆனால் இந்த முனைவுகளுக்குப் பல சட்டச் சவால்கள் காணப்படுகின்றன. புத்தாக்கல் புத்தொழில் முனைவுகளுக்கு இந்தியாவிலுள்ள நெறிமுறைகள் மிகவும் சிக்கலாகவும் உள்ளதால் அவற்றைச் செயல்படுத்த இந்த முனைவுகள் தடுமாறுகின்றன. புத்தாக்கத் தொழில்முனைவு எது என்பது பற்றியும் தெளிவு இல்லை.

ஆகவே, ஒழுங்குமுறை அமைப்பில் குழப்பமும், தெளிவின்மையும் காணப்படுகின்றன. இது அல்லாமல், புத்தாக்கத் தொழில் முனைவுகளின் புதிய கண்டுபிடிப்புகளைக் காப்பாற்ற அறிவுசார் காப்புரிமை சட்ட அமைப்புகளை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியப் புத்தாக்கப் புதுமுனைவுச் சூழலில் பல ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் காணலாம். அமெரிக்கப் புத்தாக்கப் புதுமுனைவுச் சூழலில் தொழில்முனைவுக்கும், புத்தாக்கங்களுக்கும் மிகுந்த அழுத்தம் தரப்படுகிறது. அந்நாட்டில் பலவகையான புது முனைவுகளுக்கு மூலதன நிதி வழங்கு நிறுவனங்களும், கருணை முதலீட்டாளர்களும் உள்ளனர். ஆனால், ஜப்பானில் பாரம்பரிய வணிகச் சூழலே உள்ளது. இங்கு பெரிய நிறுவனங்களுக்கே மதிப்பு அதிகம். ஆனால் அந்நாட்டிலும் தற்போது தொழில்முனைவுகளுக்கும், புத்தாக்கங்களுக்கும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டில் புத்தாக்கப் புதுத் தொழில் முனைவுகளை ஊக்கப்படுத்த ஜப்பான் புத்து யிரூட்டல் அணுகுமுறை மற்றும் ஜப்பான் புத்தாக்க வலைத்தொடர் ஆகியவை உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவிலும், ஜப்பானிலும் நிலவும் சூழலை ஒப்பிடும் போது, இந்தியாவின் புத்தாக்கத் தொழில்முனைவுச் சூழல் இளமையானது, மெல்ல மெல்ல வளர்ந்துவருவது. ஆனால், தொழில்முனைவையும், புத்தாக்கங்களையும் தோற்றுவிக்க புத்தாக்கப் புது முனைவு இந்தியா திட்டம் துவங்கியதன் பின் இந்தியா நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. இந்தியப் புத்தாக்கப் புது முனைவுச் சூழலில் தொழில்நுட்பத்திற்கும், மின்மயமாக்கலுக்கும் அதிக அழுத்தம் தரப்பட்டு, அவற்றிற்கு வேகமாக வளரும் மிகப்பெரிய நுகர்வோர் சந்தை உள்ளது.

புத்தாக்கப் புதுமுனைவுத் திட்டத்தின்கீழ் விளிம்பு நிலைச் சமூகங்கள் உள்ளிட்ட பல தொழில்முனைவுகளுக்கு பலவகையான ஊக்கங்களும், ஆதரவுகளும் வழங்கப்படுகின்றன. இதனால் விளிம்புநிலைச் சமூகத்தினுடைய மேம்பாடு வலுத்துள்ளது. விளிம்புநிலை மக்கள் தொழில்முனைவுகளை மேற்கொள்ளவும் அவர்களுக்காக பல புதிய வேலைவாய்ப்புகளும் கிடைத்துள்ளன. உதாரணமாக நிமிர்ந்து நில் இந்தியா திட்டத்தின்கீழ் பெண்களுக்கு. பட்டியலின வகுப்பு மற்றும் பட்டியலினப் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் புதிய தொழில்முனைவுகளை மேற்கொள்வதற்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. இதைப் போலவே மாற்றுத் திறனாளிகளுக்கும் நிதி உதவிகள் வழங்க தேசிய மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு நிதி வாரியம் உதவி செய்கிறது. இத்திட்டங்களினால் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் தங்களுடைய தொழில்முனைவுகளுக்கு நிதி வசதி பெறுவதில் தடங்கல்கள் நீங்கியுள்ளன.

இந்த முனைவால் விளிம்புநிலை மக்களுக்குப் பலனளிக்கக்கூடிய வேளாண்மை, மருத்துவ சிகிச்சை, கல்வி போன்ற துறைகளிலும் புத்தாக்கப் புதுமுனைவு வளர்ச்சி ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. வேளாண் துறையில் இந்தப் புதுமுனைவுகளால் குறு, சிறு விவசாயிகள் சந்தையை அணுகுவதற்கும், அவர்கள் விவசாயத்திற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளைப் பெறுவதற்கும் வாய்ப்புகளை வழங்க முடியும். மருத்துவத்துறையில் வசதியில்லாத மக்களுக்கு அவர்களின் செலவிடும் தன்மைக்கு ஏற்ப மருத்துவ வசதி கிடைக்க இப்புது முனைவுகள் உதவலாம். கல்வித்துறையில் விளிம்புநிலை மக்களின் குழந்தைகள் தரமான கல்வி பெற இம்முனைவுகள் உதவலாம். இது அல்லாமல், இந்தப் புதுமுனைவுகளால் மகளிர் வல்லமை பெற்று விளிம்புநிலைச் சமூகங்களில் உள்ள மகளிர், பொருளாதாரத்தின் மைய நீரோட்டத்தில் பங்கு பெற ஏதுவாகிறது. இந்த இயக்கம் துவங்கியதிலிருந்து மகளிரால் துவக்கப்பட்ட புத்தாக்கப் புதுமுனைவுகள் 50 சதவிகிதம் உயர்ந்துள்ளதாக வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் அறிக்கை கூறுகிறது. இதைப் போலவே, முன்பு வசதி வாய்ப்புகள் இல்லாததால் புறம் தள்ளப்பட்ட பட்டியலின வகுப்பினரும், பட்டியலினப் பழங்குடி இனத்தினைச் சேர்ந்த தொழில்முனைவோரும் பொருளாதார மைய நீரோட்டத்தில் இணைவதற்கு ஏதுவாக இத்திட்டங்கள் உள்ளன. இது அல்லாமல், இந்த முனைவு, இந்தியப் பொருளாதாரத்திற்கு பெரும் ஊக்கத்தை அளித்ததோடு, பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவியுள்ளது. நாஸ்காம்மின் ஒரு அறிக்கையின்படி, இந்தியாவின் புத்தாக்கப் புதுத்தொழில் துவங்கு சூழலினால் 2025 வாக்கில் 1.2 முதல் 1.5 கோடி வரை வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வலைதளம்சார் வணிகம், நிதித்

தொழில்நுட்பம், மருத்துவம்சார் தொழில்நுட்பப் புத்தாக்கப் புது முனைவுகளினால் மிகக் கணிசமான அந்நிய முதலீடுகள் கிடைக்கப்பெற்று, இந்தியப் பொருளாதாரம் மேம்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளுக்குப் பின்னும் இந்த புத்தாக்கத் தொழில் முனைவுகளால் விளிம்புநிலைச் சமூகத்தின் மீது மிகக் குறைந்த தாக்கமே ஏற்பட்டுள்ளது. பெருமளவிலான புத்தாக்கப் புதுமுனைவுகள் நகர்ப்புறங்களில் மேல்தட்டு மக்களால் இயக்கப்படுகின்றன. ஆக்ஸ்ஃபாம் இந்தியாவின் ஒரு அறிக்கையின் படி, இந்தியாவின் 17 சதவிகித புத்தாக்கப் புதுமுனைவுகள் மட்டுமே மகளிரால் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 1 சதவிகிதத்திற்கும் குறைவான இம்முனைவுகளே மாற்றுத் திறனாளிகளால் உருவாக்கம் பெற்றுள்ளன. இது அல்லாமல், மருத்துவம் மற்றும் கல்வித்துறைகளில் உருவாக்கப்பட்டுள்ள புத்தாக்கப் புதுமுனைவுகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலுள்ள வசதியானவர்களுக்கே உபயோகப்படுகின்றன. இது அல்லாமல், விளிம்புநிலைகளிலுள்ள மக்கள் எதிர் கொள்ளும் அமைப்பு சார்ந்த சவால்களான சமுதாயப் புறக்கணிப்பு, கல்வி மற்றும் பயிற்சித் திறன்களை அணுக இயலாமை, அதிக நிதி உதவி இல்லாமை ஆகியவற்றை இந்த முனைவு சரியாக கவனிக்கவில்லை. இந்தச் சவால்களினால் விளிம்புநிலை மக்கள் தொழில்முனைவுச் சூழலில் பங்கேற்று இந்த முனைவினால் பயன்பெற முடியவில்லை.

**முடிவாக:**

புத்தாக்கப் புதுமுனைவுத் திட்டம் தொழில்முனைவுகளையும், புத்தாக்கங்களையும் போற்றுவதற்கு உதவுகிறது. புத்தாக்கப் புது முனைவுகள் உருவாக அவற்றிற்கு நிதி உதவியும், வழிகாட்டுதல்களும், பிற ஆதரவுச் சேவைகளும் வழங்க ஏதுவான சூழலை இந்த முனைவு உருவாக்கியுள்ளது. ஆனால் இந்த முனைவுகளுக்குப் பல சட்டச் சவால்கள் காணப்படுகின்றன. புத்தாக்கப் புத்தொழில் முனைவுகளுக்கு இந்தியாவிலுள்ள நெறிமுறை அமைப்புகள் மிகவும் சிக்கலாக உள்ளதால் அவற்றைச் செயல்படுத்த இந்த முனைவுகள் தடுமாறுகின்றன. புத்தாக்கத் தொழில்முனைவு எது என்பது பற்றியும் தெளிவு இல்லை. ஆகவே, ஒழுங்குமுறை அமைப்பில் குழப்பமும், தெளிவின்மையும் காணப்படுகின்றன. மேலும் விளிம்புநிலை மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய வேளாண்மை, மருத்துவ சிகிச்சை மற்றும் கல்வித் துறைகளில் புத்தாக்கப் புதுமுனைவுகள் உருவாக இந்த முனைவு உதவி செய்துள்ளது. ஆனால், இந்த முயற்சிகளுக்குப் பின்னும் இந்தப் புத்தாக்கப் புதுத்தொழில் முனைவுகளால் விளிம்புநிலைச் சமூகத்தின் மீது மிகக் குறைந்த தாக்கமே ஏற்பட்டுள்ளது. பெருமளவிலான புத்தாக்கப் புதுமுனைவுகள் நகர்ப்புறங்களில் மேல்தட்டு மக்களால் இயக்கப்படுகின்றன. இத்தகைய முயற்சிகளுக்குப் பின்னும் இந்தப் புத்தாக்கல் புதுத்தொழில் முனைவுகளால் விளிம்புநிலைச் சமூகத்தின் மீது மிகக் குறைந்த தாக்கமே ஏற்பட்டுள்ளது. பெருமளவிலான புத்தாக்கப் புதுமுனைவுகள் நகர்ப்புறங்களில் மேல்தட்டு மக்களால் இயக்கப்படுகின்றன. ஆகவே, இந்தியாவில் விளிம்புநிலை சமூகத்தினரிடையே தொழில்முனைவை ஊக்குவிக்க அவர்களுக்கான தனித்தன்மையோடு முழுமையான அணுகுமுறை தேவைப்படுகிறது. இந்த அணுகுமுறையில் இந்த விளிம்பு நிலையிலுள்ள மக்கள் புத்தாக்க புதுமுனைவுகளை மேற்கொள்ள அமைப்பு முறைகளான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

கூடுதலாக இந்தியப் புத்தாக்கத் தொழில்முனைவுச் சூழலை அமெரிக்கா, ஜப்பான் நாட்டு சூழல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சில ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் காணப்படுகின்றன. அமெரிக்காவில் முதிர்ந்த பல தரப்பட்ட புத்தாக்கல் தொழில்முனைவுச் சூழல்கள் இருக்கும் நிலையில் ஜப்பானில் பாரம்பரியத் தொழில்முனைவுச் சூழலே உள்ளது. ஆனால் அவர்களும் தொழில்முனைவுகளையும், புத்தாக்கங்களையும் போற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். ஆனால், இந்தியாவில் புத்தாக்கப் புதுமுனைவுச் சூழல் இளமையாகவும், மெல்ல உருப்பெற்று வரும் நிலையிலும் உள்ளது. ஆனால், இம்முயற்சிகளால் சமீப காலங்களில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த முனைவுகளால் புத்தாக்கப் புது முனைவுகளுக்கு நிதி வசதிகளும் வழி காட்டுதல்களும் பிற ஆதரவுச் சேவைகளும் கிடைக்கப் பெற்று இந்தியாவில் தொழில் முனைவுகளுக்கும், புத்தாக்கங்களுக்கும் ஏதுவான சூழ்நிலை உருவாகியுள்ளது.

**- ரெபண்ட் ஜூயால்,**

ஆசிரியர், அஸ்ஸாம் பல்கலைக்கழகம், சில்சார்.

சொல்லப்படாத கதை

# சுதந்திரப் போராளி காகாஜி இராமசாமி

– ஜெ.சுமதி

**தமிழ்நாட்டில் மன்னார்குடி என்னும் நகரில் பிறந்து, தனது நாட்டிற்காகவும் மக்களுக்காவும், ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பை அளித்து, தன்னுயிர் நீத்தவர் தோழர் "காகாஜி இராமசாமி" அவர்கள். அவருடைய வாழ்கை வரலாற்றையும் விடுதலைப்போரில் அவருடைய வீரதீரச் செயல்களையும், தியாகத்தையும் இக்கட்டுரையில் காண்போம்.**

இந்தியா ஒரு சிறந்த நாடு, வளமான கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் கொண்டிருக்கும் தேசம். பல இன மக்களையும், பல மொழி பேசும் மக்களையும் ஒருங்கே கொண்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலம் இந்தியாவை ஆங்கிலேயர் தங்களது காலனி ஆதிக்கத்தின் பிடியில் கொண்டு வந்து நம்மை அடிமைப்படுத்தி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற பல வகைகளில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றனர். இந்நிலையில் நமது தாய்த்திரு நாட்டிலேயே நாம் அடிமைகளாக அவதிப்படுவதை விரும்பாத பலர் ஆங்கிலேயர் ஆட்சியை பல்வேறு வகைகளில் எதிர்க்கத் துணிந்தனர். இந்திய விடுதலைக்காக உயிர் தியாகம் செய்த தலைவர்கள் ஏராளம். தேசியவாத உணர்வு இந்தியாவில் வேரூன்றத் தொடங்கியது

விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கிய நிகழ்வாக 1857ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகம் நடந்தது. போராட்டத்தைத் தொடங்கி ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக முதலில் கிளர்ச்சி செய்யத் துணிந்தவர் மங்கள் பாண்டே ஆவார்.

மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால் நேரு போன்றவர்களின் தலைமையில் சுதந்திரப் போரில் ஈடுபட்டவர்கள் பலர் இருந்தனர். அவ்வாறு ஈடுபட்ட பல பெரியோர்களின் போராட்டங்களும், தியாகங்களும், சரியான முறையில் ஆவணப்படுத்தப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் மறைந்துபட்டன.

இந்திய சுதந்திரப் போராட்டம் என்பது நாட்டின் பல இடங்களிலும் நடைபெற்ற ஒரு நிகழ்வாகும். பகத்சிங், வாஞ்சிநாதன், திருப்பூர் குமரன், ஜான்சி ராணி போன்ற பலரின் தீரச்செயல்கள் அனைவரும் அறிந்தவை. ஆயினும் நமது தாய்மண்ணின் விடுதலைக்காக தியாகங்கள் பல செய்து தன்னுயிர் நீத்த பல பெரியோர்களின் வரலாறு வெளி உலகிற்குத் தெரியாமலேயே இருந்து வருகின்றது.

தமிழ்நாட்டில் மன்னார்குடி என்னும் நகரில் பிறந்து, விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பை அளித்து, உயிர் நீத்தவர் "காகாஜி இராமசாமி" அவர்கள்.

கும்பகோணம் நகருக்குத் தெற்கே 40 கிலோமீட்டர் தொலைவில் மன்னார்குடி அமைந்துள்ளது. மன்னார்குடியின் அடையாளமான ஸ்ரீ இராஜகோபால ஸ்வாமி கோவில் உயர்ந்து நிற்கிறது. அமைதியான, செழிப்பான தோற்றத்தைக் கொண்டது அவ்வூர். ஆங்கிலேயர்கள் நகரங்களுக்கு வரி விதித்ததால், மன்னார்குடி நகரும் அதனால் பாதிக்கப்பட்டது.

காக்காஜி இராமசாமி 1909ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் தேதி தேசிகாச்சாரி, கோமளவல்லி ஆகியோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். மன்னார்குடி பள்ளியில் கல்வி கற்றார். பள்ளிப் பருவத்திலேயே இராமசாமி அவர்கள் மகாத்மா காந்தியின் கொள்கைகளினால் ஆழமாக ஈர்க்கப்பட்டார். அவர் காந்தியின் புத்தகங்களைப் படித்து, அவரைப் பற்றி மற்றவர்களுடன் பேசி, காந்தியின் போதனைகளின் அடிப்படையில் தனக்கான கருத்துக்களை உருவாக்கத் தொடர்ந்து முயன்றார். தேசியவாதம் பற்றிய இந்த உற்சாகம், சுதந்திரத்திற்கான அவரது நீண்ட நெடிய போராட்டத்தின் தொடக்கமாக அமைந்தது. உண்மையான தேசபக்தராக மாறுவதற்கான முதல் அடியை



காகாஜி இராமசாமி

அவர் எடுத்தார். அவருள் சுதந்திர தாகம் தழைத்து வளர்ந்தது.

1882ஆம் ஆண்டில், இந்தியர்களுக்கான உப்பு வரியை ஆங்கிலேயர்கள் அறிவித்தனர், இந்தியர்கள் தாங்களாகவே உப்பை உற்பத்தி செய்து விற்பனை செய்வதை இது தடை செய்தது. இந்தியர்கள் ஆங்கிலேயர்களிடமிருந்து உப்பை வாங்கவும், அதற்கு வரியும் செலுத்த வேண்டியிருந்தது. இது ஒட்டுமொத்த இந்திய மக்களையும் கொதிப்படையச் செய்தது. உணவில் உப்பு ஒரு முக்கிய அங்கமாக இருந்தது. உப்பு போன்றவற்றுக்கு வரி விதிப்பிற்கு எதிராகவும், 1919ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ரௌலட் சட்டத்திற்கு எதிராகவும் ஓர் இயக்கம் நடத்துவது என்று காந்தி முடிவு செய்தார். விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய நிகழ்வாக மகாத்மா காந்தி அவர்களால் 1920ஆம் வருடம் செப்டம்பர் மாதம் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக "ஒத்துழையாமை இயக்கம்" தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1920 முதல் 1922 வரை நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் பல்வேறு இடங்களில் போராட்டக்காரர்கள் பங்குகொள்வதைப் பார்த்த போது, நாமும் நமது தாய் நாட்டிற்காக போராட்டங்களில் ஈடுபட வேண்டும் என்று அவர் துணிந்தார். அந்த நேரத்தில் நடந்த சில விடுதலை இயக்கங்களில் அவர் நேரடியாக ஈடுபடவும் தொடங்கினார்.

மகாத்மா காந்தி அவர்கள் வடக்கே உப்பு சத்தியாகிரகத்தை அறிவித்த போது, இந்தியாவின் தெற்கிலும் ஆர்ப்பாட்டம் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் இராஜாஜி அவர்கள் தலைமையில் உப்பு சத்யாகிரகம் தொடங்கிய போது, மற்றொரு சுதந்திரப் போராட்ட வீரரான சந்தானத்தின் உதவியுடன், குமட்டித்திடல் என்னும் இடத்தில் இராமசாமியின் சுதந்திரப் போராட்ட வாழ்க்கை தொடங்கியது. உப்பு சத்தியாகிரகத்தைத் தடுத்து நிறுத்த காவல்துறை மேற்கொண்ட முன்னெச்சரிக்கையின் ஒரு பகுதியாக, 1930ஆம் ஆண்டு போலீசார் ஏராளமானோரை கைது செய்தனர். 1932 ஜனவரியில் மன்னார்குடி மண்டல அலுவலகம் முன்பு குமட்டித்திடல் சந்தானம் நடத்தவிருந்த கூட்டத்துக்கு காவல்துறை தடை விதித்தது. ஆயினும் இராமசாமி அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. தடை இருந்தபோதிலும், கூட்டத்தில் அவர் தைரியமாகப் பேசினார், அதற்காக அவர் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் விடுவிக்கப்பட்ட உடனேயே, காவல்துறை அடக்குமுறைக்கு சிறிதும் அஞ்சாமல் அரசாங்கத்திற்கு எதிரான தனது போராட்டங்களை இராமசாமி தொடர்ந்தார். விடுதலைப் போராட்டத்தை அவர் தனது தாய்நாட்டிற்குச் செய்யும் தொண்டாகவும், மக்களுக்கான சேவையாகவும் செய்தார்.

மே 1930இல், ஆங்கிலேயர்களின் கொடுங்கோன்மை பற்றிய முழக்கங்களுடன் சுவரொட்டிகளை ஒட்டியதற்காக, இராமசாமி திருச்சி சிறையில் ஆறு மாதங்கள் பெருந்தலைவர் காமராஜர் இருந்த அறையிலேயே அவர் வைக்கப்பட்டார். விடுதலையான பிறகு அவர் மீண்டும் 1933இல் அந்நிய ஆடைப் புறக்கணிப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டார். அப்போது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இராகவனால் தாக்கப்பட்டார். இராமசாமி கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார். ஆனால் இராமசாமி போலீசாரிடமிருந்து பிடிபடாமல் காயங்களுடன் அங்கிருந்து தப்பித்தார்.

அவரது புகைப்படம் அனைத்து காவல் நிலையங்களிலும் பொது இடங்களிலும் ஒட்டப்பட்டது. காயங்களுக்கு சென்னையில் உள்ள பள்ளி நண்பரின் வீட்டில் மறைந்திருந்து இராமசாமி சிகிச்சை பெற்று வந்தார். காவல்துறையினரிடம் இருந்து தப்பித்து விடலாம் என்ற நம்பிக்கையில் இருந்த போது, நண்பரின் வீட்டில் நடந்த திடீர் சோதனையில் சிக்கினார். கைது செய்யப்பட்ட இராமசாமி கர்நாடகாவில் உள்ள பெல்லாரி சிறையில் மூன்று மாதங்கள் வைக்கப்பட்டார்.

கால்கள் மரத்துப் போனாலும், ஊற வைத்த ஆட்டுத் தோலில் நின்று கொண்டே ஒரு நாளைக்கு மூன்று முதல் நான்கு மணி நேரம், வேலை பார்க்க வேண்டும். செக்கிலிருந்து

எண்ணெய் எடுக்கும் வேலை அவருக்கு கொடுக்கப்பட்டது. ஓர் எதிர்ப்புச் செயலாக, இராமசாமியும் அவரது சக கைதிகளும் சேர்ந்து செக்கின் மையக் கம்பத்தை உடைத்தனர், அது இல்லாமல் எண்ணெய் எடுக்க முடியாது. இந்த நிகழ்ச்சி அன்னாருக்கு இன்னொரு சித்திரவதையை உறுதி செய்தது. அவர் அனுபவித்த பல இன்னல்களுக்கு ஒரு உதாரணமாக இந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டலாம்.

இராமசாமியின் எதிர்காலப் போராட்டங்களைத் தடுக்கும் நோக்கத்தில், காவல்துறை அவரது குடும்பத்தினருக்கு தொந்தரவு கொடுக்கத் தொடங்கியது. தொடக்கத்தில், இராமசாமியின் தந்தை தேசிகாச்சாரிக்கு கிராம நகராட்சியில் இருந்த வேலை அரசாங்கத்தால் பறிக்கப்பட்டதால் அவர் வேறு வேலையைத் தேட வேண்டியிருந்தது. இராமசாமியைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் போலீசார் அவரது வீட்டில் அடிக்கடி சோதனைகள் நடத்தத் தொடங்கினர். சோதனை நடக்கும் ஒவ்வொரு முறையும், வீட்டில் உள்ள பாத்திரங்கள் சேதமடைந்து, அதீத விளைவுகள் ஏற்பட்டன. இந்த நிகழ்வுகளின் பின்னணியிலும், அவருடைய மற்ற குழந்தைகளின் நலன் கருதியும், இராமசாமி வீட்டிற்குள் நுழைவதை தேசிகாச்சாரி தடை செய்தார். இதனால், இராமசாமிக்கு தங்குவதற்குக் கூட இடமில்லாமல் போயிற்று. அவரது உறவினர்களும், அரசாங்கத்தின் அடக்குமுறைக்குப் பயந்து அவருக்கு உதவ மறுத்துவிட்டனர்.

அதன் பிறகு, இந்த நாடே அவருக்கு சொந்தமாக மாறியது. இராமசாமியின் போராட்ட குணம் குறைந்து விட்டதாக போலீசார் கருதினர். ஆனால் அது தவறு; அது பன்மடங்கு அதிகரித்துவிட்டது. நாடு முழுவதும் சுதந்திரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில், சாதி, மதப் பிரிவினைகளும், மூடநம்பிக்கைகளும் வியாபித்திருந்தன. ஆனால், எந்த பாரபட்சமும் காட்டாமல், தன் நண்பர்களின் வீட்டில் தங்கி, சுதந்திர போராட்டத்திற்கான செயல்களில் இராமசாமி ஈடுபட்டார்.

1935ஆம் ஆண்டில், இராமசாமி காங்கிரஸ் காரிய கமிட்டியில் உறுப்பினராகச் இணைந்து தேசிய இயக்கத்தைத் தொடர்ந்து வழிநடத்தினார். அந்தக் காலகட்டத்தில், ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்த போது இராமசாமியின் வற்புறுத்தலின் பேரில், பிரச்சாரம் செய்ய மன்னார்குடிக்கு வந்து குன்னியூர் சிவசுப்ரமணிய ஐயர் வீட்டில் தங்கினார், இது இந்திய விடுதலைப் போராட்டத்தில் மன்னார்குடியின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இதைத் தொடர்ந்து, இராமசாமி அவர்கள் 1940இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு நீடாமங்கலம் சப் ஜெயிலில் மூன்று வாரங்கள் சிறை வைக்கப்பட்டார். விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடந்த ஒவ்வொரு சுதந்திரப் போராட்டத்திலும், இயக்கத்திலும் இராமசாமி தீவிரமாகப் பங்கேற்றார். அவரது போக்கு ஒட்டுமொத்த காவல் துறையினருக்கும் பெரும் கோபத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியது. அவர்களால் அவரை கட்டுப்படுத்த இயலவில்லை, ஒவ்வொரு முறையும் அவரை ஒரு குறிப்பிட்ட காலம் வரை சிறையில் அடைக்க மட்டுமே அவர்களால் முடிந்தது.

ஆகஸ்ட் 8, 1942 அன்று பம்பாயில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மகாத்மா காந்தி அவர்கள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தொடங்கினார். இந்த இயக்கம், வன்முறையற்றதாக அகிம்சை வழியில் இருக்க வேண்டும் என்று காந்தி அவர்கள் அறிவித்தார். ஆயினும் எதிர்ப்பு இயக்கத்தின் போது பல்வேறு இடங்களிலும் நடைபெற்றதைப் போலவே, மன்னார்குடி கிராமமும் வன்முறையின் களமாக மாறியது. மன்னார்குடி மண்டல அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள் அனைத்தும் எரித்துத் தீக்கிரையாக்கப்பட்டன. மன்னார்குடி தந்தி நிலையம் போர்க்களமாக மாறியது. பெரும் அவசர காலங்களில் விரைவான செய்திகளை அனுப்பப் பயன்படுத்தப்பட்ட தந்தி உபகரணங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இவை அனைத்திற்கும் இராமசாமிதான் காரணம் என்று அனைவரும் நம்ப வேண்டும் என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இராகவன் விரும்பினார். இந்த நோக்கத்துடன், 'இராமசாமியை 'பார்த்தவுடன் துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டும்' என்று அரசிடம் பரிந்துரைத்து அதற்கான ஆணையைப் பெற்றார்.

"இராமசாமிக்கு அடைக்கலம் கொடுத்தவர் குற்றவாளியாக கருதப்படுவார்", "அரசாங்கத்திற்கு எதிராக செயல்படும் ஒவ்வொரு கிளர்ச்சியாளர்களும் தண்டிக்கப்படுவார்" என்றும் ஒவ்வொரு நாளும் நகர சதுக்கத்தில் ஓர் உரத்தப் பிரகடனம் செய்யப்பட்டது. இராமசாமிக்கு இவை அனைத்தும் மிகவும் கொடுமையாகவும், மோசமானதாகவும் தோன்றியது.

ஆனாலும் அவர் ஒரு போதும் தனது மன உறுதியை இழக்கவில்லை. மற்ற சுதந்திர ஆர்வலர்களின் உதவியுடன், அவர் கர்ணாவூரில் உள்ள தனது நண்பர் முத்துக்குமாரசாமியின் வீட்டில் தஞ்சம் அடைந்தார். அதன் பிறகு மாறுவேடத்தில் நடமாடத் தொடங்கினார். பின்னர், திருச்சி, ஈரோடு மற்றும் பிற நகரங்களுக்கு நடந்தே சென்றார். கீர்த்திவாசன் என்கிற இந்திப் பண்டிதரின் உதவியுடன் இராமசாமி திருவண்ணாமலையில் உள்ள மகரிஷி ரமணரின் ஆசிரமத்தில் சிறிது காலம் தலைமறைவாக இருந்தார். அவரால் அங்கு அதிக நாட்கள் தங்க முடியவில்லை. அவரைத் தேடும் வேட்டை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஒரே இடத்தில் தங்கியிருந்தால், அடைக்கலம் கொடுத்த காரணத்திற்காக மகரிஷியும் சிறைபிடிக்கப்படுவார் என்ற காரணத்தினால் அவர் மீண்டும் கீர்த்திவாசனின் உதவியுடன், பவானி அருகே உள்ள கவுந்தப்பாடியில் வசித்து வந்த குப்பண்ணா என்பவரது வீட்டிற்கு, மாறுவேடத்தில் சென்றார்.

குப்பண்ணா செல்வாக்குமிக்கவர் என்பதால், இராமசாமி அவர் வீட்டில் இருப்பது தெரிந்திருந்தும், போலீசார் அங்கு சோதனை நடத்தத் தயங்கினார்கள். ஆனால் உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக, இராமசாமி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படாமல் அவரை கைது செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. இது குறித்து குப்பண்ணாவிடம் விளக்கம் அளித்த போலீசார், இராமசாமியை தங்களிடம் ஒப்படைக்காவிட்டால் குப்பண்ணாவுக்கு பெரும் சிரமம் ஏற்படும் என தெரிவித்தனர். இது தெளிவற்ற வெறும் அச்சுறுத்தலாக இருந்ததினால், இராமசாமியை காவல்துறையிடம் ஒப்படைக்க குப்பண்ணா மறுத்துவிட்டார். போலீசார் வீட்டை விட்டு வெளியேறியதையடுத்து குப்பண்ணா இராமசாமியை பவானி கோர்ட்டில் சரணடையச் செய்தார். சரணடைந்த இராமசாமியை மன்னார்குடி மாஜிஸ்திரேட்டிடம் ஒப்படைக்க பவானி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். பவானி போலீசார் இராமசாமியை கைவிலங்கிட்டு இரயில் மூலம் மன்னார்குடிக்கு அழைத்து வந்தனர்.

இச்செய்தியை அறிந்த மன்னார்குடி மக்கள் ஹரித்ரா நதி ரயில் நிலையத்தில் குவிந்தனர். இரயில் நிலையத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இராகவனும் காத்திருந்தார். பொதுமக்களும் உற்சாகத்துடன் இராமசாமியைப் பார்க்க ஆவலுடன் காத்திருந்தனர். இராமசாமிக்கு கிடைத்த வரவேற்பு அவர் எதிர்பார்த்தது அல்ல. ஒரு சில போலீஸ்காரர்களும், கை விலங்குகளும் அவர் எதிர்பார்த்தது தான். பெரும் மக்கள் கூட்டத்தை இரயில் நிலையத்தில் பார்த்தபோது இராமசாமி அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார் என்றே சொல்லலாம்.

இராமசாமியின் கால்கள் இரயில் நிலைய நடைமேடையைத் தொட்ட தருணத்தில், மாஜிஸ்திரேட்டின் உத்தரவை சிறிதும் மதிக்காமல், இராமசாமியிடம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இராகவன் அவர்கள் துஷ்பிரயோகம் செய்து, அவரை அடித்துத் துன்புறுத்தினார். கடும் வார்த்தைகளையும் கொட்டினார். 'நாங்கள் உன்னை இங்கு தேடிக்கொண்டிருக்கும் போது, நீ காகம் போல் இங்கும் அங்கும் பறக்கத் துணிகிறாய்!' என்று இழிவாகப் பேசினார் அப்போது அங்கிருந்த பொதுமக்கள் இராகவன் அவர்களின் கொடுஞ் செயல்களைக் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தனர். மன்னார்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் இது போன்ற ஒரு நிகழ்வினை இதற்கு முன்னர் மக்கள் கேள்விப்பட்டதோ, பார்த்ததோ இல்லை. இராமசாமி அவர்கள் ரயில் நிலையத்திலிருந்து காவல்நிலையத்திற்கு மூர்க்கத்தனத்துடன் இழுத்துச் செல்லப்பட்டார்.

அவரைப் பலவாறு துன்புறுத்திய பிறகும் காவல்துறையினரின் கோபம் குறையவில்லை. காவல்நிலையத்தில் இருந்து இராமசாமியின் வேதனையான அலறல், அருகில் உள்ள நீதிமன்றத்தில் இராமசாமிக்கு சாட்சியாக இருந்த குமட்டித்திடல் சந்தானத்தின் காதுகளை எட்டியது. காவல்துறையின் சித்ரவதை காரணமாக இராமசாமிக்கு ஒரு காதில் கேட்கும் திறன் இல்லாமல் போனது. ஏதோ தவறு இருப்பதாக உணர்ந்த சந்தானம், இராமசாமி அவர்கள் அவதிப்படுவதைக் கண்டுபிடிக்க காவல் நிலையத்திற்கு விரைந்தார்.

இராகவனின் உத்தரவு மீறல் குறித்தும், இராமசாமியின் உடல் நிலை குறித்தும் மாஜிஸ்திரேட்டிடம் சந்தானம் தெரிவித்தார். காவல்துறையினரின் மனிதநேயமற்ற செயலைக் கண்டு மிகவும் அதிருப்தியடைந்த மாஜிஸ்திரேட், உடனடியாக அவர்களை அழைத்து கண்டித்தார். நீதிமன்றத்தில் இராமசாமி விசாரிக்கப்பட்டு, ஒன்றரை ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். மன்னார்குடி நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்ததும் இராமசாமி அவர்கள் அல்லிபுரம் சிறையில் அடைக்கப்பட்டார்.

தேசபக்தியின் காரணமாகவும், விடுதலை வேட்கையின் காரணமாகவும் இத்தனைத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு, அவருடன் சிறையில் அடைக்கப்பட்ட மக்களின் மனதில் தேசபக்தியையும், தேசிய உணர்வுகளையும் இராமசாமி தொடர்ந்து தூண்டி வந்தார். இதனால் ஆத்திரமடைந்த சிறை அதிகாரிகள் இராமசாமியை சரமாரியாகத் தாக்கி அவரது இடது முழங்காலை உடைத்து, அவருக்குப் பல இன்னல்களை ஏற்படுத்தினர். அன்றிலிருந்து இராமசாமி தள்ளாடியபடியே நடக்க வேண்டியிருந்தது. தண்டனைக் காலம் முடிந்து விடுதலைக்குப் பின் இராமசாமி மன்னார்குடிக்கு திரும்பினார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், 1947ஆம் ஆண்டின் தொடக்கம், விடுதலைப் போராட்டங்களின் உச்சக்கட்டமாக இருந்தது. 1947 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சுதந்திரம் அறிவிக்கப்பட்டது. இந்தியத் திருநாடு ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திர நாடாக மலர்ந்தது.

மன்னார்குடி இரயில் நிலையத்தில் இராமசாமி அடிபட்ட போது, இன்ஸ்பெக்டர் இராகவன் தமிழில் "காக்கா", "காக்கா" என்று அழைத்தார். இந்நிகழ்ச்சிக்கு சாட்சியாக இருந்தவர்கள் இராமசாமி அவர்களை மரியாதை நிமித்தமாக "காக்காஜி" என்று அழைக்க ஆரம்பித்தனர். மேலும் தேடப்படும் குற்றவாளிகளை அடையாளம் காண, காவல்துறை அவர்களுக்கு புனைப்பெயர்களை வைப்பது, இன்றும் நடைமுறையில் உள்ளது. போராட்டங்களில் இராமசாமி பங்கேற்ற சமயங்களில், காவல்துறை அவரை அணுகுவதற்கு முன்பே, அவர் காகம் போல பறந்து சென்றுவிடுவார். இதனால் இராமசாமியை காக்கா இராமசாமி என்று போலீசார் அழைக்க ஆரம்பித்தனர். இந்தப் பெயர் மக்கள் மத்தியில் பிரபலமாகத் தொடங்கியது. சிறிது காலத்திற்குப் பிறகு, மக்கள் அவரை மரியாதையுடன் "காக்காஜி இராமசாமி" என்ற அடைமொழியுடனேயே அழைக்கத் தொடங்கினர்.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், இராமசாமி அவர்கள் அரசியலில் ஈடுபட்டு தொடர்ந்து இருபத்தேழு ஆண்டுகள் மன்னார்குடி மாநகராட்சி கவுன்சிலராகவும், துணை மேயராகவும் இருந்துள்ளார். இந்திய விடுதலைக்குப் பிறகும் மதுக்கடைகளை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபட்டு, ஒரு மாதம் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை பெற போராடியதைப் போல், சுதந்திரம் அடைந்த பிறகும் மக்கள் நலனுக்காக இராமசாமி பாடுபட்டார். அவரது தியாகத்தைப் போற்றும் வகையில், இந்திய அரசு, இந்திய சுதந்திரத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய தினத்தில், 1972இல், அவருக்குத் தாமரைப் பட்டயம் வழங்கி கௌரவித்தது. காக்காஜி இராமசாமி ஜனவரி 7, 1995 அன்று காலமானார். காக்காஜி அவர்கள் தனது இளமைப் பருவம் முதல் தனது இறுதி மூச்சு வரை நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் வாழ்ந்தார்.

வரலாற்று நிகழ்வு என்பது எப்பொழுதும் நம்மைச் சிந்திக்க வைக்க வேண்டும். அநீதியை எதிர்த்து நிற்கத் தயாராக இருப்பவர்கள் எப்போதும் இருப்பார்கள். அவர்கள் போராடத் தயாராக இருப்பார்கள். மக்களை ஒன்று திரட்டுவார்கள். சிறு நீர்த்துளிகள் பெருங்கடல்களை உருவாக்குவது போல, அறியப்படாத இந்தச் சிறு, சிறு வீரர்கள் அனைவரும் இந்தியாவின் சுதந்திரத்திற்குத் தங்கள் பங்களிப்பைத் தந்தார்கள். காக்காஜியைப் போலவே, இலட்சியத்திற்காகப் போராடிய அஞ்சலை அம்மாள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி எனப் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதையும் அவர்களுடைய தியாகத்தையும் சேவையையும் என்றும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட பலருடைய தியாகங்களும், போராட்டங்களும் முறையாக ஆவணப்படுத்தப்படாமலும், அங்கீகரிக்கப்படாமலும் உள்ளன. எழுச்சியூட்டும் இத்தகைய தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தகுதியான அங்கீகாரத்தை வழங்க வேண்டும். அவர்களின் வீரதீரப் போராட்டத்தின் நோக்கத்தை அனைவரும் அறியுமாறு செய்ய வேண்டும். அவர்களின் கதைகளை நண்பர்கள், உறவினர்களிடம் பகிர்ந்து கொள்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பலாம். வருங்கால சந்ததியினர் கற்றுக்கொள்வதற்கும், இவர்களின் வாழ்க்கை வரலாறு உதாரணமாக அமையும்.

**- ஜெ. சுமதி,**

உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, சி.பி.ஆர். இந்தியவியல் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

# இந்தியாவின் வளர்ச்சிக் கதையைப் புரட்சிகரமானதாக்குதல்


இந்தியாவில் தொழில்முனைதல் என்பது சுயசார்பு பாரதத்தின் இன்றியமையாத ஒரு தூணாக இன்று விளங்குகிறது. தொழில்முனைதலானது இந்தியாவின் சூழல்சார் அமைப்பில் ஒருங்கிணைந்து இருப்பதோடு வரலாற்றில் நீண்டகாலமாகவே இடம்பெற்றும் வந்திருக்கிறது. பிரகாசமான எதிர்காலத்தைக் கட்டமைப்பதை நோக்கி இது பயணம் செய்கிறது. நாம் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளையில் குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவானது ஸ்டார்ட் அப்புகளின் மையமாக உருவாகி வருகின்றது. புத்தாக்கம், தொழில்நுட்ப மேம்பாடு, ஆதரவான அரசுக் கொள்கைகள் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக இது நிகழ்ந்துள்ளது. முக்கியமான இந்தச் சூழலில் இந்தியாவின் தொடக்கநிலைத் தொழில்களுக்கான சூழல்சார் அமைப்பின் பரிணாம வளர்ச்சியையும், தேசிய அளவிலும், பன்னாட்டு நிலையிலும் தற்போது அடைந்துள்ள இடத்தையும், உலக அளவில் இது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் ஆய்வு செய்வது என்பது இன்றியமையாததாகும்.

75ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை 15 ஆகஸ்ட் 2022 அன்று இந்தியா நிறைவு செய்தபோது, பிரதமர் நரேந்திரமோடி அமிர்த காலத்திற்கான அதாவது அடுத்த 25 ஆண்டுக்கான இலக்கினை வகுத்துத் தந்துள்ளார். இந்தியாவுக்கும், இந்தியர்களுக்குமான வளர்ச்சியின் புதிய சிகரங்களை அடைய வேண்டும் என்பதே இலக்காகும். இந்தியாவின் அதிகரித்து வரும் தொடக்கநிலைத் தொழில்களுக்கான சூழல்சார் அமைப்பானது, நாட்டின் தொழில்முனைவோர்களுக்கு இடையே புத்தாக்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய உந்துதலை வழங்குகின்றது. நாட்டின் தொலைநோக்குப் பார்வை @2047 என்பதை நிறைவு செய்வதற்கு நம்மை இது முன்னோக்கிச் செலுத்தும்.

வளர்ச்சி பெற்று வரும், நம்பிக்கை தரும் ஆனால் அதே சமயம் அங்கும் இங்குமாக சிதறுண்டு இருக்கும் சூழல்சார் அமைப்பிற்கு ஒருங்கிணைந்த உதவியை வழங்கும் வகையில் இந்திய அரசானது முயற்சி செய்து கொண்டு வருகிறது. இந்தியாவில் அனைவரையும் உள்ளடக்கிய புத்தாக்கங்களுக்கும், தொழில்முனைதலுக்குமான ஒரு தளம் தேவை என்பதை இந்திய அரசு உணர்ந்துள்ளது. ஆகவே தான், ஸ்டார்ட்அப் இந்தியா என்ற முன்னெடுப்பு நடவடிக்கையை அரசு 2016இல் தொடங்கியது. சூழல்சார் அமைப்பை மேம்படுத்துதல், உருமாற்றுதல், வளர்த்தெடுத்தல் ஆகிய நோக்கங்களுடன் இது தொடங்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோராக விரும்புகின்றவர்கள், இப்பொழுதுதான் தொழில்முனைவோராக மலரத் தொடங்கியவர்கள் என அனைவரையும் ஒருங்கிணைக்கும் வகையில் இது தொடங்கப்பட்டுள்ளது.

ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்பிற்கான ஒருங்கிணைப்புத் துறையாக தொழிற்சாலை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (Department for Promotion of Industry and Internal Trade - DPIIT) செயல்படுகின்றது. இந்தியா முழுவதும் தொழில்முனைதலுக்கான ஆர்வ அலையை எழுப்புவதற்கும் ஸ்டார்ட் அப்புகள் மற்றும் சூழல்சார் அமைப்பிற்கு உதவுபவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஸ்டார்ட் அப் இந்தியாவின் 19 அம்ச செயல்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தடைகளைக் குறைத்தல் என்பதே முக்கியமான நோக்கமாக உள்ளது. 1. எளிமைப்படுத்துதல் மற்றும் சொத்து, 2. நிதி ஆதரவு மற்றும் ஊக்கத்தொகைகள், 3. தொழிற்சாலை கல்விப்புலம் இணைந்து பங்கேற்றல் மற்றும் இன்குபேஷன் ஆகிய மூன்று தூண்களின் வழியாக வளர்ச்சியை விரைவுபடுத்துவதும் நோக்கம் ஆகும்.

இந்திய ஸ்டார்ட்அப் சூழல்சார் அமைப்பானது தொடர்ச்சியாகப் பரிமாணம வளர்ச்சி பெற்று வருவதோடு விரிவடைந்தும் வருகிறது. விரைவாக மாறி வரும் உலகச் சூழலுக்கு ஏற்ப புத்தாக்கங்களையும் கண்டுபிடித்து வருகிறது. தொழிற்சாலை மற்றும் உள்நாட்டு வர்த்தக




மேம்பாட்டுத் துறையானது 90 ஆயிரத்திற்கும் அதிகமான தொழில் அலகுகளை ஸ்டார்ட் அப்புகளாக அங்கீகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட ஸ்டார்ட் அப்புகள் 9.78 இலட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளதாக அறிக்கை தெரிவிக்கின்றது. வளர்ச்சி பெற்று வரும் நகரங்களில் (அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3) 48 சதவிகிதத்திற்கும் அதிகமான ஸ்டார்ட் அப்புகள் செயல்படுகின்றன. இன்று 48 சதவிகிதத்திற்கும் அதிகமான ஸ்டார்ட்அப்புகளில் குறைந்தபட்சம் ஒரு பெண் இயக்குநராவது உள்ளார்.

நாட்டின் தொழில் முனைவுக்கான சூழல்சார் அமைப்பானது நிதி பெறுதல் நடவடிக்கைகளில் கடந்த சில ஆண்டுகளில் பன்மடங்கு வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்திய ஸ்டார்ட்அப்புகள் 2022ஆம் ஆண்டில் மட்டுமே 25 பில்லியன் டாலருக்கும் மேலாக நிதியைத் திரட்டி உள்ளன. மேலும் விரைவாகவும் செயலூக்கமாகவும் உள்ள சூழல்சார் அமைப்பினால் இந்திய யுனிகார்ன்களும் அதிகரித்து வருகின்றன. இவையெல்லாம் சேர்ந்து புத்தாக்கத் தீர்வுகளை வழங்குவதோடு மிகப்பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் செய்கின்றன. இந்தியாவில் 2016–17 நிதியாண்டு வரை சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் ஒரே ஒரு யுனிகார்ன் மட்டுமே புதியதாக உருவானது. ஆனால் கடந்த 4 ஆண்டுகளில் (2017–18 நிதி ஆண்டு முதல்) இந்த எண்ணிக்கையானது பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் புதியதாகச் சேரும் யுனிகார்ன்களின் எண்ணிக்கை, ஆண்டுக்காண்டு 66 சதவிகித வளர்ச்சி என்ற அபரிதமான நிலையை அடைந்துள்ளது. இன்று இந்தியாவில் 108க்கும் அதிகமான யுனிகார்ன்கள் உள்ளன. இதனால் உலகிலேயே யுனிகார்ன்களைப் பொறுத்தளவில் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உருவாகியுள்ளது.

டிஜிட்டல் மயமாக்கலை ஏற்று நடைமுறைப்படுத்தும் போக்கு அதிகரித்ததும், ஸ்டார்ட் அப்புகள் வளர்ச்சி பெறும் ஆரம்பக்கட்டங்களிலேயே அவற்றுக்கு எளிதாக மூலதனம் கிடைத்ததும் நிதி உதவி கிடைப்பதற்கு மிக முக்கியமான காரணங்கள் ஆகும். ஸ்டார்ட்அப் இந்தியா திட்டமானது தொடக்க காலகட்டம் மற்றும் முதிர்ச்சி அடையும் காலகட்டம் என இரண்டு காலகட்டங்களிலும் ஸ்டார்ட் அப்புகளுக்கு நிதி கிடைப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தி உதவும் வகையிலான பல்வேறு செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஏஞ்சல் முதலீட்டாளர்கள் மற்றும் துணிகர மூலதன நிறுவனங்கள் ஆகியவற்றிடம் இருந்து தொடக்க நிலையிலேயே நிதி உதவி பெறுவதற்கு உதவுகின்ற அத்தகைய ஒரு திட்டமாக ஸ்டார்ட் அப் தொடக்கநிலை நிதியத் திட்டம் (SIFSS) உள்ளது. 945 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலான இந்தத் திட்டம் கருத்துருவாக்கத்தை நிரூபித்தல், மூலவகையை உருவாக்குதல், பரிசோதனை ரீதியில் பொருளை உற்பத்திச் செய்து பார்த்தல், சந்தை நுழைவு மற்றும் வியாபாரமாக்குதல் ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிக்கின்றது. அடுத்து வரும் நான்கு ஆண்டுகளில் (2024ஆம் ஆண்டு வரை) 300 இன்குபேட்டர்கள் மூலமாக 3600 தொழில்முனைவோர்களுக்கு இந்தத் திட்டம் உதவி செய்யும். ஸ்டார்ட் அப்புகளுக்கு நிதி உதவி செய்கின்ற மற்றொரு அரசுத் திட்டமாக 2016இல் நிதியங்களுக்கான நிதியம் (Fund of Funds Scheme - <https://pib.gov.in/PressReleaseIframePage.aspx?PRID=1895964> FFS) திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தில் (Securities Exchange Board of India - SEBI) பதிவு செய்துள்ள மாற்று முதலீட்டு நிதியங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும். பிரதிபலனாக இந்த மாற்று முதலீட்டு நிதியங்கள் ஸ்டார்ட்




அப்புகளில் முதலீடு செய்யும். 10,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுத் தொகையுடன், நிதியங்களுக்கான நிதியம் என்ற இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஸ்டார்ட் அப்புகளின் முதிர்ச்சிக் காலகட்டங்களிலும் அவற்றுக்கு ஆதரவு அளித்தல், அவற்றின் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு நிர்வாக மற்றும் ஒழுங்குமுறை சவால்களை எதிர்கொள்ளும் அதே நேரத்தில், தேவைகளுக்கு ஆரம்பகட்டத்தில் நிதிசார் கடனை எளிதில் பெறுவதில் ஏற்படும் சிரமமே ஸ்டார்ட்அப்புகள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. வர்த்தக வங்கிகள் போன்ற மரபார்ந்த கடன் வழங்கும் நிறுவனங்கள் அதே பழைய விதிகளையே பின்பற்றுகின்றன. உத்திரவாதங்களுடன் கூடிய கடன்களை ஸ்டார்ட்அப்புகளுக்கு வழங்கும் வகையில் அரசானது ஸ்டார்ட் அப்புகளுக்கான கடன் உத்திரவாதத் திட்டம் (credit guarantee schemes - CGSS) ஒன்றை நிறுவியுள்ளது. செபியில் பதிவு பெற்று மாற்று முதலீட்டு நிதியங்களின் கீழ் பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகள், வங்கிப்பணி சாராத நிதி நிறுவனங்கள் (Non Banking Financial Companies - NBFC) மற்றும் தொடக்கநிலையில் கடன் வழங்கும் நிதியங்கள் (Venture Debt Funds - VDFs) மூலம் தொழில் வளர்ச்சி, உள்நாட்டு வர்த்தகத் துறை (Department for Promotion of Industry and Internal Trade - DPIIT) அங்கீகரித்துள்ள ஸ்டார்ட் அப்புகளுக்கு உத்திரவாதத்துடன் கூடிய கடன்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. தகுதிவாய்ந்த கடன் பெறுவோர்களுக்கு அதாவது DPIIT அங்கீகரித்துள்ள ஸ்டார்ட் அப்புகளுக்கு உறுப்பினராக உள்ள நிதி அமைப்புகள் வழங்குகின்ற கடன்களுக்கு ஈடாக குறிப்பிட்ட வரம்பு வரை உத்திரவாதக் கடன்கள் வழங்குவதை கடன் உத்திரவாதத் திட்டங்கள் இலக்காகக் கொண்டுள்ளன

புத்தாக்கத்தை ஊக்குவித்தல், சூழல்சார் அமைப்பை புரட்சிகரமானதாக மாற்றுகின்ற ஸ்டார்ட்அப்புகளை அங்கீகரித்தல் ஆகிய நோக்கங்களுடன், இந்திய அரசானது 2020ஆம் ஆண்டில் தேசிய ஸ்டார்ட்அப் விருதுகளை அறிவித்துள்ளது. தனிச் சிறப்புமிக்க ஸ்டார்ட்அப்புகளைப் பாராட்டிக் கொண்டாடுவதே இந்த விருதுகள் வழங்குவதின் நோக்கமாகும். நிதிசார்ந்த இலாபம், புத்தாக்கம், அனைவரையும் உள்ளடக்குதல் என்ற அம்சங்களில் மட்டுமல்லாமல் சிறந்த இந்தியாவை உருவாக்குவதற்காக சமுதாயத்தில் கணக்கிடக்கூடிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பிரத்யேகத் திறன்களை நிரூபித்த ஸ்டார்ட்அப்புகளுக்கு விருதுகள் வழங்கப்படும்.

இன்று, உலகில் மிக விரைவாக வளர்ச்சி பெற்று வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா தவிர்க்க இயலாத வகையில் முன்னணியில் உள்ளது. இந்த உயர் நிலைமையானது நீண்டகாலமாக கிடைத்து வந்த அரசின் ஆதரவு, நமது புத்தாக்கக் கண்டுபிடிப்பாளர்களின் முயற்சிகள் ஆகியவற்றின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது. எனினும் இது இந்தியப் பொற்காலத்தின் ஆரம்பம் மட்டுமே ஆகும். ஏனெனில் இப்பொழுதுதான் நாம் அமிர்தகாலத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம். உலகில் பிரகாசமான நாடாக இந்தியா திகழ இதுவே தக்க தருணம் ஆகும். நமது நாட்டை இதுவரை இல்லாத வகையில் உச்சநிலைக்கு கொண்டு நாம் கொண்டு செல்ல வேண்டும். அனைவரையும் உள்ளடக்குதல், நீடித்து நிலையாக இருத்தல் என்ற நமது கனவுகளுடன் இந்தியாவைக் கட்டமைக்க வேண்டும் நமது ஆற்றல்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே நாம் எந்தவொரு தடையையும் மீறிப் பயணிக்க முடியும். ஆகவே ஒருங்கிணைந்த ஒரே தேசமாக நாம் ஒன்றாவோம்.

●

# தொழில் காப்பகங்கள் - வளர்ச்சியை சாத்தியமாக்குபவை



புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் இன்குபேட்டர்கள் எனப்படும் தொழில் காப்பகங்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் புத்தாக்கங்களுக்கும் தேவையான கட்டமைப்பு, வழிகாட்டுதல், நிதி ஆதரவு உள்ளிட்ட அனைத்து வகையான வளங்களையும் தொழில் காப்பகங்கள் தான் வழங்குகின்றன. இந்தியாவில் 400க்கும் மேற்பட்ட தொழில் காப்பகங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை தொடக்க நிலையில் உள்ளன. இந்தியாவில் இப்போது உள்ள தொழில் காப்பகங்களின் திறன்களை மேம்படுத்தவும், புதிய தொழில் காப்பகங்களை அமைப்பதற்குத் தேவையான ஆதரவை வழங்கவும் புத்தொழில் இந்தியா (Startup India) திட்டம் உறுதிபூண்டிருக்கிறது.

### தொழில் காப்பகங்கள் என்றால் என்ன?

தொழில் முனைவோர் தங்களின் தொழில் மற்றும் வணிகத்தை மேம்படுத்துவதற்கு, குறிப்பாக தொடக்க நிலையில் மேம்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை தொழில் காப்பகங்கள் வழங்குகின்றன.

### அடல் புத்தாக்க இயக்கம் என்றால் என்ன?

அடல் புத்தாக்க இயக்கம் என்பது இந்தியாவில் புத்தாக்கத்தையும், தொழில் முனைவுக் கலாச்சாரத்தையும் மேம்படுத்துவதற்காக மத்திய அரசால் உருவாக்கப்பட்ட முதன்மையான திட்டங்களில் ஒன்றாகும்.

புத்தாக்கத்தை ஊக்குவித்தல், இந்தியாவின் தொழில்முனைவுச் சூழல் அமைப்பை புரட்சிகரமானதாக மாற்றுதல் ஆகியவை தான் அடல் புத்தாக்க இயக்கத்தின் முதன்மைப் பணியாகும். இது பல்வேறு பிரிவுகளை ஒரே குடையின் கீழ் உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். இந்தியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்குத் தேவையான கொள்கைகளையும், திட்டங்களையும் அடல் புத்தாக்க இயக்கம் உருவாக்குகிறது. தொழில்முனைவுத் துறையில் உள்ள பல்வேறு பங்குதாரர்களிடையே கூட்டாண்மைக்கான வாய்ப்புகளையும், அதற்கான தளத்தையும் உருவாக்கித் தரும் பணியையும் அடல் புத்தாக்க இயக்கம் மேற்கொள்கிறது.

### அடல் தொழில் காப்பக மையம் என்றால் என்ன?

இந்தியாவில் அடல் தொழில் காப்பக மையங்கள் என்ற பெயரிலான புதிய தொழில் காப்பக மையங்களை உருவாக்குவதற்கு உதவி செய்ய அடல் புத்தாக்க இயக்கம் உறுதி பூண்டிருக்கிறது. அவ்வாறு உருவாக்கப்படும் அடல் தொழில் காப்பக மையங்கள், புதிதாக உருவாக்கப்படும் புத்தாக்கத்தின் அடிப்படையிலான புத்தொழில் நிறுவனங்கள் புதிய உயரத்தை அடைவதற்கும் வணிகத் துறையில் நிலைத்து நிற்பதற்கும் தேவையான உதவிகளைச் செய்யும்.

இந்தியாவில் தங்கள் மூலமாகத் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு அதிநவீன கட்டமைப்பு வசதிகள், மூலதன உதவிகள், செயலாக்க வசதிகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலமாகவும், அவற்றுக்கு வழிகாட்டுவதற்கு துறை சார்ந்த வல்லுநர்களை வழங்குவதன் மூலமாகவும், நாடு முழுவதும் உலகத்தரம் வாய்ந்த தொழில் காப்பக வசதிகளை செய்து தருவதில் அடல் தொழில் காப்பக மையங்களுக்கு அடல் புத்தாக்க இயக்கம் உதவி செய்கிறது.




இது தவிர, வணிகத் திட்டமிடல் உதவி, மூலதன நிதி பெறுவதற்கு உதவுதல், தொழில்துறை கூட்டாண்மைகள், பயிற்சிகள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்குத் தேவையான பிற வசதிகளையும் இந்த அமைப்பு வழங்குகிறது.

இவற்றுக்கு எல்லாம் மேலாக, பெரும்பான்மையான அடல் தொழில் காப்பக மையங்கள், உற்பத்தித்துறை, போக்குவரத்துறை, எரிசக்தித்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை, வேளாண்துறை, நீர், துப்புரவு, இன்டர்நெட் ஆப் திங்ஸ், சைபர் செக்யூரிட்டி போன்ற துறைகள் சார்ந்துதான் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு துறையிலும் வரலாறு காணாத வகையிலான தொழில்நுட்பப் புத்தாக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இவ்வாறு செய்யப்படுகிறது.


**தோற்றுவிக்கப்பட்ட தொழில் காப்பக மையம் என்றால் என்ன?**

இந்தியாவில், அண்மைக்காலங்களில் கல்வித்துறை, தொழில்துறை, முதலீட்டாளர்கள், தொழில்முனைவோர், அரசமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் என பல்வேறு தரப்பினரும் புதிய தொழில் காப்பகங்களை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு உருவாக்கப்பட்டவை தோற்றுவிக்கப்பட்ட புத்தொழில் காப்பக மையங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை புதிதாக உருவாக்கப்பட்டவை அல்ல; ஏற்கெனவே உருவாக்கப்பட்டவை என்பது தான் இவற்றின் சிறப்பாகும். தொழில்காப்புத் திறனை பல மடங்கு மேம்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும் இவற்றுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும். அதேபோல், இத்தகைய தொழில் காப்பக மையங்கள், பல்கலைக்கழகங்கள், பெரு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சாதகமான சூழல் அமைப்பை ஏற்படுத்துவதற்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட தொழில் காப்பக மையங்களுக்கு நிதியுதவியை அதிகரிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலம் அவற்றுக்கு புத்துயிரூட்டுவதற்கு அடல் புத்தாக்க இயக்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளும். தோற்றுவிக்கப்பட்ட தொழில்காப்பக மையங்களை உலகத் தரத்திற்கு உயர்த்துவதன் மூலம் புத்தொழில் நிறுவனங்களின் சூழல் அமைப்பை மிகப்பெரிய அளவில் மாற்றுவதற்கு இந்தத் திட்டம் உதவி செய்கிறது. தோற்றுவிக்கப்பட்ட தொழில் காப்பக மையங்கள் புத்தாக்கம் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்கும். அதுமட்டுமின்றி, நாட்டில் வலிமையான தொழில் முனைவுச் சூழல் அமைப்பை ஏற்படுத்துவதற்கும் உதவும்.

**அடல் தொழில் காப்பக மையங்களை நிறுவுவது எவ்வாறு?**

அடல் தொழில் காப்பக மையங்களை எவ்வாறு நிறுவுவது என்பது குறித்த விரிவான விவரங்களை அறிய https://aim.gov.in/pdf/GUIDELINES_FOR_SETTING_UP_OF_ATAL_INCUBATION_CENTRES_(AICs).pdf என்ற இணையதள முகவரிக்குச் சென்று நிதி ஆயோக் விதிகளைப் பார்க்கவும்.




**அடல் தொழில் காப்பக மையங்கள் குறித்த விவரங்களை இணையச் சுற்றுலா மூலம் என்னால் பார்க்க முடியுமா?**

ஆம், உங்களால் முடியும். அடல் தொழில் காப்பக மையங்கள் குறித்த விவரங்களை மேலோட்டமாக அறிய (Link: AIM) என்ற இணைப்பைப் பார்க்கவும்.

**மார்க் (MAARG) தளம் என்றால் என்ன?**

புத்தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்வதற்காக மார்க் என்ற தளத்தை மத்திய அரசின் தொழில் மற்றும் உள்ளூர் வணிக மேம்பாட்டுத் துறை தொடங்கியுள்ளது. மார்க் தளம் தான் புத்தொழில் இந்தியா திட்டத்தின் தேசியக் காப்பாளர் தளமாகும். இந்தத் தளம் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்டது. இந்தியாவில் புத்தொழில் நிறுவனக் கலாச்சாரத்தை ஊக்குவித்து, புத்தாக்கம், தொழில்முனைவு ஆகியவற்றுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய வலிமையான சூழல் அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் புத்தொழில் நிறுவனச் சூழல் அமைப்பை மேலும் ஊக்குவிப்பது தான் இதன் நோக்கமாகும்.

மார்க் தளம் என்பது அனைத்துத் துறைகளைச் சார்ந்த, அனைத்து செயல்பாடுகளைச் சார்ந்த, பல்வேறு நிலைகளில் உள்ள, பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த, பல்வேறு பின்னணி கொண்ட புத்தொழில் நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல், ஆலோசனை வழங்குதல், உதவி செய்தல், வலிமைபடுத்துதல், வளர்ச்சி ஆகிய சேவைகளை (Mentorship, Advisory, Assistance, Resilience, and Growth - MAARG) ஓரிடத்தில் வழங்குவதற்கான தளம் ஆகும்.

**மார்க் தளத்தின் நோக்கங்கள் என்ன?**

மார்க் தளம் மூன்று அடுக்கு நோக்கங்களைக் கொண்டது. துறை சார்ந்த வழிகாட்டுதல், அரவணைத்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லுதல், புத்தொழில் நிறுவனங்களுக்கு அவற்றுக்கு வாழ்நாள் காலம் முழுவதும் ஆதரவு அளித்தல் ஆகியவை தான் மார்க் தளத்தின் மூன்று அடுக்கு நோக்கங்கள் ஆகும்.

**மார்க் தளத்தில் பதிவு செய்வதற்கு ஏதேனும் இணையதள இணைப்புகள் உண்டா?**

ஆம், மார்க் தளத்தில் பதிவு செய்வதற்கான ஆன்லைன் இணைப்புகள் உண்டு. மார்க் தளத்திற்குச் செல்ல இந்த இணைப்பைச் சொடுக்குங்கள். (Link: MAARG (startupindia.gov.in)

**மார்க் தளம் எவ்வாறு செயல்படுகிறது?**

மார்க் தளத்திற்குள் ஒவ்வொரு பயனாளரும், புத்தொழில் நிறுவனத்தின் பிரதிநிதியாகவோ, அல்லது வழிகாட்டுபவராகவோ உள்நுழையலாம். உங்களைப் பற்றிய விவரங்களை பதிவு செய்த பின்னர், அந்தத் தளம் செயற்கை நுண்ணறிவுத் திறனை பயன்படுத்தி, அவர்களின் துறை சார்ந்த, நிலை சார்ந்த, செயல்பாட்டுத் திறன் சார்ந்த, வழிகாட்டுபவர்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் பட்டியலை வழங்கும். அந்தப் பட்டியலில் உள்ள ஏதேனும் ஒரு புத்தொழில் நிறுவனம் / வழிகாட்டுபவருடன் தொடர்புகொள்ள விரும்பினால், அதற்கான இணைப்பு வேண்டுகோளை பயனாளர் அனுப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட புத்தொழில் நிறுவனமோ, வழிகாட்டுபவரோ அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டால் அவர்களுடன் இணையலாம். இந்தத் தொடர்பின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காகவும், கருத்துத் தெரிவிப்பதற்காகவும் ஒவ்வொரு இணைப்பும் கண்காணிக்கப்படும். ஒவ்வொரு சந்திப்புக்கும் பிறகு வழிகாட்டுபவர்களும், புத்தொழில் நிறுவனங்களும் அந்த சந்திப்பு குறித்த விவரங்களை, அதாவது சந்திப்பின் நேரம், தலைப்பு உள்ளிட்ட விவரங்களை அவர்களின் தகவல் பலகையில் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள். சந்திப்பின் விவரங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றால், அவர்களால் அடுத்த சந்திப்புக்குச் செல்ல முடியாது. தர உறுதிப் பயன்பாட்டுக்காக வழிகாட்டுபவர்களுடனான சந்திப்பு குறித்த காணொலிகளும்,



உரையாடல்களும் பதிவு செய்யப்படும் என்பதை பயனாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

**கோஹோர்ட் அடிப்படையிலான நிகழ்ச்சிகள் என்றால் என்ன?**

கோஹோர்ட் அடிப்படையிலான நிகழ்ச்சிகள் (Cohort-Based Programmes - CBPs) எனப்படுபவை, வழிகாட்டுவோர் தளத்தில் ஸ்டார்ட்அப் சூழல் அமைப்பு பங்குதாரர்களுடன் இணைந்து வழங்கப்படும் நிகழ்ச்சிகளாகும். அந்தத் தளத்தில் தொழில் அமைப்புகள், தொழில் காப்பகங்கள், விரைவுபடுத்துவோர், கல்வியாளர்கள் மற்றும் பல்வேறு புத்தொழில் நிறுவன அமைப்புகள் (யுனிக்கான்கள், வெற்றிகரமான புத்தொழில் நிறுவனங்கள், தொழில் வல்லுநர்கள் போன்றவை) போன்ற பங்குதாரர்கள் கோஹோர்ட் அடிப்படையிலான குறிப்பிட்ட காலவரைக்கு உட்பட்ட வழிகாட்டுவோர் நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். கோஹோர்ட் அடிப்படையிலான நிகழ்ச்சிகள், புத்தொழில் இந்தியா திட்டத்தின் பிராரம்ப், எஸ்சிஓ ஸ்டார்ட்அப் ஃபோரம் போன்ற நிகழ்வுகளின் போதும் நிகழ்த்தப்படும். தர உறுதிப் பயன்பாட்டுக்காக வழிகாட்டுபவர்களுடனான சந்திப்பு குறித்த காணொலிகளும், உரையாடல்களும் பதிவு செய்யப்படும் என்பதை பயனாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

**இது கட்டணம் செலுத்திப் பெறப்படும் சேவையா?**

இல்லை, மார்க் தளத்தில் வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் முழுக்க முழுக்க இலவசமே ஆகும்.

**மார்க் தளத்தைத் தொடர்புகொள்ள கட்டணம் இல்லா தொலைபேசி அழைப்பு எண் ஏதேனும் உள்ளதா?**

ஆம், உள்ளது. மார்க் தளம் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிய 1800 115 565 என்ற கட்டணம் இல்லா தொலைபேசி அழைப்பு எண்ணில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு குறித்த விவரங்களை விளக்குக**

சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு (IITM Incubation Cell) என்பது சென்னை ஐஐடியில் செயல்பட்டு வரும் பல்வேறு துறை சார்ந்த புத்தாக்கங்களையும், தொழில் முனைவுகளையும் ஊக்குவிக்கக் கூடிய பிரிவுகளில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காகவும், ஒருங்கிணைப்பதற்காகவும் செயல்பட்டு வரும் அமைப்பு ஆகும். உயர்நிலை ஆராய்ச்சிகள், தொழில்துறையினருக்கு இடையிலான உரையாடல்கள் ஆகியவற்றையும் இந்த அமைப்பு ஒருங்கிணைக்கிறது. இந்தியாவில் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் முதல் ஆராய்ச்சி அமைப்பான சென்னை ஐஐடி ஆராய்ச்சிப் பூங்காவையும் (IITM Research Park) இந்த அமைப்பு தான் ஒருங்கிணைக்கிறது. ஊரக, சமூக மற்றும் தொழில்துறை தொழில்நுட்பங்கள் சார்ந்த தொழில் காப்பில் ஏராளமான சாதனைகளை இந்த அமைப்பு படைத்திருக்கிறது.

இலாப நோக்கமற்ற எட்டாவது பிரிவின் கீழ் தொடங்கப்பட்ட நிறுவனமான சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு (IITMIC) மத்திய அரசின் ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம், மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறை, தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மேம்பாட்டு வாரியம், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றால் தொழில்நுட்பத் தொழில் காப்பகம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னை ஐஐடி மாணவர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பிற தொழில் முனைவோர், வலிமையான தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களை வெற்றிகரமாக தொடங்குவதற்கும், தொழில்துறை முன்னேற்றத்திற்கும், ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மைகளை வழங்குவதற்கும் சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு உதவி செய்கிறது.

**சென்னை ஐஐடி தொழில் காப்பகப் பிரிவின் பணிகள் என்னென்ன?**

சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு (IITM Incubation Cell - IITMIC) சென்னை ஐஐடியில் புத்தாக்கங்களையும், தொழில்முனைவையும் வளர்த்தெடுத்தல், மேற்பார்வையிடுதல் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைப்பு அமைப்பாகும். ஊரகத் தொழில்நுட்பத் தொழில் காப்பகம் (RTBI) போன்ற அமைப்புகளின் மூலம் தொழில் காப்பகச் சேவை வழங்குவதில் நீண்ட அனுபவம் கொண்ட சென்னை ஐஐடி, மின்னணு பிரிவு, சிஎப்ஐ, சிஎஸ்ஐஇ, சென்னை ஐஐடி தொழில் முனைவோர் அமைப்பு ஆகியவற்றின் மூலமாகவும் புத்தாக்கங்களைப் படைத்திருக்கிறது. இந்த அனுபவங்களைப் பயன்படுத்தி, சென்னை ஐஐடியில் மேற்கொள்ளப்படும் புத்தாக்கம் சார்ந்த செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், மேம்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதுடன், தொழில் முனைவை வலுப்படுத்துவதற்கும் சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு முயற்சி செய்கிறது.

புதிதாக தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு அவற்றின் தொடக்க நிலையில் போட்டி நிறைந்த சந்தையில் நீடித்து நிற்கவும், அடுத்தடுத்த கட்டங்களில் வளர்ச்சி அடையவும் தேவையான ஆதரவை வழங்குவதன் மூலம் தொழில்நுட்பத்தையும், அறிவு சார்ந்த புத்தொழில் நிறுவனங்களையும் வளர்த்தெடுக்க, சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு இலக்கு நிர்ணயித்திருக்கிறது. இடம் மற்றும் உட்கட்டமைப்பு, வணிக ஆதரவு சேவைகளைப் பெறுதல், வழிகாட்டும் சேவை வழங்குதல், தொழில்முனைவோரின் திறன்களை மேம்படுத்த பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல், மூலதன நிதியைப் பெற்றுத்தருதல் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தரவும், பகிர்ந்துகொள்ளவும் சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு திட்டமிட்டிருக்கிறது. இந்தத் தொழில் காப்பகப் பிரிவு வழங்க நினைக்கும் ஆதரவு விரிவானது. சென்னை ஐஐடியில் முழுமையாகவோ, அல்லது சென்னை ஐஐடியின் உறுப்பினர்கள் வழிகாட்டுபவர்களாகவோ, அல்லது ஆலோசகர்களாகவோ இருந்து, பிற நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்தோ உருவாக்கிய தொழில் நுட்பங்கள் / அறிவுசார் சொத்துரிமையைப் பகிர்ந்துகொள்வதும் இந்த அமைப்பு வழங்கும் ஆதரவில் அடங்கும். சமூகம் மற்றும் பாதுகாப்பு சார்ந்து தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் சென்னை ஐஐடியின் தொழில் காப்பகப் பிரிவு ஆர்வம் காட்டுகிறது. இணைப்பு: https://www.iitm.ac.in/research-park/incubation-cell

## தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 78.77 இலட்சம் கிராமப்புற வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும், குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் மத்திய அரசு கடந்த ஆகஸ்ட் 2019 முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, தமிழ்நாட்டில் 21.76 லட்சம் (17.34 சதவீதம்) கிராமப்புற வீடுகளில் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு இருந்தது. 22.03.2023 வரை கூடுதலாக 57 லட்சம் கிராமப்புற வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் உள்ள 1.25 கோடி கிராமப்புற வீடுகளில் 78.77 இலட்சத்திற்கும் (62.76 சதவீதம்) மேற்பட்ட வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் குழாய் மூலம் குடிநீர்த் திட்டம் வாயிலாக 2023–24ஆம் ஆண்டில் 19.26 இலட்சம் கிராமப்புற வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அளித்த அறிக்கையின்படி டிசம்பர், 2024க்குள் அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகவலை மத்திய நீர்வளத்துறை இணையமைச்சர் திரு பிரகலாத் சிங் படேல் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்தார்.

# தொடக்கத் தொழில் சூழல்சார் அமைப்பிற்கான அடித்தளம்

– அனுராக் ஜெயின்

புதிய இந்தியாவின் முதுகெலும்பாக ஸ்டார்ட்அப்புகள் உள்ளன. ஸ்டார்ட் அப்புகளுக்கான சூழல்சார் அமைப்பானது புதிய இளம் தொழில்முனைவோர்களை வலுப்படுத்தி மேம்படுத்துவதோடு அவர்களைப் புத்தாக்கங்களைக் கண்டுபிடிக்கவும் ஊக்கப்படுத்துகிறது. மேலும் புதிய யோசனைகளுடன் வர்த்தகத்தை மேற்கொள்ளவும் புதிய வழிமுறைகளில் வர்த்தகத்தை முயற்சித்துப் பார்க்கவும் ஊக்கப்படுத்துகின்றது. சுதந்திரத்தின் அமிர்த காலத்தில் அதாவது இந்தியா @75ல் இருந்து இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை @2047 வரையிலான காலகட்டத்தில் ஸ்டார்ட்அப்புகளுக்கான சூழல்சார் அமைப்பின் பங்கினை செல்வம் உருவாக்குதல் மற்றும் வளர்ச்சிக்கான உந்துசக்தியாக அரசு அங்கீகரித்துஉள்ளது.



எந்தவொரு பொருளாதாரமும் சுயசார்பு உடையதாகவும் நீடித்த வளர்ச்சி உடையதாகவும் இருப்பதற்குப் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளே அடிப்படையாக அமைகின்றன. புத்தாக்கக் கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்கு தொழில்முனைதல் என்பது உந்துசக்தியாக இருப்பதோடு மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் தனது பங்களிப்பையும் செலுத்துகின்றது. நமது குறிக்கோளான சுயசார்பு இந்தியா என்பதை நோக்கி நாம் செயலாற்றி வரும் போது அதில் புத்தாக்கத்திற்கு உதவுதல் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு ஆதரவு அளித்தல் என்ற இரண்டு முக்கிய கூறுகள் உள்ளன. வளர்ச்சி பெற்ற நாடு என்ற அந்தஸ்தை அடைவதற்கு நாம் மேற்கொள்ளும் பயணத்தின் வேகத்தை இவையே நிர்ணயம் செய்கின்றன.

2016ஆம் ஆண்டில் 500 என இருந்த அங்கீகரிக்கப்பட்ட ஸ்டார்ட் அப்புகளின் எண்ணிக்கையானது பிப்ரவரி 2023ல் 92 ஆயிரமாக அதிகரித்துஉள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயத்தின் அமைப்பு ரீதியிலான மேம்பாடு மற்றும் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றிற்கு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு எடுத்துக்காட்டாக இந்தியாவின் ஸ்டார்ட்அப் சூழல்சார் அமைப்பின் வளர்ச்சிக் கதை உருவாகி வருகின்றது. இன்று, நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 660க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் குறைந்தபட்சம் அங்கீகரிக்கப்பட் ஒரு தொடக்கநிலைத் தொழிலாவது 55க்கும் மேற்பட்ட தொழில் பிரிவுகளில் இவை பரந்துபட்டு செயல்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட ஸ்டார்ட் அப்புகளில் சுமார் 47 சதவிகித ஸ்டார்ட்அப்புகளில் குறைந்தபட்சம் ஒரு பெண் இயக்குநராவது உள்ளார். இந்திய ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்பின் அனைவரையும் உள்ளடக்கும் தன்மை மற்றும் பரந்துபட்ட தன்மை ஆகியன ஊக்கம் அளிப்பதாக உள்ளன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஸ்டார்ட்அப்புகளின் சூழல்சார் அமைப்பின் ஆற்றல் மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு பிரதமர் 16 ஜனவரி 2016–ல் ஸ்டார்ட்அப் இந்தியா செயல்திட்டம் 2016 என்பதை வெளியிட்டார். இந்திய ஸ்டார்ட்அப்புகளின் சூழல்சார் இயக்கத்தின் ஒன்றுடன் ஒன்று எனப் பின்னிப் பிணைந்த வாய்ப்பானது ஒரு ஸ்டார்ட் அப்பின் சராசரி வாழ்க்கைச் சுழற்சியோடு ஒத்திசைவாக உள்ளது: கருத்துருவாக்கம், திட்டத்தை மதிப்பீடு செய்து தகுதி என சான்றளித்தல், ஆரம்ப கட்ட தடம் அறிதல் மற்றும் தகுதி நிலை மதிப்பீடு செய்தல். இந்த ஒவ்வொரு படிநிலையிலும் வேறு வேறு வகையான பங்குதாரர்கள் அல்லது பயனாளிகள் உள்ளனர். எனவே சூழல்சார் அமைப்பிற்கு ''எல்லோருக்கும் பொருந்தும் ஒரே அளவு" என்ற வகையிலான செயல்திட்டமோ அல்லது திட்டங்களோ நடைமுறை சாத்தியம் இல்லாதவை மற்றும் விரும்பத்தகாதவை ஆகும். ஆகவே ஸ்டார்ட்அப் இந்தியா செயல்திட்டத்தின் முக்கியமான தூண்களை வெவ்வேறு வகையான அணுகுமுறைகளுடன் படிப்படியாக செயல்படுத்த வேண்டும் என்று எடுத்துரைக்கிறது. இந்த செயல்திட்டத்தில் 19 செயல்கள் உள்ளன. ''எளிமை மற்றும் சொத்து", "நிதி உதவி அளித்தல் மற்றும் ஊக்கத்தொகைகள்'' மற்றும் "தொழிற்சாலை கல்விப்புல இணைபங்கேற்பு மற்றும் இன்குபேஷன்" போன்ற பிரிவுகளில் செயல்படுத்தக் கூடியதாக இந்த 19 செயல்களும் உள்ளன. இந்த செயல் திட்டமானது'' ஸ்டார்ட் அப்பை" பிரத்யேக பொருளாதார தூணாக அங்கீகரிக்க வேண்டும் என்ற தொனியை வெளிப்படுத்துகிறது. பேரளவில் சூழல்சார் அமைப்பிற்கான முக்கியமான இடையீட்டுச் செயல்களை படிப்படியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வழிவகுத்துள்ளது.

ஒரு இயக்க மாதிரியில் ஸ்டார்ட் அப் இந்தியா முன்னெடுப்பு நடவடிக்கையை செயல்படுத்துவதற்கு தொழிற்சாலை அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையானது (DPIIT) பன்முக செயல் உத்தியை கைக்கொண்டுள்ளது. "சரியான பொருத்தமான குழுவினரை நிறுவனமயமாக்குதல் என்பதில் இருந்து வர்த்தகத்தை எளிமையாக மேற்கொள்வதற்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல், முழுமையான டிஜிட்டல் கொள்கை மற்றும் அமலாக்க நடைமுறைகளை செயலாக்குதல் வரை என இந்த செயல்உத்திகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டு உள்ளன. அதிலும் முக்கியமாக ஒவ்வொரு செயலுக்குமான நடைமுறைபடுத்துதல் கால அளவை விரைவுபடுத்துவது கவனத்தில் கொள்ளப்பட்டு உள்ளது. இந்த முன்னெடுப்பின் தொலைநோக்குப் பார்வை மற்றும் இயக்கவியல் இயல்பு மற்றும் பயனாளிகளின் குடிமையியல் போக்கு ஆகியவற்றை புரிந்து கொண்டு டிபிஐஐடி துறையானது ஸ்டார்ட்அப் இந்திய மையம் என்பதை நிறுவனமயப்படுத்தி உள்ளதோடு செயல்திட்டங்களை அமலாக்குவதற்கான ஒற்றைச்சாளர ஆன்லைன் ஃபோர்ட்டலாகவும் இந்த மையத்தை உருவாக்கியுள்ளது. இந்த மையமானது மைய அச்சு ஆரங்கள் என்ற மாதிரியில் செயல்படுகிறது. ஒவ்வொன்றின் முடிவும் மற்றொன்றின் தொடர்ச்சி என்பதான டிஜிட்டல் திட்ட செயலாக்க முறையாக இது உள்ளது. ஸ்டார்ட்அப், இன்குபேட்டர், அரவணைப்பாளர், முதலீட்டாளர், விரைவுபடுத்துனர் அல்லது பொது நிர்வாகம் செய்பவர் என ஸ்டார்ட்அப் சூழல்சார் அமைப்பின் அனைத்து பங்குதாரர்களும் ஸ்டார்ட்அப் இந்தியா மையத்துடன் தொடர்பு கொள்வதோடு இணைந்தும் பணி செய்யலாம். ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்பின் நிதி தேவைகளை நிறைவு செய்வதற்கு டிபிஐஐடி துறையானது ஸ்டார்ட் அப்புகளுக்கான நிதியங்களுக்கான நிதியம் (FFS), ஸ்டார்ட்அப் இந்தியாவிற்கான தொடக்கநிலை நிதியத் திட்டம் (SISFS) மற்றும் ஸ்டார்ட் அப்புகளுக்கான கடன் உத்திரவாதத் திட்டம் (CGSS) போன்ற திட்டங்களை ஸ்டார்ட் அப் இந்தியா செயல்திட்டத்தில் கூறியுள்ளபடி செயல்படுத்தி வருகின்றது.

இந்த நிதியத் திட்டங்கள் ஸ்டார்ட்அப்புகளுக்கு அவற்றின் ஒட்டுமொத்த வர்த்தக வாழ்க்கைச் சுழற்சி முழுவதற்கும் நிதி கிடைக்க உதவியாக இருக்கும். ஸ்டார்ட்அப் இந்தியாவிற்கான தொடக்கநிலை நிதியத் திட்டமானது ஸ்டார்ட் அப்புகளின் ஆரம்பகட்ட வளர்ச்சிக்கு மானியமாகவோ அல்லது கடனாகவோ நிதியை வழங்குகின்றது. ஸ்டார்ட் அப்புகளுக்கான நிதியங்களின் நிதியமானது அதிக அளவில் வளர்ச்சி பெற்று வரும் ஸ்டார்ட் அப்புகளுக்குத் தேவையான




தனியார் பங்கு மூலதனத்தை திரட்ட உதவுகின்றது. ஸ்டார்ட் அப்புகளுக்கான கடன் உத்திரவாதத் திட்டமானது முதிர்ச்சி அடைந்த ஸ்டார்ட் அப்புகளுக்கு பிணையம் இல்லாத கடன் கிடைப்பதை ஊக்கப்படுத்துகின்றது.

இந்தியாவின் கூட்டாச்சி அமைப்பு முறையில் நமது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்புகளை வளர்த்தெடுப்பதில் மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. அபிவிருத்தி செய்தல் மற்றும் சொத்து உருவாக்கல் ஆகியவற்றின் மூலம் மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஸ்டார்ட் அப் புரட்சியை எடுத்துச் செல்கின்றன. இந்தக் குறிக்கோளுடன் டிபிஐஐடி துறையானது மாநிலங்களின் ஸ்டார்ட் அப் தரவரிசைப்படுத்தலுக்கான சட்டக வரைவு (SRF) என்பதை தொடங்கி உள்ளது. சிறந்த நடைமுறைகளை அடையாளம் காணுதல், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இடையில் பரஸ்பர கற்றுக் கொள்ளுதலை ஊக்கப்படுத்துதல், ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்புகளுக்கான சாதகமான கொள்கைகளை வகுப்பதற்கு மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் உந்துதல் அளித்தல் ஆகியன இந்த வரைவுச் சட்டகத்தின் உட்கூறுகள் ஆகும். தரவரிசைப்படுத்தலுக்கான சட்டக வரைவுகள் அனைவரையும் உள்ளடக்கும் விதமாக கடந்த சில ஆண்டுகளில் உருவாகி உள்ளன. பெரும்பான்மையான மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் இதில் ஈடுபட்டு உள்ளதால் உண்மையில் இது ஒரு தேசிய நடைமுறையாகவே மாறி உள்ளது. இதற்கு சர்வதேச அளவிலும் அங்கீகாரம் கிடைத்து உள்ளது. தரவரிசைப்படுத்தலுக்கான சட்டக வரைவானது ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்படும் திறன் கட்டமைப்பு நடவடிக்கைகளால் முழுமை பெறுகின்றது. மாணவர்களிடம் தொழில்முனைவு கலாச்சாரத்தை வளர்த்தெடுப்பதற்கான ஸ்டார்ட் அப் இந்தியா யாத்திரை, ஸ்டார்ட் அப் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் மற்றும் குழுவினருக்கான பிராந்திய மற்றும் சர்வதேச அறிவுப் பயணங்கள் போன்ற முன்னெடுப்பு நடவடிக்கைகளும் இதில் உள்ளடங்கும்.

நாட்டில் புத்தாக்க கண்டுபிடிப்புகளின் ஆழம், தரம் மற்றும் பரவல், அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் பன்முகத் தன்மை, தொழில்முனைதல் ஆகியவற்றை அடையாளம் காண்பதற்காக டிபிஐஐடி துறையானது தேசிய ஸ்டார்ட்அப் விருதுகளை (NSA) தொடங்கி உள்ளது. நமது முன்னோடி வருடாந்திர தேசிய ஸ்டார்ட்அப் விருதுகளை வழங்கும் போது தினசரி பிரச்சனைகளுக்கு ஆச்சரியகரமான தீர்வுகளை வழங்குகின்ற சில கண்டுபிடிப்புகளையும் நாம் பார்த்து வருகின்றோம். போபால், எர்ணாகுளம், குருகிராம், கொச்சி, லக்னௌ, மர்கோவா, சோனிபட் மற்றும் திருவனந்தபுரம் போன்ற சிறிய நகரங்களில் ஸ்டார்ட்அப் தொடங்கியவர்கள் தேசிய ஸ்டார்ட்

அப் விருதுகளை பெறும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளனர். இந்த வளர்ச்சியானது பிரத்யேகமான புத்தாக்கக் கண்டுபிடிப்புகள் மெட்ரோ நகரங்களைத் தாண்டியும் உள்ளன என்பதற்கு சாட்சியமாக உள்ளது.

நமது மாண்புமிகு பிரதமரின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்காக அவர்களுடனேயே சேர்ந்து கொள்கை மற்றும் செயல்திட்டங்களை வகுத்து வளர்த்தெடுப்பது என்பது நமது முக்கியமான முன்னுரிமைகளில் ஒன்றாக உள்ளது. நமது ஸ்டார்ட் அப் இந்தியா முன்னெடுப்பு நடவடிக்கையின் கீழ் நாம் தேசிய ஸ்டார்ட் அப் ஆலோசனைக் குழு (NSAC) என்பதை அறிமுகப்படுத்தியதன் மூலம் இந்த அணுகுமுறையை நாமும் பின்பற்றுகின்றோம். இந்தக் குழுவின் தலைவராக மாண்புமிகு வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் உள்ளார். தொடர்புடைய அமைச்சகங்கள், துறைகள், அமைப்புகள் ஆகியவற்றில் இருந்து உறுப்பினர்கள், ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்பின் பல்வேறு பங்குதாரர்களின் பிரதிநிதிகள் மற்றும் அலுவல்சாராத உறுப்பினர்கள் என இந்தக் குழுவிற்கு பலவகையாக உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்பை விரிவுபடுத்துதல், கருத்தாக்கம் ஆகியவற்றில் இடையீட்டுச் செயல்பாடுகளுக்கான அம்சங்களை அடையாளப்படுத்துவதிலும் ஸ்டார்ட் அப் இந்தியா முன்னெடுப்பு நடவடிக்கையின் கீழ் தேசிய செயல்திட்டங்களைக் கொண்டு வருவதிலும் இந்தக் குழுவானது முக்கியமான மற்றும் செயலூக்கமான பங்கினை ஆற்றி வருகின்றது. மார்க் (MAARG) தேசிய அரவணைப்புத் திட்டம், இன்குபேட்டர் தகுதிறன் மேம்பாட்டுத்திட்டம், ஸ்டார்ட்அப் இந்தியா முதலீட்டாளர் இணைப்புப் போர்ட்டல், நேவிக் கிராண்ட் சவாலை எதிர்கொள்ளுதல், ஸ்டார்ட் அப் சாம்பியன்கள் 2.0 போன்ற செயல்திட்டங்கள் அனைத்தும் இந்தக் குழுவால் கருத்து நிலையில் வளர்த்தெடுக்கப்பட்டு உள்ளன. பங்குதாரர் முன்னெடுக்கும் பொதுக் கொள்கை தொகுப்பின் ஒரு வெளிப்படையான உதாரணமாக என்எஸ்ஏசி மாறி வந்துள்ளது. சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் புதிய செயல்திட்டங்களை இந்த என்எஸ்ஏசி தொடர்ச்சியாக கருத்துருவாக்கம் செய்து வருகின்றது.

ஜி20 மாநாட்டிற்கு இந்தியா தலைமையேற்றுள்ள நிலையில் நமது திறமைகளை நாம் உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்கான வாய்ப்பு மட்டும் நமக்கு கிடைக்கவில்லை. கூடுதலாக நமது ஜி20 தலைமைத்துவத்தின் ''ஒரு உலகம் ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்'' என்ற மையக்கருத்து சித்தரிக்கின்ற ஒற்றுமையின் நோக்கம் மற்றும் ஒற்றுமைக்கான செயல்பாடு ஆகியவற்றிற்கான வாய்ப்புகளும் நமக்கு கிடைத்து உள்ளன. ஜி20 மாநாட்டு அமைப்புக்கு உள்ளேயே ஸ்டார்ட்அப் 20 என்கேஜ்மெண்ட் குழுவை நிறுவனமயமாக்குதல் என்பது முன்களத்தில் இருந்து பயணிப்பதற்கான மற்றொரு வாய்ப்பினையும் நமக்கு வழங்குகிறது. தொழில்முனைதலுக்கான சூழல்சார் அமைப்பிற்கு ஆதரவு அளிப்பதற்காக உலகை ஒருங்கிணைத்தல் மற்றும் உலக அளவில் நமது ஸ்டார்ட்அப்புகளை எடுத்துச் செல்லுதல் என்பதும் முக்கியமானதாகிறது.

இந்தக் காலகட்டத்தின் வளர்ச்சி என்பது அறிவு, புத்தாக்கம் மற்றும் நீடித்த நிலையான தன்மை ஆகியவற்றால் உந்துதல் பெற்றதாக இருக்க வேண்டும். ஸ்டார்ட் அப் சூழல்சார் அமைப்பானது மிக விரைவாக பரிணாம வளர்ச்சி பெற்று வருகிறது. பொருளாதாரத்தின் பிரிவுகளை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் நாட்டின் வளர்ச்சிக் கட்டமானது உந்துதல் பெறுகின்றது. தனியார் முதலீட்டிற்கு ஊக்கம் அளித்தல், தூய்மையான ஆற்றலுக்கு மாறுதல் மற்றும் புத்தாக்கமான தீர்வுகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. சூழல்சார் அமைப்பின் ஒன்றிணைந்த முயற்சிகள் அனைவரையும் வரவேற்கின்ற அனைவருக்கும் உதவுகின்ற சூழல்சார் அமைப்பை மேலும் அபிவிருத்தி செய்வதில் மிக முக்கியமான பங்கினை ஆற்றும். வேலை தேடுபவர்கள் என்பதில் இருந்து வேலை வழங்குபவர்கள் என்ற தங்களின் பயணத்தில் இந்தியச் சிந்தனையாளர்களுக்கும் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களுக்கும் இது அதிகாரம் அளிக்கும்.

---

**– அனுராக் ஜெயின்**
இந்திய அரசு வர்த்தக, தொழில் அமைச்சகத்தின் தொழிற்சாலை அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறைச் செயலாளர்.

# உலகப் புத்தொழில் சூழல் அமைப்புக்குப் புதிய விடியல்

– சிந்தன் வைஷ்ணவ்
– சுமையா யூசுப்

இன்றைய சூழலில் ஜி20 நாடுகள் தொடர்பான எந்தவொரு சவாலாக இருந்தாலும், அது மிகவும் சிக்கலானதாகவும், அதில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து நாடுகளின் புதுமையான வணிக நடைமுறைகளின் ஒத்துழைப்பு தேவைப்படுவதுமாகவே இருக்கும். ஜி20 நாடுகள் அமைப்பின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள புத்தொழில் 20 என்பது புத்தொழில் நிறுவனங்களுக்கான உலகின் மிக உயர்ந்த கொள்கை அமைப்பாகும். இந்த அமைப்பு உலகில் உள்ள முக்கியமான அனைத்துப் பணிக்குழுக்களையும் உள்ளடக்கியதாகும். புத்தொழில் 20 அமைப்பின் முதன்மையான நோக்கம் என்பது ஒரு குடும்பம், ஒரு பூமி, ஒரு எதிர்காலம் என்ற இந்தியாவின் ஜி20 தத்துவத்தை மனதில் கொண்டு, அனைத்து வகையான புத்தொழில் நிறுவனங்களும் வளர்ச்சி அடைவதற்கு உகந்த சூழலை உருவாக்குவதாகும்.



ஜி20 நாடுகளின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக புத்தொழில் 20 ஈடுபாட்டுக்குழு என்ற அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற இந்தியாவின் யோசனையை உலகம் 20 என்று அழைக்கப்படும் ஜி20 நாடுகள் அமைப்பு ஏற்றுக் கொண்டதால், உலகளாவிய புத்தொழில் சூழல் அமைப்பு புதிய விடியலின் விளிம்பில் உள்ளது. உலக அளவில் 92,000 புத்தொழில் நிறுவனங்கள், 108 யுனிக்கார்ன் நிறுவனங்கள் கடந்த ஆண்டில் மட்டும் 4,000 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு முதலீடு என, உலகின் மூன்றாவது பெரிய புத்தொழில் சூழல் அமைப்பாக இந்தியாவின் புத்தொழில் சூழல் அமைப்பு உருவெடுத்துள்ள நிலையில் தான் இந்த வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இன்றைய நிலையில், இந்தியாவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் புத்தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவின் புத்தொழில் சூழல் அமைப்பை சர்வதேசமயமாக்குவதற்கு புத்தொழில் 20 அமைப்பு இதுவரை நமக்குக் கிடைக்காத மிகப்பெரிய வாய்ப்பாகும். புத்தொழில் 20 சூழல் அமைப்பு என்பது 7.5 இலட்சத்திற்கும் கூடுதலான புத்தொழில் நிறுவனங்கள், 41 ஆயிரம் தொழில் காப்பகங்கள், 21 ஆயிரம் ஏஞ்சல், வென்ச்சர் முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் பங்கு நிறுவனங்கள், 1,200க்கும் கூடுதலான யுனிக்கார்ன் புத்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப்பெரிய அமைப்புமாகும்.

ஜி20 நாடுகள் அமைப்பின் செயல்திட்டத்தில் புத்தொழில் நிறுவனங்கள் குறித்து விவாதிக்கப்படுவது இதுவே முதல்முறை அல்ல என்பதையும் இங்கு நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும். 2015ஆம் ஆண்டில் ஜி20 நாடுகளின் தலைமைப் பொறுப்பை துருக்கி ஏற்றுக் கொண்டிருந்த போது, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவுகள் ஆகியவற்றுக்கான பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டு ஜப்பான் நாடு ஜி20 நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்ற போது, இளம் தொழில்முனைவோர் கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டில் இத்தாலி தலைமையிலான ஜி20 நாடுகள் அமைப்பின் சார்பில் புத்தாக்க அணி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 2022ஆம் ஆண்டில் ஜி20 நாடுகள் அமைப்புக்கு இந்தோனேஷியா நாடு தலைமை ஏற்றிருந்த போது, டிஜிட்டல் புத்தாக்க வலைப்பின்னல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அந்த அமைப்பு இந்தியா தலைமை ஏற்ற பிறகும் தொடர்கிறது.

நடப்பாண்டில் புத்தொழில் 20 அமைப்பு உருவாக்கப்பட்டதன் தனித்துவம் என்னவென்றால், இந்த அமைப்பு அதிகாரப்பூர்வக் கொள்கை ஆவணம் மூலம் தங்களின் தேவைகள் குறித்த குரலை ஜி20 நாடுகளின் தலைவர்களுக்கு தெரிவிக்க இயலும் என்பதுதான். புத்தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை இத்தகைய அமைப்பு இதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தொழில் 20 அமைப்பின் மேலோட்டமான இலக்கு என்பது, அ. உலகப் புத்தொழில் சூழல் அமைப்புகளுக்கு இடையே கூட்டணியை ஏற்படுத்தும் வகையில் ஒருங்கிணைப்பை உருவாக்குதல், ஆ. ஒவ்வொரு நாட்டின் புத்தொழில் சூழல் அமைப்பும், அதன் வளர்ச்சிக்கு எது ஏற்றதோ அதைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தை விட்டுக்கொடுக்காமல் செய்ய வகை செய்தல் ஆகிய இரு நோக்கங்களை ஒரே நேரத்தில் அடைவதற்கான கொள்கைச் செயல் திட்டத்தை முன்மொழிவதாகும்.

புத்தொழில் 20 என்ற பணிக்குழுவின் குறிப்பிடத்தக்க நோக்கங்களில் ஒன்று பெண்கள் தலைமையில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளுக்கான ஆதரவை அதிகரிப்பதாகும். புத்தொழில் 20 அமைப்பு கவனம் செலுத்தும் இன்னொரு தளம் என்னவென்றால், நீடித்த நடைமுறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களில் பொறுப்புள்ள முறைகளில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழலை முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தித் தருவதும், ஜி20 அமைப்பின் உறுப்பு நாடுகள் மற்றும் வளரும் நாடுகளின் புத்தொழில் சூழல் அமைப்பை ஆதரிப்பதற்காக வழிகாட்டுவோரை ஊக்குவிப்பதும் ஆகும். இந்தப் பணிக்குழு உலகப் புத்தொழில் சூழல் அமைப்புகளில் இடம்பெற்றுள்ள 50க்கும் மேற்பட்ட சாம்பியன்களால் வழிநடத்தப்படுகிறது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். 2023ஆம் ஆண்டு ஜனவரி 28 மற்றும் 29ஆம் தேதிகளில் ஹைதராபாத்தில் நடைபெற்ற புத்தொழில் 20 அமைப்பின் தொடக்கக்கூட்டத்தில் ஜி20 நாடுகள் அனைத்திலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆதரவு அளித்தனர்.

புத்தொழில் 20 அமைப்பு அதன் இலக்குகளை அடைவதற்காக மூன்று பணிக்குழுக்களை அமைத்திருக்கிறது. வலிமையான புத்தொழில் சூழல் அமைப்பை ஏற்படுத்துவதற்குத் தேவையான அடித்தளம் மற்றும் கூட்டணிகள், நிதி, உள்ளடக்கிய தன்மை மற்றும் நீடித்த தன்மை ஆகிய மூன்று துறைகளில் இந்தப் பணிக்குழு செயல்படும்.

அடித்தளம் மற்றும் கூட்டணிகள் பணிக்குழுவின் முதன்மைப் பணி என்பது புத்தொழில் சூழல் அமைப்புகளுக்கு இடையே அறிவு சார்ந்த விவரங்களை பகிர்ந்துகொள்வதற்கும், ஜி20 உறுப்புகளின் புத்தொழில் சூழல் அமைப்புகளுக்கும், வளர்ந்து வரும் நாடுகளின் புத்தொழில் அமைப்புகளுக்கும் இடையிலான அறிவுசார் இடைவெளியை நிரப்புவதற்கும் உகந்த உலக சமுதாயத்தை உருவாக்குவதாகும். புத்தொழில் நிறுவனங்கள் தங்களின் புதுமையான தயாரிப்புகள் மற்றும் சேவையின் உதவியுடன் இப்போது உள்ள சந்தைகளை மேம்படுத்தவோ, தாக்கத்தை ஏற்படுத்தவோ செய்யும்; அல்லது புதுமையான வணிக மாதிரியின் உதவியுடன் இப்போது உள்ள தீர்வுகளுக்கு புதிய சந்தையை உருவாக்கவும் அறிமுகம் செய்யவும் உதவும். புத்தொழில் நிறுவனங்கள் பல்வேறு வகையான சந்தைகள் மற்றும் துறைகளில் செயல்படுகின்றன. அதன் காரணமாக அவற்றையும், எல்லைகளைக் கடந்த அவற்றின் பணிகளையும் வரையறுப்பதற்கு பல்வேறு வகையான வரையறைகளை பின்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல், புத்தொழில் நிறுவனங்கள் தாக்குப்பிடிப்பதற்கும், சந்தைகளில் உயர்வதற்கும், புதிய

சந்தைகளில் நுழைவதற்கும் உதவிகள், கூட்டாண்மைகள், கூட்டு முயற்சிகள் தேவைப்படுகின்றன. புத்தொழில் நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்றால், புதிதாக உருவாகும் சந்தைகள் சார்ந்த புத்தொழில் சூழல் அமைப்பு உருவாக்கப்படுவதுடன், அத்தகைய சூழல் அமைப்பை உலகம் முழுவதிலும் இருந்து அணுகுவதற்கான வாய்ப்புகளும் மேம்படுத்தப்பட வேண்டும். பல்வேறு நாடுகளில் உள்ள மிகப்பெரிய வணிக நிறுவனங்களுடனான கூட்டு முயற்சியில் புத்தொழில் நிறுவனங்களை உருவாக்குவது, புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான அடுத்த பரிமாணத்தை வழங்குவது மட்டுமின்றி, தற்போதைய முக்கியமான சில உலகளாவிய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான நடைமுறைகளையும் விரைவுபடுத்தும். இதைக் கருத்தில் கொண்டே, இத்தகைய திசையில் பயணிப்பதற்காக அடித்தளமும், கூட்டணிகள் பணிக்குழுவும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

புத்தொழில் சூழல் அமைப்புகளுக்கு இடையே அறிவு சார்ந்த விவரங்களை பகிர்ந்துகொள்வதற்கும், ஜி20 உறுப்புகளின் புத்தொழில் சூழல் அமைப்புகளுக்கும், வளர்ந்து வரும் நாடுகளின் புத்தொழில் அமைப்புகளுக்கும் இடையிலான அறிவுசார் இடைவெளியை நிரப்புவதற்கும் உகந்த உலக சமுதாயத்தை கூட்டாண்மையின் மூலம் உருவாக்குவது அடித்தளம் மற்றும் கூட்டணிகள் பணிக்குழுவின் முக்கிய நோக்கங்கள் ஆகும். ஜி20 நாடுகளில் உள்ள தொழில்துறையினர் புத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து தீர்வுகளை உருவாக்குதல், தொழில்துறையினருக்கும் அரசு அமைப்புகளும் புத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு சாதகமான கொள்கைகளை உருவாக்குதல், நீடித்த ஒத்துழைப்புக்காக ஒவ்வொரு நாட்டிலும் தொடர்பு மையம் ஒன்றை உருவாக்கித் தருதல் ஆகியவற்றுக்காகவே இந்த உலக சமுதாயம் ஏற்படுத்தப்படுகிறது.

புத்தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்படும் போது, அவற்றின் தேவைகளுக்கு ஏற்ற வகையில், நிதி மற்றும் முதலீட்டுத் தளங்களை உருவாக்கித் தருவதன் மூலம் புத்தொழில் நிறுவனங்கள் முதலீட்டை அணுகுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்து வழங்குவது தான் நிதிப் பணிக்குழுவின் நோக்கம் ஆகும். உலக அளவில், மண்டல அளவில், தேசிய அளவில் புத்தொழில் நிறுவனங்களின் முதலீட்டில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது தான் இந்தப் பணிக்குழுவின் பொறுப்பு ஆகும். புத்தொழில் நிறுவனங்கள் சார்ந்த முதலீடுகளில் உறுதியற்ற நிலை ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிதல், புத்தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகளைக் குறைத்தல், வேளாண்மை, சுகாதாரம், காலநிலை மாற்றம் போன்ற முக்கியத் துறைகளுக்கு முதலீடு வழங்குவதில் உள்ள சமநிலையற்ற தன்மையைப் போக்குதல், சமமான நிதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான உலகளாவிய விருப்பத்தை ஏற்படுத்தும் துறைகள், சமூகங்கள், பெரு நிறுவனங்கள் இடையே இணக்கத்தை ஏற்படுத்துதல், நிதி வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் இந்தப் பொறுப்பை நிதிப் பணிக்குழு மேற்கொள்கிறது.

நிதிப் பணிக்குழுவின் முதன்மை நோக்கங்கள் எனப்படுபவை புத்தொழில் நிறுவனங்களுக்கு, குறிப்பாக தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது, புத்தொழில் நிறுவனங்கள் நிதி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வது, புத்தொழில் நிறுவனங்கள் குறித்து உலக முதலீட்டாளர் சமூகத்திற்கு விளக்கிக் கூறி வலைப்பின்னலை ஏற்படுத்தித் தருவது, மூலதனத் திறன்களைக் கட்டி எழுப்புவதற்கான வளர்ந்து வரும் சூழல் அமைப்பில் செயல்படுத்தக் கூடிய வகையிலான ஆலோசனை செயல்திட்டங்களை உருவாக்குதல், ஜி20 நாடுகளில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்க விரும்பும் உலக முதலீட்டாளர்களுக்கான சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் செயல்திட்டத்தை உருவாக்கித்தருதல் ஆகியவற்றின் மூலம் புத்தொழில் நிறுவனங்கள் முதலீடுகளை பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்துத் தருவதாகும்.

பாலினம், இனம், வகுப்பு, மதம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல், புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவோருக்கு சம வாய்ப்புகளை உருவாக்கித் தரும் பணியில் உள்ளடக்கிய தன்மை மற்றும் நீடித்த தன்மைக்கான பணிக்குழு ஈடுபடுகிறது. சமத்துவ மற்றும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தேவையான உள்ளடக்கிய சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு உகந்த சூழலை புத்தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படுத்தித் தருவதும் இந்தப் பணிக்குழுவின் முதன்மைக் கடமைகளில் ஒன்றாகும். அதுமட்டுமின்றி, உலக

நலன் சார்ந்த நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான துறைகளில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதும், நீடித்த நடைமுறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களில் பொறுப்புள்ள முறைகளில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழலை முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தித் தருவதும் இந்தப் பணிக்குழுவின் பணியாகும்.

புத்தொழில் நிறுவனங்களைத் தொடங்குபவர்கள் அவற்றைக் குறிப்பிடத்தக்க அளவில் விரிவுபடுத்துதல், பல்வேறு வகையான அனுபவங்களின் அடிப்படையில், பல வகையான சிந்தனைகளை ஊக்குவித்தல், சமத்துவம் மற்றும் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கக்கூடிய உள்ளடக்கிய சமுதாயத்தை கட்டி எழுப்புவதற்கும், கவனம் செலுத்துவதற்கும் உகந்த சூழலை உருவாக்குதல், நீடிக்கத்தக்க மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த புதுமையான தீர்வுகளை ஏற்படுத்துவதற்கு வசதியான நீடித்த நடைமுறைகளை புத்தொழில் நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல், நீடித்த வளர்ச்சி இலக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதில் கவனம் செலுத்தும் புத்தொழில் நிறுவனங்கள் அல்லது நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான சவால்களை எதிர்கொள்ளக் கூடிய புதுமையான வணிக மாதிரிகளை உருவாக்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உலகளாவிய ஆதரவைப் பெற்றுத் தருதல் ஆகியவையும் இந்தப் பணிக்குழுவின் பொறுப்பு ஆகும்.

புத்தொழில் 20 என்ற பணிக்குழுவின் குறிப்பிடத்தக்க நோக்கங்களில் ஒன்று பெண்கள் தலைமையில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளுக்கான ஆதரவை அதிகரிப்பதாகும். புத்தொழில் 20 அமைப்பு கவனம் செலுத்தும் இன்னொரு தளம் என்னவென்றால், நீடித்த நடைமுறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களில் பொறுப்புள்ள முறைகளில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழலை முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தித் தருவதும், ஜி20 அமைப்பின் உறுப்பு நாடுகள் மற்றும் வளரும் நாடுகளின் புத்தொழில் சூழல் அமைப்பை ஆதரிப்பதற்காக வழிகாட்டுவோரை ஊக்குவிப்பதும் ஆகும்.

இந்தப் பணிக்குழு உலக புத்தொழில் சூழல் அமைப்புகளில் இடம்பெற்றுள்ள 50க்கும் மேற்பட்ட சாம்பியன்களால் வழிநடத்தப்படுகிறது என்பது குறிப்பிடப்பட வேண்டியது ஆகும். உலகளாவிய ஒத்துழைப்பின் மூலம், சர்வதேச அளவில் ஒழுங்குமுறை சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்தல், புத்தொழில் நிறுவனங்கள் வணிகம் செய்வதையும், திறமையானவர்களைக் கவர்ந்து இழுப்பதையும், உலகப் பொருளாதாரங்களில் இருந்து முதலீடு மற்றும் வாய்ப்புகளைப் பெறுவதையும் புத்தொழில் நிறுவனங்களுக்கு எளிதாக்கும் வகையில் உறுப்பு நாடுகளை ஊக்குவித்தல் ஆகிய அதிகாரங்களை கொண்ட அமைப்பாக மாற புத்தொழில் 20 அமைப்பு விரும்புகிறது.

உலகம் தொடர்ந்து பொருளாதார மற்றும் தொழில்நுட்பச் சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், உலகில் வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தை அதிகரிப்பதில் புத்தொழில் நிறுவனங்களும், தொழில் முனைவோரும் மிக முக்கியப் பங்காற்ற உள்ளனர். இந்தியா திறமை மிக்க தொழில்முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களின் தொகுப்பைக் கொண்ட புத்தொழில் சூழல் அமைப்பை வைத்திருப்பதால், மிகவும் வெற்றிகரமான புத்தொழில் நிறுவனங்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி, அவற்றின் போக்கில் பிற நாடுகளின் சூழல் அமைப்புகளும் பயணிக்கச் செய்தவற்கான வழிமுறைகளை புத்தொழில் 20 அமைப்பு ஆராய்ந்து வருகிறது.

புத்தொழில் 20 ஈடுபாட்டுக் குழுவின் முதல் கூட்டம் 2023ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை ஹைதராபாத்தில் நடைபெற்றது. அதில் 25 நாடுகளைச் சேர்ந்த 80 பன்னாட்டுப் பிரதிநிதிகளும், 100 இந்தியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு, அந்த அமைப்பின் அதிகாரப்பூர்வத் தொடக்க ஆவணத்தில் வரையறுக்கப்பட்டிருந்த நோக்கங்கள் மற்றும் முடிவுகள் குறித்து விவாதம் நடத்தினார்கள். புத்தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், தொழில் காப்பகங்கள், விரைவுபடுத்துவோர், புத்தாக்க முகமைகள், பல்முனை அமைப்புகளைச் சேர்ந்த தொழில்துறை பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதி நிதிகள் என பல்வேறு வகையான பிரதிநிதிகள் இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் ஜி20 நாடுகள் அமைப்பையும், இப்பணிகளை கண்காணிப்பதற்கான ஒன்பது நாடுகளையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

புத்தொழில் 20 ஈடுபாட்டுக் குழு தொடங்கப்பட்டதை அடுத்து, தொடக்க விழாவை நடத்திய நாடான இந்தியாவும் அதில் பங்கேற்ற நாடுகளும் தங்களின் புத்தொழில் நிறுவனச் சூழல் அமைப்புகளின் நிலைமை குறித்த விவரங்களை விளக்கிக் கூறினார்கள். ஜி20 நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் ஒன்றிணைந்ததால், ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளின் சூழல் அமைப்பின் சிறப்புகளைப் பாராட்டியதுடன், வாய்ப்புகளையும் வழங்கின. அந்த வகையில் இந்த அமைப்பின் தொடக்க நாள் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. இரண்டாவது நாள் நிகழ்ச்சியின் போது, புத்தொழில் 20 அமைப்பின் நோக்கங்கள் மற்றும் சாத்தியக் கூறுகள் குறித்த விதிகளை எவ்வாறு மேம்படுத்தலாம்? என்பது குறித்து உறுப்பு நாடுகளின் கருத்துக்களை பெறும் நோக்குடன், உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பல்வேறு குழுக்களாக இணைந்து கலந்தாய்வு நடத்தினார்கள். அதில் தெரியவந்த விஷயங்கள் அனைத்தும் வரைவுக் கொள்கை ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சிக்கிம் மாநிலத்தில் விரைவில் நடைபெறவுள்ள புத்தொழில் 20 அமைப்பின் இரண்டாவது கூட்டத்தில் வரைவுக் கொள்கை ஆவணம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

ஜி20 நாடுகளை புத்தொழில் 20 அமைப்புக்கு வரவேற்றது மட்டுமின்றி, தனித்துவமான, கீழிலிருந்து மேல் நோக்கிச் செல்லக் கூடிய பயனுள்ள வகையில் செயல்படக் கூடிய Startup20x என்ற அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. புத்தொழில் 20 அமைப்பால் உருவாக்கப்பட்டுள்ள பணிக்குழுக்கள் வல்லுநர்களைக் கொண்ட அமைப்பு ஆகும். இது தவிர, அடிமட்டத்தில் உள்ளவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, உலகப் புத்தொழில் கொள்கை வகுப்புக்கு அதனைத் தெரிவிக்கும் நோக்குடன் Start-up20x ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள புத்தொழில் சூழல் அமைப்புகளின் கருத்துக்களையும், தயாரிப்புகளையும் உலக அளவில் பகிர்ந்துகொள்ளச் செய்வதன் மூலம் இந்த இலக்கை Start-up20x எட்டும். Startup20x அமைப்பு அதன் கருத்துக்களை பகிர்ந்துகொள்வதற்காக பல்வேறு தரப்பினருடன் கூட்டாண்மையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

புத்தொழில் 20 அமைப்பின் இரண்டாவது கூட்டம் 2023 மார்ச் 18 மற்றும் 19ஆம் தேதிகளில் சிக்கிம் மாநிலத்தின் காங்டாக் நகரில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்திலும் ஜி20 நாடுகள் மற்றும் சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்ட நாடுகளில் இருந்து ஏராளமான பிரதிநிதிகள் கலந்துகொள்ள உள்ளனர். வடகிழக்கு இந்தியாவில் வளர்ந்து வரும் மற்றும் தனித்துவமான புத்தொழில் சூழல் அமைப்பை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக இந்தக் கூட்டம் அமையும். ஹைதராபாத்தில் 2023ஆம் ஆண்டு ஜனவரி 28 மற்றும் 29ஆம் தேதிகளில் நடைபெற்ற புத்தொழில் 20 அமைப்பின் தொடக்கக் கூட்டத்தில் ஜி20 அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளில் இருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட செயல்திட்டத்தின் மீது, சிக்கிம் கூட்டத்தின் வெற்றி கட்டியெழுப்பப்படும்.

இன்றைய சூழலில் ஜி20 நாடுகள் தொடர்பான எந்தவொரு சவாலாக இருந்தாலும், அது மிகவும் சிக்கலானதாகவும், அதில் சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளின் புதுமையான வணிக நடைமுறைகளின் ஒத்துழைப்பு தேவைப்படுவதுமாகவே இருக்கும். புத்தொழில் 20 அமைப்பின் மூலம் விளையும் முதன்மையான பயன்களில் ஒன்று என்னவென்றால், பிற நாடுகளின் அனுபவங்கள், வெற்றிகள், தோல்விகள் ஆகியவற்றில் இருந்து கற்க வேண்டியவை எவை? கற்கக் கூடாதவை எவை? என்பதை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பும், புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்கான சிறந்த கொள்கை மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்வதும் ஆகும். நல்வாய்ப்பாக, இன்றைய சூழலில் நாம் எதிர்கொள்ளும் எந்தவொரு சிக்கலான சவாலும், புதுமையைப் படைக்கும் புத்தொழில் நிறுவனங்களால் தீர்க்க முடியாதவை அல்ல. புத்தொழில் 20 அமைப்பின் முதன்மையான நோக்கம் என்பது ஒரு குடும்பம், ஒரு பூமி, ஒரு எதிர்காலம் என்ற இந்தியாவின் ஜி20 தத்துவத்தை மனதில் கொண்டு, அனைத்து வகையான புத்தொழில் நிறுவனங்களும் வளர்ச்சி அடைவதற்கு உகந்த சூழலை உருவாக்குவது ஆகும்.

**- டாக்டர் சிந்தன் வைஷ்ணவ்,**
இந்தியப் புத்தொழில் 20 அமைப்பின் தலைவர், அடல் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர், நிதிஆயோக், இந்திய அரசு, புதுதில்லி

**- சுமையா யூசுப்,**
புத்தாக்க தலைவர், ஊடகம் மற்றும் தொடர்பியல், நிதிஆயோக், இந்திய அரசு, புதுதில்லி

# புத்தாக்கல் தொழில் முனைவுகள்: சவால்களும் வாய்ப்புகளும்

– ஜகதீப் சக்சேனா

வேளாண் புத்தாக்கல் தொழில் முனைவுகள் இந்தியாவை அறிவுசார்ந்த தொழில்நுட்ப உந்துதலுடனான பொருளாதாரமாக மாற்றுவதில் மிக முக்கியமான பங்காற்ற உள்ளது. நவீன காலத்து விவசாயம் பழங்கால நிலைகளிலேயே இருக்க முடியாது. இப்போதுள்ள ஒரு புதுமையான வேளாண் சுற்றுச்சூழலால் இதுவரை பயன்படுத்தப்படாத சாத்தியங்களும், வாய்ப்புகளும் மிகுந்துள்ளதால், வேளாண் புத்தாக்கத் தொழில் முனைவுகள் மேம்பட வாய்ப்புகள் உள்ளன. ஜனவரி 2016இல் இந்திய அரசு "புத்தொழில்முனைவு இந்தியா செயல்திட்டம்" என்ற தலைப்பில் 19 அம்சங்களை வெளியிட்ட பின்பு புத்தாக்கத் தொழில்முனைவுகளை உருவாக்க ஒரு வலுவான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கு ஏதுவான கொள்கைகளும், ஊக்கவிப்புத் திட்டங்களும் உருவாகின. 2022 23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வேளாண் புத்தாக்கல் தொழில்முனைவுகள், பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் உருவாவது பற்றியும் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பக் கல்வி வழங்குவது பற்றியும், அதைச் செயல்படுத்துவதற்கான உதவிகள் பற்றியும் அறிவிக்கப்பட்டன.

வேளாண் புத்தாக்கத் தொழில் முனைவுகள் அறிவுசார்ந்த தொழில்நுட்ப உந்தலுடனான பொருளாதாரமாக இந்தியாவை மாற்றுவதில் மிக முக்கிய பங்காற்ற உள்ளது. இப்போதுள்ள ஒரு புதுமையான வேளாண் சுற்றுச்சூழலால் இதுவரை பயன்படுத்தப்படாத சாத்தியங்களும், வாய்ப்புகளும் மிகுந்துள்ளதால், வேளாண் புத்தாக்கல் தொழில் முனைவுகள் மேம்பட வாய்ப்புகள் உள்ளன. இந்தியாவில் உள்ள 15,60,00,000 ஹெக்டேர் அளவிலான விவசாய நிலங்கள் (2019) உலகிலேயே அமெரிக்காவை அடுத்து இருக்கும் இரண்டாவது பெரிய அளவாகும். நம் நாட்டில் பலவகையான பருவநிலையும், மண் வளங்களும் உள்ளதால் (15 வகையான விவசாயப் பருவநிலைப் பகுதிகள், எட்டு மிகப்பெரிய மண் வகைகள்) பலவகையான உணவுப் பொருட்களையும், பழங்களையும், காய்கறிகளையும் விளைவிக்க நமக்கு வாய்ப்புகள் உள்ளன. இந்தியா தற்போது பால் உற்பத்தி, பருப்புகள், சிறுதானியங்கள், சணல், அரிசி, கோதுமை, பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கிறது. சமீபத்தில் இந்தியா உலகளவில் வேளாண் மற்றும் கால்நடைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் முதன்மை நாடாக உருவெடுத்துள்ளது. ஆனால், வேளாண் துறையில் பல சிக்கல்களும், சவால்களும் உள்ளன. விவசாயம் செய்யப்படக்கூடிய நிலத்தின் அளவு குறைந்து கொண்டே போவது கவலை அளிக்கிறது. ஏனெனில் சிறிய நிலப்பகுதியில் செய்யப்படும் விவசாயத்தால் செலவினங்கள் அதிகரித்து, புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இடுபொருள்களையும், இயற்கை வளங்களையும் பயன்படுத்துவதிலும் சிரமங்கள் உள்ளன. பல விவசாயிகளுக்கு தகுந்த நேரத்தில் கிடைக்கக்கூடிய மண்வளம், வானிலை சந்தை நிலவரம், பரிந்துரைகள் சார்ந்த தகவல்கள் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன. பொதுவாக இந்தச் சிக்கல்களால் விவசாயத்தின் செலவினங்கள் கூடுவதோடு, வளங்களும் வீணாகின்றன. பயிர் நட்டங்களும் ஏற்படுகின்றன. விளைச்சலும் சிறிய அளவிலேயே காணப்படுகின்றன. வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள், புதியன படைத்தல், தொழில்நுட்பப் பயன்பாடுகள், புதிய வணிக மாதிரிகள் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு உடனுக்குடன் தகவல்களை அளித்து, இப்படிப்பட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்படுகின்றன. இந்திய அரசின் தற்போதைய முனைவுகளால் விவசாயம் மற்றும் அதை சார்ந்த துணை அமைப்புகளில் இப்போது 3000க்கும் மேற்பட்ட வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள் உருவாகியுள்ளன.

**வழிமுறைகளும், புதிய மாதிரிகளும்:**

ஜனவரி 2016இல் இந்திய அரசு “புத்தாக்கத் தொழில்முனைவு இந்தியா செயல்திட்டம்” என்ற தலைப்பில் 19 அம்சங்களை வெளியிட்ட பின்பு புத்தாக்கத் தொழில்முனைவுகளை உருவாக்க ஒரு வலுவான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கு ஏதுவான கொள்கைகளும், ஊக்கவிக்கும் திட்டங்களும் உருவாகின. இதனால், விவசாயம் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறைகளில் புத்தாக்கப் புது முனைவுகள் உருவாகின. வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள் சுமார் 60 சதவிகிதம் சில மாநிலங்களில் உள்ள முதல்நிலை, இரண்டாம் நிலை நகரங்களில் துவக்கப்பட்டுள்ளன. இந்தியப் புத்தாக்கத் தொழில்முனைவுச் சூழல் சார்ந்த ஆய்வு ஒன்றின்படி, பெங்களூரு நகரம் முதன்மையில் உள்ளது. அதற்குப் பிறகு மும்பை மற்றும் தில்லி தேசிய தலைநகர் பகுதியாகும். வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகளை அவை செயல்படும் தன்மையின்படி பலவகைகளாகப் பிரிக்கலாம் வேளாண் தொழில்நுட்பம், கால்நடைப் பராமரிப்பு, கூர்நோக்கு விவசாயம், இயற்கை வேளாண்மைச் செயல்முறைகள், ஆலோசனைகள் ஆகியன. வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள், வேளாண் பொருள்கள் உற்பத்தி பயன்பாட்டு நெடுந்தொடரில் ஏதாவது ஒரு பகுதியில் குறிப்பாகச் செயல்படுகின்றன. அந்த வகையில் அவற்றை ஏழு வகைகளாகப் பிரிக்கலாம்: வேளாண் பொருள் உற்பத்தி சந்தைத் தொடர்பு ஏற்படுத்துதல், வேளாண் இடுபொருள் திரட்டல் ஆதரவு, விவசாயத்தை இயந்திர மயமாக்கல், நீர்ப்பாசனம், கடன் மற்றும் பயிர்க்காப்பு நிதி ஆலோசனைகள் வழங்கல், தரக்கட்டுப்பாடு மற்றும் அறிமுகம் செய்தல், அறுவடைக்குப் பிறகான மேலாண்மை, கிடங்குகள் மற்றும் குளிரூட்டல் சார்ந்த போக்குவரத்து சேவைகள், கால்நடைப் பராமரிப்பு சார்ந்த சேவைகள் ஆகியன. பலவகையான புத்தாக்கல்களையும், தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி இந்தத் தொழில்முனைவுகள் விவசாயிகளுக்கு வேண்டிய தீர்வுகளை வழங்குகின்றன. விவசாயப் பொருள்கள் உற்பத்தியில் படிப்படியாக மதிப்புக்கூட்டும் பல நிலைகளில் திறன் மேம்பாட்டை ஏற்படுத்த பொருள்களையும் சேவைகளையும் அவை வழங்குகின்றன. உதாரணமாக, தானியங்கி வேளாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள், கூர்நோக்கு விவசாயம், இடுபொருள் வழங்கல், சந்தை சார்ந்த ஆலோசனைகள் வழங்கல் போன்றவை. சமீப காலங்களில் குறிப்பிடத்தக்க பிரபலமான வேளாண் துறை சார்ந்த வணிக மாதிரிகள் உருவாகியுள்ளன

‘தோட்டம் முதல் (சாப்பிடும்) தட்டு வரை’ பொருள் வழங்கு மாதிரி, இன்டெர்நெட் ஆஃப் திங்க்ஸ் அல்லது பெரும் தகவல்கள் அடிப்படையிலான புத்தாக்க மாதிரி மற்றும் நவீன சந்தைத் தொகுப்பு மாதிரி உள்ளிட்டவைகளாகும். இவைகளைப் போன்ற பல வேளாண் புத்தாக்கத் தொழில் முனைவுகள், அதிநவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயம் மற்றும் விவசாயத் தொழில்துறையின் தரத்தை மேம்படுத்த முயற்சிக்கின்றன. பொதுவாக இப்போது உருவாகிவரும் தொழில்நுட்பங்களுக்கான தகவல் எண்மப் பதிவு, மென்பொருள் ஒரு சேவையாக, இயந்திரக்கற்றல், தகவல் கூராய்வு, செயற்கை நுண்ணறிவு, இன்டர்நெட் ஆஃப் திங்க்ஸ், செயற்கைக்கோள் தகவல்கள், ஆளில்லாமல் பறக்கும் தானியங்கிக் கருவி, பிளாக் செயின் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. விவசாயப் பொருள்கள் உற்பத்தியிலிருந்து நுகர்வோர் பயன்படும் வரை உள்ள நீண்ட மதிப்புக்கூட்டு வலைத்தொடரில் உள்ள கடுமையான சிக்கல்களைத் தீர்க்க, புத்தாக்கத் தொழில்நுட்பம் பயன்படுகிறது. விவசாயம் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஏற்கத்தக்க செலவிலான தீர்வுகள், நீடித்து நிற்கும் தொழில்நுட்ப வாய்ப்புகள் ஆகியவற்றைப் மையப்படுத்தி, இம்முனைவுகள் செயல்படுகின்றன. அவர்களின் செயல்முறைகள் நிரூபிக்கப்பட்டவுடன் அவை விரும்பப்பட்டு, இத்தொழில்முனைவுகள் வாடிக்கையாளர்களைப் பெற்று வருமானம் திரட்டுகின்றன.

புதிய முனைவுகள் பணம் சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் உற்பத்திச் சேவை அளவை உயர்த்துவார்கள். ஆனால், எல்லா புதிய முனைவுகளும் இப்படி உற்பத்தியைப் பெருக்க மாட்டார்கள். பல வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள் நீண்ட காலத்திற்கு ஆரம்ப நிலைமையிலேயே இருப்பார்கள். பிறகு, அவர்கள் செயலிழந்து போகலாம். வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகளின் உற்பத்தியைப் பெருக்குவது சுலபமல்ல. குறிப்பாக அவர்களுடைய கண்டுபிடிப்புகளை, பொருள்களை, சேவைகளை கள நிலைமையில் நிரூபிக்க வேண்டும். அதற்கான அவர்களைச் சாராத பல காரணிகள் உள்ளன. ஆகவே, பெரும்பாலான வேளாண் புத்தாக்கத்

தொழில்முனைவுகளுக்கு நீண்டகால உருவாக்கல் சூழ்நிலையும், நிதி உதவியும் தேவை.

**கொள்கைகளும், ஊக்குவித்தலும்:**

வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள் தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு நிதி வழங்கும் நிறுவனங்கள், தொழில் வியாபார ஆதரவு நிறுவனங்கள் புத்தாக்கக் கண்டுபிடிப்பைப் பொருளாக அல்லது சேவையாக உருவாக்க கரு அமைப்புகள், துரிதப்படுத்தும் அமைப்புகள் போன்ற பலர் தேவைப்படுகின்றனர். வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள் சிறப்பாகத் தோன்றி வளர இந்திய அரசு பல முனைவுகளை மேற்கொண்டுள்ளது. 2015–16இல் ஆய்வு மற்றும் மேம்பாடு உள்ளிட்ட நிறுவனங்களில் இந்திய அரசு வேளாண் வணிகக் கரு மையங்கள் நாட்டின் பல பாகங்களில் அமைக்கப்பட்டன. இந்த அமைப்புகளில் வேளாண் சார்ந்த புத்தாக்கத் தொழில்முனைவோருக்கு அவர்களின் உத்தியைப் பொருளாகவும் சேவையாகவும் மாற்றுவதற்கும், வியாபாரத்தை மேம்படுத்துவதற்கும் தொழில்நுட்பம், நிதி, வழிகாட்டுதல் மற்றும் வலைத்தொடர்பு அமைக்க உதவி செய்கிறார்கள். இந்தக் கரு உருவாக்கக் கால கட்டம் ஆறு மாதங்களிலிருந்து 36 மாதங்கள் வரை கூட இருக்கலாம். அந்தக் காலகட்டத்தில் அவை தங்களுடைய புத்தாக்கங்களைப் பயன்படுத்துவோருக்கு நிரூபித்து, அதை ஒரு வணிக மாதிரியாக வடிவம் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கி நுகர்வோரிடமிருந்து வருமானத்தைப் பெறுவர். இந்தியாவில் தற்போது 100க்கும் மேற்பட்ட வேளாண்துறை சார்ந்த கரு உருவாக்கல் அமைப்புகள் உள்ளன. அவை பெரும்பாலும் கல்வி மற்றும் ஆய்வுக் கூடங்களான இந்திய வேளாண் ஆய்வுக்கழகம், வேளாண் பல்கலைக்கழகங்கள், புதியன துவக்கு இந்தியா, அடல் புத்தாக்க இயக்கம் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, இந்திய வேளாண் அமைச்சகம் மற்றும் விவசாயிகள் நல அமைப்புகள் சார்ந்து அமைக்கப்பட்டிருக்கின்றன. 2019–20இல் இந்தியாவின் வேளாண் கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறை தன்னுடைய முதன்மைத் திட்டமான தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தோடு “புத்தாக்கல் மற்றும் வேளாண் தொழில்முனைவுத் துறையை உருவாக்கி இணைத்திருக்கிறது. இந்த திட்டத்தின்கீழ், குறிப்பிட்ட வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகளுக்கு அவர்களின் உத்தியை மேம்படுத்த முதற்கட்டமாக ரூ.5 இலட்சம் வரை நிதி உதவி வழங்கப்படும். அப்படி உருவாக்கப்பட்ட உத்திக்குச் செயல்வடிவம் கொடுக்க ஆரம்ப கட்ட மூலதன உதவியாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும். இந்தத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த, ஐந்து அறிவார்ந்த கூட்டாளிகளும், 24 வேளாண் வணிகக் கரு உருவாக்கல் மையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. நாடெங்கிலும் ஊடகம் மூலம் பரப்புரைக்குப்பின் கடுமையான தேர்வு முறையில் இந்த அறிவார்ந்த கூட்டாளிகளாக ஐதராபாத்திலுள்ள மேனேஜ் (MANAGE), ஜெய்ப்பூரிலுள்ள நேம் (NAM), புதுடெல்லியிலுள்ள இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் (IARI - Pusa), தார்வாடிலுள்ள வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் (UAS), ஜோர்ஹாட்டிலுள்ள அஸ்ஸாம் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. இது போலவே, வேளாண் புத்தாக்கக் கரு உருவாக்க மையமாக இந்தியாவிலுள்ள இந்திய வேளாண் ஆய்வுக்கழக நிறுவனங்கள் ஐஐ வேளாண் பல்கலைக்கழகங்கள் ஐஐ இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள், இந்திய மேலாண்மைக்கழகங்கள் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. வேளாண் புத்தாக்கக் கருக் கொண்டுள்ளவர்கள், தேசிய அளவிலான ஊடகத் தகவல் சேமிப்பு மூலமும், கடுமையான தேர்வு முறையின் மூலமும் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். உணவுப் பொருள்கள் பதனிடுதல், உணவுத் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, இன்டர்நெட் ஆஃப் திங்க்ஸ், துல்லியமான விவசாயம், எண்ம விவசாயம் போன்றவற்றின் மேம்பாட்டிற்காக விவசாயம் மற்றும் பிற துணைத்துறைகளில் உள்ள வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள் 1100க்கும் மேற்பட்டவை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆதரவு அளிக்கப்படுகிறது. இது அல்லாமல், வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகளை ஊக்குவிக்க விவசாயம், வேளாண்மை விவசாயிகள் நல அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் ‘வேளாண் ஹாக்கதான் என்ற ஒரு நிகழ்வை நடத்தி அதில் வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகள் மூலம் தற்போது இந்தத் துறைகளில் உள்ள சவால்களுக்குத் தீர்வுகளை வெளிப்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்திய வேளாண்மை இன்று எதிர்கொண்டிருக்கும் பெரிய சவால்களுக்கு இந்த வேளாண் தொழில் முனைவுகள் புதுமையான தீர்வுகளை அளிக்கின்றன. இந்திய விவசாயம் எதிர்கொள்ளும்

மிகப்பெரிய சவால்களுக்கு இந்த இளம் தொழில்முனைவோர் இன்றைய தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை வழங்குகிறார்கள். இப்படிப் பரிசு பெற்ற புத்தாக்கக் கருத்துக்களுக்கு முதன்மையான கரு வளர்ப்பு ஆதரவும், அதற்குண்டான நிதியும், மூலதன நிதியும் வழங்கப்படுகின்றன. இது அல்லாமல், முக்கியமான தொழில் வேளாண் புத்தாக்கலுக்குப் பரிசுகளும் அளிக்கப்படுகின்றன. விவசாயத் துறையில் சிறந்த வெற்றி பெற்றுள்ள ஹாக்கதான்களை அடுத்து, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் உணவு பதனிடும் தொழில்களிலும் இப்படிப்பட்டப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இந்தியாவின் தலைமை வேளாண் ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனமான இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் நாடெங்கிலும் 50 வேளாண் வணிகக் கரு மேம்பாட்டு மையங்களை அமைத்துள்ளது. 2016 17இல் தேசிய வேளாண் புத்தாக்க நிதியம் திட்டத்தின்கீழ் இந்திய வேளாண் ஆய்வுக்கழக வேளாண் வணிகக் கரு மேம்பாட்டு மையங்கள், வேளாண் புதிய முனைவுகளுக்கும், வேளாண் சார்ந்த புதிய தொழில்முனைவுகளுக்கும் பல சேவைகளை அளிக்கிறது. வேளாண் துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட எண்மத் தொழில்நுட்பத் தொழில் முனைவுகளுக்கும் ஆதரவுகள் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விவசாயிகளின் வேளாண் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு திறன் மேம்பாட்டையும், இலாபத்தையும் மேம்படுத்துகின்றனர். இந்த மையங்கள் ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் தொடர்புகள், வணிகம்சார் திட்டமிடல், மேலாண்மை சார்ந்த வழிகாட்டுதல்கள், விற்பனை, தொழில்நுட்பம் மற்றும் நிதிசார்ந்த நிலைமைகளில் ஆதரவு அளிக்கின்றன. இந்திய வேளாண் ஆய்வுக்கழக வேளாண் வணிகக் கரு உருவாக்கல் மையங்கள் தங்களிடம் உள்ள தொழில்நுட்பங்களை, இந்தப் புத்தாக்க நிறுவனங்கள் பொருளாகவோ, சேவையாகவோ மாற்ற அவர்களுக்கு உரிமையும் வழங்குகிறார்கள். இதற்காக தொழில்முனைவோருக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை நாடெங்கிலும் பிரபல தேசிய நிறுவனங்களில் 25 தொழில்நுட்பப் புத்தாக்க மையங்களை அமைத்திருக்கிறது. இதில் மூன்று மையங்கள் குறிப்பிட்ட இன்டர்நெட் ஆஃப் திங்க்ஸ், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், ஆய்வு முடிவுகளை புதிய பொருள்களாகவும் சேவைகளாகவும் மாற்றவும் உதவி செய்யும். ரோப்பரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் ஒரு மையம் இன்டர்நெட் ஆஃப் திங்க்ஸ் சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றைப் பகிர்ந்து வருகின்றன. கரக்பூரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் மையம், பயிர் மற்றும் மண்வளப் பாதுகாப்பு சார்ந்த ஆய்வுகளைச் செய்யும். விவசாயத்தில் மண்வளத்தைப் பாதுகாக்கவும், பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளிக்கவும் பயன்படும் வகையில் தானியங்கிப் பறக்கும் கருவிகள் தொடர்பாக மேற்கொண்டுள்ள ஆய்வுகளை மும்பையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழக மையம் பகிர்ந்து கொள்கிறது. விவசாயக் கள நிலவரத் தகவல்களைத் திரட்டி அவற்றை ஆய்வு செய்து, சரியான முடிவுகளை மேற்கொள்ளவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்டத் தொழில்நுட்பங்களில் இப்போதுள்ள வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவு அமைப்புகள், தனிப்பட்ட விவசாயிகளுக்கும் குழுவிற்கும் தகுந்த வணிக மாதிரிகளை வழங்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. 2016முதல் இந்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை மேலோட்டமான புத்தாக்கங்களை உருவாக்கி மேம்படுத்தும் ஒரு தேசிய முனைவை உருவாக்கி, அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முனைவுகளையும், புத்தாக்கத் தொழில்முனைவுச் சூழலையும் நாட்டில் உருவாக்கியுள்ளது. ஒருவருக்குள்ள சிறந்த கண்டுபிடிப்பை தொழில்முனைவாக மாற்றி, துவக்கம் முதல் கடைசியாக பொருள்கள் சந்தையில் நுகர்வோருக்கு விற்கப்படும் வரை பலவகையான உதவிகளைச் செய்கிறது. உதாரணமாக, இந்த அமைப்பின் பிரயாஸ் முனைவில் புதியன கண்டுபிடிப்போருக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆதரவை அளித்து, அவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை ஒரு பொருளாக உருவாக்கும் வரை ஆதரவு அளிக்கிறது. இந்த அமைப்பின் பிற பிரிவுகள் இப்புதிய தொழில்முனைவுகள் சிறந்த உற்பத்தியாளராக உருவாகவும், ஆரம்பக் கட்டத் திலிருந்து அவர்களுக்கு நிதியுதவி அளித்து உலகளவில் சிறக்கவும் அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பு, விவசாயம் சார்ந்த 36தொழில்நுட்ப வணிகக் கரு மேம்பாட்டு மையங்களை நாடெங்கிலும் உள்ள இந்திய விவசாய ஆய்வுக் கழகத்தின் நிலையங்களிலும், வேளாண்

பல்கலைக்கழகங்களிலும் அமைத்திருக்கிறது. இந்திய அரசு, கடந்த ஆண்டு அடல் புத்தாக்க இயக்கம் ஒன்றைத் துவக்கி, 10000 அடல் தொழில் முனைவு அடிப்படைப் பட்டறைகள், 101 அடல் கரு உருவாக்கு மையங்கள், 50 அடல் சமூகப் புத்தாக்க மையங்கள் மற்றும் அடல் புதிய இந்தியா சவால்கள் திட்டத்தின்கீழ் 200 தொழில்முனைவுகளுக்கு ஆதரவுகளை வழங்க முயன்றுள்ளது. புதியன துவங்கு இந்தியா, எழுந்து நில் இந்தியா போன்ற திட்டங்களும் வேளாண்துறையில் உள்ள புத்தாக்கப் புது முனைவுகளுக்கு நிதி வசதி அளிக்கின்றன. அவர்களுக்கு வழிகாட்டி, கரு மேம்பாட்டு மையம் அமைத்து, ஆரம்ப கட்டத்திலேயே உதவிகள் அளிக்கப்படுகின்றன.

**புதியன கண்டுபிடிப்பும், முதலீடுகளும்:**

2023ஆம் ஆண்டு, சிறுதானியங்களுக்கான பன்னாட்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்தியத் தொழில்முனைவோர் உலகச்சந்தையில் நுழைய நல்ல வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. 500க்கும் மேற்பட்ட தொழில்முனைவுகள் இந்தியாவில் சிறுதானியங்கள் சார்ந்த மதிப்புக்கூட்டல் தொடர்வலையில் ஈடுபட்டுள்ளனர். இது அல்லாமல், இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் மற்றும் இந்திய சிறுதானியங்கள் ஆய்வுக்கழகம் ஆகியவை இணைந்து 250 புத்தாக்கத் தொழில் முனைவுகளுக்கு கரு மேம்பாட்டு உதவி வழங்கிவருகிறது. நாட்டில் சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அரசு இந்த புதிய தொழில்முனைவுகளுக்கு சிறுதானியங்களைக் கொண்டு புதிய உணவு பண்டங்களையும், மதிப்புக் கூட்டிய பொருள்களையும் உற்பத்தி செய்ய உதவி செய்கிறது. இதுவரை இப்படிப்பட்ட 66 தொழில்முனைவுகளுக்கு, ரூ.6.25 கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக 25 தொழில்முனைவுகளுக்கு கூடுதல் நிதி வழங்கப்படுகிறது. மத்திய அரசின் 2022–23க்கான நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பக் கல்வியை வழங்கவும், அவற்றைச் செயல்படுத்தவும் தனியார் பொதுத்துறை கூட்டு முயற்சிகளில் வேளாண் புத்தாக்கத் தொழில்முனைவுகளை உருவாக்கவும் நிதி ஒதுக்கப்பட்டது. வேளாண் தொழில்நுட்பத் தொழில்முனைவுகளை துவங்க கொள்கை முடிவுகளும், அரசாங்க செயல்திட்டங்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன. வேளாண் தொழில்நுட்பத் தொழில்முனைவுகள் மற்றும் கிராமப்புற வேளாண் தொழில்முனைவுகளுக்கு நிதி வசதிகள் வழங்கிட நாபார்டு அமைப்பும், பிற நிதிவழங்கு அமைப்புகளும் இணைந்து செயல்படுகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் உணவு உற்பத்தி, விவசாயத்திற்கான பொருள்களை வாடகைக்கு கொடுக்கும் சேவைகள், தொழில்நுட்பச் செயல்பாடுகள் சார்ந்த தொழில்முனைவுகளுக்கு நிதி உதவி அளிக்கிறது. கிராமப்புறங்களில் வேளாண் தொழில்நுட்பத் தொழில்முனைவுகளைத் துரிதப்படுத்துவதற்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்துறையில் திறமையான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கவும், விளை பொருள்களின் அளவை உயர்த்தவும், சந்தைத் தொடர்புகளை ஏற்படுத்தவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. அதிநவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, வேளாண் செயல்பாடுகளில் உற்பத்தித் திறனையும், இலாபத்தையும் மேம்படுத்தத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 2022–23ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையின்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் தனியார் முதலீடாக இந்த வேளாண் தொழில்முனைவுகள் 6600 கோடி திரட்டியுள்ளன. இது ஆண்டொன்றுக்கு 50 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகிறது. நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆய்வு மற்றும் கல்வி நிறுவனங்களும் வேளாண்துறையில் தொழில்முனைவுகளை ஊக்குவிக்க வணிகக் கரு உருவாக்கு மையங்களை அமைக்க வேண்டுமென்று, புதுடெல்லியிலுள்ள வேளாண் தேசியக்கழகம் பரிந்துரைத்துள்ளது. இவைகளையெல்லாம் திறமையாக இணைக்க, ஒரு கரு உருவாக்குக் கண்காணிப்பு மையமும் அமைக்கப்பட உள்ளது. இதனால், நாட்டிலுள்ள கரு உருவாக்கு மையங்கள் தங்களுடைய எண்ணங்களையும், அரிய வளங்களையும் பகிர்ந்து கொள்ளலாம். ஆத்ம நிர்பார் பாரதத்தை அடைய இந்த வேளாண் புத்தாக்கத் தொழில் முனைவுகள் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்குவார்கள்.

---

**–டாக்டர். ஜகதீப் சக்சேனா,**
முன்னாள் முதன்மை ஆசிரியர்,
இந்திய வேளாண் ஆய்வுக்கழகம்,
புதுடெல்லி.

# சந்தாதாரர் ஆவதற்கான மாதிரிப்படிவம்

# புதிய சந்தாதாரர் / சந்தா புதுப்பிப்பு / முகவரி மாற்றம்

நான் சந்தா செலுத்த விரும்புகிறேன்:

Yojana (ஆங்கிலம்)/ Kurushetra (ஆங்கிலம்)/ Ajkal (இந்தி) ஆகிய இதழ்கள் ஒவ்வொன்றிற்கும் ஓராண்டிற்கு ரூ.230/ இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.430/மூன்று ஆண்டுகளுக்கு ரூ.610/

Balbharathi இதழுக்கு சந்தா ஓராண்டிற்கு ரூ.160/ இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.300/ மூன்று ஆண்டுகளுக்கு ரூ.420/

நீங்கள் சந்தா செலுத்த விரும்பும் இதழின் பெயரையும், சந்தா செலுத்தும் கால அளவையும் குறிப்பிடவும்.

DEMAND DRAFT /POSTAL ORDER/MONEY ORDER NO.-----------------------------------------------------

DATE:-------------------------

சந்தாதாரரின் பெயர்: -----------------------------------------------------
முகவரி:----------------------------------------------------------------------------------------------------------------
அஞ்சல் குறியீட்டு எண்:----------------------- கைபேசி எண்:---------------------------------

சந்தாதரர் வகை: ஆசிரியர்/மாணவர்/நிறுவனம்/மற்ற வகையினர் (டிக் செய்யவும்)

சந்தா கட்டணத்தை வரைவோலையாக (DEMAND DRAFT) செலுத்துவோர், ADG (I/C), PUBLICATIONS DIVISION, NEWDELHI 110003 என்ற பெயரில் புதுதில்லியில் மாற்றத்தக்கதாக எடுத்து, ADG (I/C), PUBLICATIONS DIVISION, MINISTRY OF INFORMATION AND BROADCASTING, ROOM NO.48 53, SOOCHANA BHAVAN, CGO COMPLEX, LODHI ROAD, NEWDELHI 110003 முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

முதல் இதழ் சந்தாதாரருக்கு வந்து சேர 4 முதல் 6 வாரங்கள் ஆகலாம். சந்தா புதுப்பிப்பு/முகவரிமாற்றம் ஆகியவற்றிற்கு உங்கள் சந்தா எண்ணை மறவாமல் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

இணையதளம் வாயிலாகவும் சந்தா செலுத்தலாம்.

இணையதள முகவரி: http://publicationsdivision.nic.in

திட்டம் இதழுக்கான சந்தா தொகை ஓராண்டுக்கு ரூ.230/

திட்டம் இதழுக்கு சந்தா செலுத்துவோர் சந்தா கட்டணத்தை வரைவோலையாக (DEMAND DRAFT) ASSITANT DIRECTOR, THITTAM, PUBLICATIONS DIVISION, CHENNAI என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்கதாக எடுத்து சேர்த்து உதவி இயக்குநர், திட்டம், வெளியீட்டுப்பிரிவு, A Wing, இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை 600090 என்ற முகவரிக்கு இந்தப்படிவத்தையும் நிரப்பி வரைவோலை/அஞ்சல் ஆணை ரசீது, பணவிடை ரசீதுடன் அனுப்ப வேண்டும்.

திட்டம் இதழுக்கு இணையதளம் வாயிலாகவும் சந்தா செலுத்தலாம்

இணையதள முகவரி: http://publications <HTTP://PUBLICATIONS>division.nic.in

திட்டம் இதழ் தொடர்புக்கு தொலைபேசி எண்: 044-24465382. email முகவரி: editorthittam@gmail.com

2ஆம் பக்க தொடர்ச்சி




**வெளிப்படைத்தன்மை:**

வலைதளம்சார் அரசுப் பொதுச்சந்தை என்பது பொதுவான ஒரு அமைப்பாகும். அதில் அனைவரும் தகவல் பெறுவது வெளிப்படைத்தன்மையுடன் நிகழ்கிறது. விற்பவர்கள், வாங்குபவர்கள், பொருட்கள், சேவைகள் போன்ற எல்லாத் தகவல்களையும் சம்பந்தப்பட்டவர்கள் எளிதாகப் பெறலாம். அது அல்லாமல், இந்த வலைதளத்தில் உள்ள தகவல்களை எப்படிப் பயன்படுத்தி ஒரு முடிவு எடுப்பது என்பதற்கும் உதவிகள் வழங்கப்படும்.

**எல்லோரையும் உள்ளடக்கிய சேவை:**

வலைதளம்சார் அரசுப் பொதுச்சந்தையின் எல்லோரையும் உள்ளடக்கிய சேவை என்பது பன்முகத்தன்மை கொண்டதாகும். இந்த தளத்தை அனைத்துவிதமான விற்பனையாளர்களும் எளிதாக நம்பி பயன்படுத்துவதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், சிறு மற்றும் மத்திய தரத் தொழில் முனைவுகள், மகளிர் தொழில் முனைவோர், புத்தாக்கத் தொழில் முனைவுகள் மற்றும் கைவினைஞர்கள் உள்ளிட்ட விளிம்புநிலை மற்றும் அதிக சேவைகள் பெறாதவர்களையும் உள்ளடக்கியதாகும்.

**திறமையான செயல்பாடு:**

துவக்கம் முதல் இறுதிவரை எல்லா செயல்களும் ஒரே வலைதளத்தின் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுவதால் அரசு வலைதளம்சார் பொதுச்சந்தை அரசின் பொதுக் கொள்முதல் செயல்பாடுகளில் நேரடி மனிதத் தொடர்பு இல்லாமல் நிகழ்வதால் திறன் மேம்பட்டிருக்கிறது.

அரசு வலைதளம்சார் பொதுச்சந்தையில் 1,50,000க்கும் மேற்பட்ட தபால் அலுவலகங்கள் மற்றும் 5.2 இலட்சத்திற்கும் மேற்பட்ட கிராம அளவிலான தொழில்முனைவோர் எண்ம முறையில் இணைக்கப்பட்டு அவர்கள் இருக்கும் இடம் நோக்கி சேவைகள் வழங்கப்படுகின்றன.

தானியங்கி முறையாலும், எண்மச் செயல்பாடுகளாலும் அரசு வலைதளம்சார் பொதுச் சந்தையால் சிறப்பான செயல்பாடுகளும், சிறப்பான தகவல் பரிமாற்றங்களும், மேம்பட்ட வெளிப்படைத் தன்மையும், வணிகச் செயல்முறைகள் எளிதாகச் செய்யப்பட்டும், பங்கு பெறுவோரின் நம்பிக்கை பெற்றும் இருப்பதால் இப்போது இத்தளத்தில் அதிக போட்டி ஏற்பட்டு, மிகுந்த சேமிப்பு கிடைத்துள்ளது. இந்த முன்னேற்றங்களால் அரசு வலைதளம்சார் பொதுச்சந்தையில் பொருள்களை விற்கவும் வாங்கவும் நேரம் குறைந்துள்ளதுடன், வாங்குவோருக்கும் விலை குறைந்து விற்பவர்களுக்கும் விரைவில் பணம் கிடைக்கிறது. இதனால் எளிதாக வணிகம் செய்யும் திறன் மேம்பட்டு, இந்தியாவின் பொதுக் கொள்முதலின் தரம் மிகவும் உயர்ந்துள்ளது. •

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: 1st Week of Every Month
Posted on : 7th April 2023
Posted at Egmore RMS / 1 Patrika Channel

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/2021-2023
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2021-2023




Published by Shri Sanjay Ghosh, Senior Editor/ Deputy Director on the behalf of DG, Publications Division, Ministry of information and Broadcasting, Govt. of India.

and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., No. 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 14. Ph: 044-28482441.

Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 24465382/24917673.